

# மேலோர் வட்டம்

செ. யோகநாதன்

வசந்தம் புத்தக நிலையம்
405, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

# மேலோர் வட்டம்

செ. யோகநாதன்

சிறந்த படைப்பாளியான
செ கதிர்காமநாதனின் நினைவுக்கு

சத்யபாரதி—5
முதற்பதிப்பு—மார்கழி 1993.

விற்பனை உரிமை:

காந்தளகம்

4, முதல் மாடி, ரகிசா கட்டிடம்,
834, அண்ணா சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 83 45 05.

அட்டை ஓவியம்: ஓவியர் முருகேசன் மதுரை.

'மேலோர் வட்டம்' குறுநாவலும் சிறுகதைகளும்'
செ. யோகநாதன் / உரிமை: ஜெயபாரதி யோகநாதன்
சத்யபாரதி பதிப்பகம், கோடம்பாக்கம் / அச்சமைப்பு:
சித்ரா பிரிண்டோ கிராபி, 24, பொன்னுசாமி தெரு,
இராயப்பேட்டை, சென்னை-600014.
பக்கங்கள்: 144 / விலை இருபது ரூபாய்.

# இன்னொரு உலகம்

எனக்குத் தெரிந்த ஒரு நண்பர்—அரசபணியில் இருந்தார். நேர்மையாளர் துணிச்சல் மிக்கவர். வறுமைநிலையிலிருந்து திறமையாய் படித்து முன்னேறி உயர்நிலைக்கு வந்தவர். தனது பணியை சாதாரண மக்களின் உயர்வுக்காக அர்ப்பணித்து உழைத்தவர். அவரது செயல்கள் அவரது சகாக்களுக்கும் உயரதிகாரிகளுக்கும் பிடிக்கவில்லை. அரசியல்வாதிகளுக்கும் பிடிக்கவில்லை. ஆளும் வர்க்கத்துக்குரிய குணாம்சங்கள் அவருக்கு இல்லையென்று இவர்களெல்லாம் குறைபட்டுக் கொண்டார்கள். சமயம் வாய்க்கும் போதெல்லாம் நண்பரை அவர்கள் ஒதுக்கி வைத்தார்கள். ஆனால் இந்த நண்பருக்கு பொதுமக்கள் உற்ற துணையாக இருந்தனர். இவர்களின் அன்புக்கும் பாராட்டுதல்களுக்கும் பாத்திரமாயிருந்தார் இவர்.

பொதுமக்களின் மத்தியில் நண்பருக்கு வளர்ந்த செல்வாக்கு, அரசியல்வாதிகளுக்கு பிடிக்கவில்லை. தமது வெறுப்பை இவர்கள் வெளிப்படையாகத் தெரிவித்தனர். அடிக்கடி நண்பரைப்பற்றி உயரதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் முறையிட்டனர். கடைசியில் ஏதோ ஒருவிதத்தில் என் நண்பரின் பதவி பறிபோயிற்று. அதிகாரிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் தாங்கமுடியாத சந்தோஷம். வேண்டத்தகாத ஒருவனை தமது கூட்டத்திலிருந்து விரட்டி விட்டதாக சந்தோஷம் கொண்டனர்.

இதேவேளையில், ஒரு உத்தம அதிகாரி பழிவாங்கப் பட்டதற்காக பொதுமக்கள் கிளர்ந்தெழுந்தனர். மனுக் களும், தந்திகளும் அமைச்சகத்துக்குப் பறந்தன.

ஆனாலும் என்ன? இந்தப் பொதுமக்களின் குரல் காற்றோடு கரைந்து போயிற்று, ஒரு துரும்பளவுகூடப் பெறுமதியின்றி.

உண்மையில் சொன்னால் இந்த ஆளும் வர்க்கம்-இந்த மேலோர் வட்டந்தான் எல்லாவற்றையும் தீர்மானிக்கிறது நாம் வாழுகின்ற அமைப்பிலே. ஆனால் வெளியிலோ எல் லாமே மக்களால் தீர்மானிக்கப்படுகிறார்போல தோற்றம். மாயத்தோற்றம்.

இந்த 'மேலோர் வட்டம்' பற்றிய உள்ளார்ந்த சித்திரங்களை இத்தொகுதியிலுள்ள கதைகளில் நீங்கள் பார்க்கலாம். இவையெல்லாம் உண்மையின் தரிசனங்கள்.

எனது எழுத்து, வாழ்வு ஆகியன பற்றிய 'சுபமங்களா' பேட்டியையும் முழுமையாக இந்த நூலில் இணைத் துள்ளேன்.

இந்தத் தொகுதியை அழகுற அச்சமைத்த அச்சகத்தின ருக்கும், அட்டைப்பட ஓவியத்திற்குரிய ஓவியர் திரு. முருகேசனுக்கும் என் நன்றிகள் உரியன.

செ. யோகநாதன்

சென்னை-24
9-9-93.

# என் எழுத்தே,
# என் அரசியல்
# என் ஆயுதம்!

"மௌனிக்கு அவரது வீடே உலகம். எனக்கோ உலகமே வீடு நான் ஒரு கிராமத்துக்காரன். நான் பல்கலைக்கழகத்தில் படிக்கத்துவங்கிய பிறகுதான் என் கால்கள் காலணிகளைக் கண்டன. பேண்ட்' கிடைத்ததும் இந்த பிராயத்தில்தான். இது எனது உலகம். பிறகு கல்லூரி ஆசிரியனாய் நிறைய மாணவர்கள் மத்தியில் அவர்களின் அத்யந்த நண்பனாக பழகிடும் வாய்ப்பு. பின் இலங்கை நிர்வாக சேவையில் முக்கிய அதிகாரியாய் பலரும் போகத்தயங்கிய இடத்திற்கெல்லாம் சென்று அரசுப்பணி யாற்றியிருக்கிறேன். இதோ இப்போது பத்து வருடமாக தமிழ்நாட்டு மண்ணில் பரபரப்பு நிறைந்த வாழ்வு. என் அனுபவத்தில் கால்வாசியைக்கூட நான் இன்னும் எழுதி முடிக்கவில்லை.

'மௌனி குறைவாக எழுதியதால் அவர் எழுத்தில் அடர்த்தி அற்புதமாய் அமைந்திருந்தது. நான் நிறைய எழுதுவதால் நீர்த்துப்போன எழுத்துக்களை எழுது கிறேன்' என்பது நகரத்தில், தனிமையிலிருக்கிற சித்தம் போக்கு சிவன் போக்கு மனம் படைத்தவர்களின் சிந்தனை யாக இருக்கலாம். மக்கள் திரளோடு சேர்ந்திருக்கிற எவருக்கும் இந்த ஆபத்து இல்லை.

நான் எழுதத் தொடங்கிய நாளிலிருந்து பெற்ற அனுபவங்களையும் என் மனதில் தேங்கியுள்ள கருத்துக்களையும் எழுத, எழுத மேலும் புதியவை வந்து மனதை நிறைக்கின்றன. எனது பரந்த உலகத்தை இன்னமும் இன்னமும் எனது படிப்பு செழுமைப்படுத்துகிறது. இந்த அனுபவச் சேகரிப்போடு ஒப்பிடுகையில் நான் எழுதியுள்ளவை மிக மிகக் குறைவே.

மார்க்ஸிம் கார்க்கி, நிக்கலாய் ஆஸ்ராவொஸ்கி, கிருஷன்சந்தர், சரத்சந்திரர், காதரின் ஆன்போர்ட்டர், இவானி இவ்டுஷாங்கோ, மகாகவி பாரதி, கு.அழகிரிசாமி, ஆர். சூடாமணி, செ. கணேசலிங்கன் இவர்களே என் ஆதர்ச படைப்பாளிகள். இவர்களின் எழுத்துக்களையே நான் வேதம்போல், திரும்பத் திரும்பப் படிக்கிறேன்.

சுந்தர லட்சுமி—

எழுத்தாளன் என்ற ஒரே தகுதியை வைத்து என் மீது காதல் கொண்டு கருத்தொருமித்து என்னைக் கைத்தலம் பற்றிய பெண்.

1964-ல் வந்த 'யோகநாதன் கதைகள்' முதல் நான்கு தொகுதிகள். 1983 வரை ஈழத்தில். 1984 முதல் 1993 வரை தமிழ்நாட்டில் முப்பதெட்டு புத்தகங்கள் மூன்று புத்தகங்கள் அச்சில். சுந்தர லட்சுமி மட்டும் எனக்கு மனைவியாக வாய்த்திராவிட்டால் நான் ஒரு புத்தகமாவது—ஒரே ஒரு புத்தகமாவது எழுதியிருப்பேனா என்பது சந்தேகம்'' என்று பெருமிதத்தோடு கூறும் செ. யோகநாதன், ஈழத்துப் படைப்பாளிகளில் முக்கியமானவர். இவரின் சில படைப்புகள் ருஷ்யன், ஜெர்மன், சிங்களம், தெலுங்கு ஆகிய மொழிகளில் உடலெடுத்து உள்ளன. 'சஞ்சயன்' என்ற பெயரில் மொழிபெயர்ப்பிலும் தீவிர கவனம் செலுத்தும் செ. யோகநாதனின் வயசு 48. இவரின் புத்தகங்களும் இதுவரை 48. கழிந்த பத்தாண்டு காலமாய் தமிழகத்தில் புலம் பெயர்ந்த ஒருவருக்கான சகல பிரச்னை

களையும் சந்தித்தபடி, எழுதியும் வாழ்ந்தும் வரும் யோக நாதனின் மனைவியும், குழந்தைகளும் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். தன் தமிழையே ஈழ விடுதலைக்கான ஆயுதமாய் மாற்றிக் கொண்டுள்ள இந்த பேனாக்காரர் பேசுவதைக் கேளுங்கள்:

யாழ்ப்பாணத்தின் ஒதுக்குப்புறத்தில் சின்னஞ்சிறிய கடலோரக் கிராமமான கொழும்புத்துறையில் பிறந்தவன் நான். என் தகப்பனார் செல்லையா, தனது வழியாலும் எனது தாய் வழியாலும் வந்த பரம்பரைச் சொத்தை நிர்வகித்தும், செலவழித்தும் வாழ்ந்தவர். நாடகப்பிரியர். புத்தகப்பிரியர். அடிக்கடி இந்தியாவுக்கு வந்து நாடகக் குழுக்களை அழைத்து வந்தாரென்பதை அம்மா சொல்லி அறிந்திருக்கிறேன்.

எனது தாயாரைப்போல பொறுமையும், அன்பும் கொண்ட இன்னொரு பெண்ணை நான் இதுவரை பார்த்த தில்லை. பரோபகாரம், கடவுள்பக்தி, சக்தியை மீறிய உழைப்பு அவரது தனிக்குணங்கள். இவ்வளவிருந்தும் அவர் நோயாளியாகிவிட்டார். தன் நோய் தீர்வதற்காக அவர் கடவுள் மேலேயே பழிபோட்டார். எங்களூரிலுள்ள அம்மன் கோயிலுக்கு தினந்தோறும் அவரைக் கூட்டிச் செல்வேன். கோயிலில் மனம் கசிய, கண்ணீர் பெருக தேவாரம் பாடுவேன். அம்மா மௌனமாகவே உட்கார்ந் திருப்பார்.

இடியும், மழையும், மின்னலும் நிறைந்த நாளொன்றில் எனது தாயார் இறந்து போனார். அப்போது அவருக்கு வயது முப்பத்திரெண்டு. எனக்கு பதினொன்று.

எனக்கு எல்லாமே வெறுமையாகத் தெரிந்தன. என்னிலிருந்த சந்தோஷங்கள் யாவையும் இழந்து போய் தனிமைப்பட்டதாக உணர்ந்தேன். அதற்குப் பிறகு எனது கடவுள் நம்பிக்கை போய்விட்டது. முற்று முழுதாக

தாயால் நம்பப்பட்ட கடவுள், அவரையே மோசம் பண்ணிக் கொன்று விட்டதாக எண்ணி கடவுளின் மேல் விரோதம் வைத்தேன்.

பிறகு எனக்குத் தனிமைதான் பிடித்தது. அப்போது புத்தகங்களில் தஞ்சம் புகுந்து கொள்வதைத்தவிர எனக்கு வேறு வழி தெரியவில்லை.

அப்போது 'ஈழகேசரி' வாரவெளியீடு 'சிறுவர் பகுதி' யையும் வெளியிட்டு வந்தது. அதில் ஒரு கதைப் போட்டி அறிவித்திருந்தார்கள். ஏதோ ஒரு வேகத்தில் நான் சிறுகதை ஒன்றை எழுதி அந்தப் போட்டிக்கு அனுப்பி னேன். எனக்குத்தான் முதற்பரிசு கிடைத்தது. சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அப்பரிசுப் புத்தகங்களில் ஒன்றான 'கார்ல்மார்க்ஸ் வாழ்க்கை வரலாறு'-வெ. சாமிநாதசர்மா எழுதியது. என்னை மிகவும் பாதித்தது. பின்னர் தமிழ் நாட்டிலிருந்து வெளியான 'கண்ணன்' இதழில் எழுதி னேன்.

வளரிளம் பருவத்தில் (ADOLESCENCE) தமிழ்மொழி, தமிழிலக்கியப் பெருமைப்பற்றிக் கூறும் இயக்கங்கள் என்னை ஈர்த்தன. தமிழரசுக்கட்சியின் இளைஞரணியான 'இளந்தமிழர் இயக்க'த்தில் நான் முக்கியமானவனாக இருந்தேன். 'செய்; அல்லது செத்துமடி' என்பது அந்த இயக்கத்தின் லட்சியம். 'சாகும் போதும் தமிழ் மணத்துச் சாக வேண்டும்; இவ்வுடல் வேகும் போதும் தமிழ் மணத்து வேக வேண்டும்' என்றும் நாம் ஒரே குரலில் கூறினோம். கையை பிளேடால் கிழித்து, அதில் வழிந்த ரத்தத்தை எடுத்து, தமிழைக்காக்கும் உறுதி மொழிகளைக் கையெழுத் திட்டோம்.

யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் ஏகோபித்த இயக்கமான சத்தியாக்கிரகத்திலும் 'இளந்தமிழர் இயக்கம்' பங்கு கொண்டது. இந்த சத்தியாக்கிரக இயக்கம் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டது. இந்த மாபெரும் மக்கள் எழுச்சி

வேதனையூட்டும் விதமாக வீழ்ச்சியடைந்தது. என்னை இது வெகுவாக ஏமாற்றம் கொள்ளச் செய்தது.

இதன் பிறகுதான் எனக்கு அப்போது மிகவும் பிரபலமாயிருந்த எழுத்தாளர் கே. டானியலின் தொடர்பு உண்டாயிற்று. பின்னர் நான் பல்கலைக்கழகம் சென்றேன். அங்கு பேராசிரியர் கைலாசபதி பணியாற்றிக் கொண்டிருந்தார். அவர் மூலம் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். மிகச்சிறந்த பேராதனைப் பல்கலைக்கழக நூல்நிலையம் என்னை வெகுவாகக் கவர்ந்தது. பிரமிக்க வைத்தது. அங்கு விரிவுரை அறைக்குள்ளிருந்த நேரத்தை விட நூலகத்தில் படித்த நேரமே அதிகமாயிருந்தது. என் இளமைப்பருவம் படிப்பதிலேயே கழிந்தது.

மாணவனாக எழுதிக்கொண்டிருந்த நான் முதன்முதலில் 'கலைச் செல்வி' இதழில் வெளிவந்த 'மனக்கோலம்' என்ற சிறுகதையின் மூலம் எழுத்தாளன் ஆனேன். அதன் ஆசிரியர் சி சரவணபவன் (சிற்பி) என்னை மிகவும் உற்சாகப்படுத்தினார். இது நடந்தது 1962-ல். பின்னர் நடந்த 'அகில இலங்கை இளம் எழுத்தாளர் சங்க'ப்போட்டியில் எனக்கு தங்கப் பதக்கம் கிடைத்தது. தொடர்ந்து பல்கலைக்கழகத் தமிழ்சங்க குறுநாவல், சிறுகதைப் போட்டிகளில் அடுத்தடுத்து தங்கப்பதக்கங்களும், பரிசுகளும் கிடைத்தன. முதலில் எழுதிய ஐந்து கதைகளுமே என்னை கவுனிப்புக்குரிய எழுத்தாளனாக்கி விட்டன. எழுத்தாளனாக வேண்டும் என்ற பொறி என்னுள் இளமையில் எப்போதுமே நெஞ்சினில் கனன்று கொண்டிருந்தது. கிடைத்த சந்தர்ப்பங்களும், அங்கீகாரங்களும் என்னை மேலும் முன்னேற ஊக்குவித்தன.

அப்போது நிறைய எழுதிக் கொண்டிருந்த நாவலாசிரியர் இளங்கீரன், என்னை தனது குடும்பத்தில் ஒருவனாகவே மதித்து நேசித்து உற்சாகப்படுத்தினார். சுறுசுறுப்பான தொழிற்சங்கவாதியாகவும் படைப்பாளியாகவும் விளங்கிய நீர்வை பொன்னையன் என்னை தனது தொடர்பான

தொழிற்சாலைகளுக்கும் விவசாயப் பிரதேசங்களுக்கும் அழைத்துச் சென்றார். இவரோடு சேர்ந்து நான் பெற்ற அனுபவங்கள் தொழிலாளி, விவசாயி பற்றிய நேர்மையான கண்ணோட்டத்தை ஏற்படுத்தி அவர்கள் மேல் நேசம் கொள்ளவும் அவர்களை மேன்மைப்படுத்தி எழுதவும் என்னைத் தயார்படுத்தின. தூண்டின வங்காள இலக்கியத்தோடு நெருங்கிய பரிச்சயத்துக்கு உள்ளாக்கியவர் நீர்வை பொன்னையனே.

இன்னொரு குறிப்பிட்டத்தக்க படைப்பாளி பெனடிக்ற் பாலன். இளவயதுத்தோழன். இலக்கிய இரட்டையர்களாக இருந்தோம். படிப்பும் எழுத்தும் மெருகுபெற ஒருவருக்கொருவர் உதவினோம். எழுதுவதிலும் படிப்பதிலும் மூர்க்கத்தனமான வெறியிருந்தது.

கட்சிப் பத்திரிகையை விற்கவும், ஊர்வலங்களில் துணிவுடன் பங்கு கொள்ளவும் ஆர்வம் கொண்டிருந்தோம். இதே வேளையில் நீர்வை பொன்னையன், பெனடிக்ற் பாலன், நான் ஆகிய மூவரும் கட்சியின் அனுசரணையோடு 'வசந்தம்' என்ற பத்திரிகையை வெளியிட்டோம். 'வசந்தம்' இதழ், முற்போக்கு எழுத்தாளர்களுக்கு சிறந்த தளமாயமைந்தது. பாவலர் வரதராஜனின் அருமையான கவிதையொன்றுகூட இவ்விதழில் வெளியாயிற்று.

நான் எழுதத் தொடங்கிய காலத்தில் இலக்கியத்தில் கூரிய முரண்பாடுகள் இருந்தன. ஆயினும் இவற்றிடையேயும் செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், கயிலாசநாதன் ஆகியோர் வெளியிட்ட தொகுதிகளில் முற்போக்கு அணியிலிருந்த நானும் செ. கதிர்காமநாதனும் இடம் பெற்றிருந்ததை இங்கே குறிப்பிட்டாகவேண்டும். இந்த ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியை இப்போதும் நினைத்துப் பெருமைப்பட முடிகிறது. இதுபோலவே என் பல்கலைக்கழக நண்பர்களான க. சண்முகலிங்கம், இ. சிவானந்தம், சி. மௌனகுரு, ச. முத்துலிங்கம் ஆகியோர் என் எழுத்தை விமர்சிப்பவராகவும் உற்சாகமூட்டு

வோராகவும் இருந்தது என்னை வளர்ப்பதில் பெரும்பங்கினை வகித்தது.

அப்போதைய 'வீரகேசரி' வாரமலர் ஆசிரியர் ராஜகோபால், 'தினகரன்' ஆசிரியர் இ. சிவகுருநாதன், 'சிந்தாமணி' இராஜ. அரியரத்தினம் ஆகியோர் என் எழுத்துக்கு உயரிய இடம் அளித்தனர். பத்திரிகையில் எழுதியது நான் குறைவென்றாலும், இவர்கள் அளித்த உற்சாகம் அளப்பரியது.

தமிழ்நாட்டில் 'செம்மலர்', 'தாமரை', கணையாழி' இதழ்களில் எண்பதுகளில் நான் எழுதி வந்தேன் 'கணையாழி' யில் பரிசுபெற்ற 'இரவல் தாய்நாடு'ம், 'தினமணி கதிரி'ல்வெளியாகிய 'நியாயப்படுத்தப்பட்ட கொலைகளு'ம் என்னை பரவலாக தமிழகத்துக்கு அறியப்படுத்தின.

நர்மதா ராமலிங்கம் எனது நூல்களை வெகு அழகாக வெளியிட்டு என்னை மேலும் ஏராளம் வாசகர்கள் அறிந்து கொள்வதற்கு உதவினார். இவர் வெளியிட்ட 'சுந்தரியின் முகங்கள்', 'அவளுக்கு நிலவென்று பேர்' ஆகிய தொகுதிகள் சிறந்த படைப்பிலக்கியத்திற்கான தமிழக அரசின் முதற்பரிசுகளைப் பெற்றன. தமிழகத்தின் ஏனைய பிரபல பதிப்பகங்களெல்லாம் எனது நூல்களை கேட்டு வாங்கி வெளியிடுவதற்கு அடியெடுத்துக் கொடுத்தவரென்ற வகையில் என் இலக்கியவாழ்வில் நர்மதா ராமலிங்கம் குறிப்பிடப்பட வேண்டியவர்.

● உங்களின் முதல் நூல் பிரசுரமானது எப்போது? உங்கள் குறிப்பிடத்தக்க சிறுகதை, குறுநாவல், நாவல் எது?

○ 'யோகநாதன் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுப்புதான் எனது முதல்நூல். 1964–ல் வந்தது. இலங்கையில் இலக்கியம் சித்தாந்த ரீதியில் போரிட்டுக் கொண்டிருந்த நேரம். அவ்வேளையில் முற்போக்கு இலக்கியம், 'இழிசனம் இலக்கியம்' என விவரிக்கப்பட்டது. அவ்வேளையில் முற்போக்கு இலக்கியத்தின் குரலாக 'யோக

நாதன் கதைகள்' பல்கலைக்கழகத்திலேயே வெளியிடப் பெற்றது. அந்த வெளியீட்டு விழாவில் முதலில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்ட கே. டானியல், இளங்கீரன் போன்ற முற்போக்கு எழுத்தாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. வெளியீட்டுவிழா நடப்பதே சந்தேகம் என்றிருந்த வேளையில் உலகப் பிரசித்திபெற்ற நீச்சல் வீரனான ஆழிக்குமரன் ஆனந்தன், தானே முன்னின்று அந்த விழாவை நடத்திவைத்தது இன்றும் என் கண் முன்னே நிற்கிறது.

'இரவல் தாய்நாடு', 'சுந்தரியின் முகங்கள்' போன்ற எனது எல்லாப் படைப்புகளும் ஒவ்வொரு விதத்தில் குறிப்பிடத்தக்கவைதான். 'சரணபாலாவின் பூனைக் குட்டி', 'காற்றும் சுழிமாறும்', 'நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே' என்பனவற்றை நான் எத்தனையோ தரம் படித்தபோதும் அலுக்கவில்லை.

● இலக்கியக்கொள்கை அல்லது சித்தாந்தம் ஒரு எழுத்தாளனுக்கு இருக்கவேண்டும் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் உங்களின் இலக்கியக் கொள்கை என்ன?

○ இலக்கியக் கொள்கையில்லாத ஒருவர் எழுத்தாளனாயிருக்க முடியுமென்று என்னால் எண்ண முடியவில்லை. அடிப்படையில் ஒவ்வொருவரும் — அவர்கள் அறிந்தும், அறியாமலும் அரசியல் சித்தாந்தங்களுக்கு உட்பட்டவர்களே. இலக்கியத்தில் அரசியல் சித்தாந்தம் வேண்டாம் என்று கூறுகின்றவர்கள் எதிர் அரசியல் சித்தாந்தம் ஒன்றின் பக்கம் நிற்பதாகத்தானே அர்த்தம் வந்துவிடுகிறது!

நான் அரசியல் மூலம் இலக்கியத்திற்கும், இலக்கியத்தின் மூலம் அரசியலுக்கும் அறிமுகமானவன். என்னைப் பொறுத்தவரை இலக்கியமென்பதே மறைமுக அரசியல் தான். இதில் ஒளிவுமறைவு வேண்டியதில்லை என்று எண்ணுகிறேன்.

எனக்கு வயது தெரிந்த காலத்திலிருந்தே சகல ஒடுக்கு முறைகளுக்கும் எதிராகக் குரல் கொடுத்து வந்திருக்கிறேன். எழுதி வருகிறேன். இதுதான் என் இலக்கிய சித்தாந்தம். என் எழுத்துக்கள் என் சித்தாந்தத்தையே பேசுகின்றன.

● இலக்கியம் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று எண்ணுகிறீர்களா?

○ நிச்சயமாக.

உலக வரலாற்றில் இலக்கியம் பெருத்த மாற்றங்களை உண்டாக்கியிருக்கிறது. 'தாய்', 'வீரம் விளைந்தது' போன்ற மகோன்னதமான நூல்கள் பூமிப்பந்தின் பல்வேறு பகுதிகளிலும் இளந்தலைமுறையிடையே உன்னதமான கருத்துக்களை விதைத்து, செயல் திறனுள்ளவர்களாக மாற்றியிருக்கிறது.

இலக்கியத்திற்கு மாற்றங்களை ஏற்படுத்தும் சக்தி எப்போதும் இருந்து வந்திருக்கிறது; இருக்கும். அத்தோடு உலகில் முற்போக்கு இலக்கியப் படைப்பாளிகள் தோன்றவும், வளரவும், மாற்றத்திற்கான எதிர்க்குரல் கொடுக்கவும் நமக்கு முந்திய இலக்கியங்களே அடியெடுத்துக் கொடுத்திருக்கின்றன. இந்த வரலாற்று நிகழ்வே இலக்கியம் மாற்றங்களை ஏற்படுத்தும் என்ற கருத்தை உறுதி செய்கிறதல்லவா?

● சமூக ஒடுக்குமுறையைப் பற்றியும், அதிகாரத்துவ மமதையைப் பற்றியும், நீங்கள் குறிப்பிட்டத்தக்க கதைகள் எழுதியிருக்கிறீர்கள். இவை பற்றிய உங்கள் கருத்து....?

○ இவ்விரண்டுமே ஒட்டு மொத்தமான சமுதாய மாறுதல் மூலமே அழிந்து போக முடியுமென்று நான் எண்ணுகின்றேன். இவற்றுக்கு எதிராக என் எழுத்தை ஒரு ஆயுதமாகக் கொள்வதை என் தார்மீகக் கடமையாக உணர்ந்து எழுதி வருகின்றேன்.

எந்த ஒடுக்குமுறையும், அது சமூக ஒடுக்கு முறையா யிருந்தாலென்ன, தேசிய இன ஒடுக்கு முறையாயிருந்தா லென்ன அது எதிர்த்துப் புறந்தள்ளத்தக்க ஒன்றுதான். இந்தப் போராட்டத்தில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டியது ஒரு எழுத்தாளனின் இன்றியமையாக் கடமை என்றே எண்ணுகிறேன்.

அதிகாரத்துவ மமதை என்பது மிகவும் எரிச்சலையும் வெறுப்பையும் என்னிடத்தில் எப்போதுமே உண்டாக்கி யிருக்கின்றன. மக்கள் வரிப்பணத்தை தமது சம்பளமாக வாங்கி, உல்லாச வாழ்வு வாழ்கின்ற இந்த அரசாங்க அதிகாரிகள், அதே மக்களைப் படுத்தும்பாடு சொல்லில் அடங்காதன.

நானும் இலங்கை நிர்வாக சேவையில் (SRI LANKA ADMINISTRATIVE SERVICE) தெரிவாகி ஒரு உயர் அரசு அதிகாரியாயிருந்தவன். எனவே அதிகாரத்துவ மமதையை நேருக்கு நேராகக் காணும் வாய்ப்பைப் பெற்றவன்.

● ஒரு முப்பதாண்டு கால எழுத்தனுபவம் உங்களுக்கு இருப்பதாகச சொன்னீர்கள். எழுத்துலக வாழ்வில் நீங்கள் மறக்க முடியாதவர்கள் இருந்திருப்பார்கள். மறக்க முடியாத பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கும். இவற்றைப்பற்றிச் சொல் லுங்கள்...?

○ யாழ்ப்பாணம் கச்சேரி (அரசாங்க செயலகம்) யைச் சுற்றி அதற்குள் அரசாங்க ஊழியர்களை நுழைய விடாமல் சத்தியாகிரகம். இதில் நானும் கலந்து கொண் டேன். இராணுவமும், காவல் துறையும் தடியடி, கண்ணீர்ப் புகை, துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் சுற்று வியூகத்தை உடைக்கமுடியவில்லை. இராணுவமும், காவல்துறையும் எங்களின் தோளை மிதித்து ஏறி உள்ளே சென்றன. அந்தப் பேரெழுச்சியை மூர்க்கமாகச் சிதைத்தன. அடபோது எனக்கு பதினெட்டு வயது. அப்போது நடந்த கொடுமைகளை என்னால் இப்போதும் மறக்கமுடிய

வில்லை. இந்தச் சம்பவங்களை வைத்து 'ஞாயிறும் எழு கின்றது' என்ற நாவலை எழுதினேன். அப்போது 'கலைச் செல்வி' ஒரு நாவல் போட்டியை நடத்தியது. இதில் இனப் பிரச்சினையை மையமாக வைத்து மு. தளையசிங்கம் எழுதிய 'ஒரு தனி வீடும்' எனது 'ஞாயிறும், எழுகின்றது'ம் பரிசு பெற்றன.

இதுபோலவே 1966-ம் ஆண்டில், தீண்டாமை ஒழிப் புக்கான போராட்டத்திலும் பங்கு கொண்டேன். ஆலயங் களை எல்லா மக்களுக்குமாகத் திறந்துவிடல், திருக்குளத் தில் யாவரும் குளிக்கும் உரிமை என்பனவற்றை முன் னிறுத்திய இவ்வீரஞ்செறிந்த போராட்டத்தை ஒடுக்க, அரசும், ஜாதி வெறியர்களும் எல்லாவித தந்திரோபாயங் களையும் கையாண்டனர். ஆனால் இதை முன்னின்று நடத்திய புரட்சிகரக் கம்யூனிஸ்ட் கட்சி, ஒடுக்கப்பட்ட மக்களின் துணையோடு நேருக்கு நேர் எதிர்கொண்டது. துப்பாக்கி வெடித்தது. கைதுகள் நீடித்தன, ஆனாலும் இறுதியில் பிற்போக்குவாதிகள் சுருண்டு போயினர். இந்தத் 'தீண்டாமை ஒழிப்பு வெகு ஜன இயக்கம்' ஈழத்தமிழர் வர லாற்றில் ஒரு முக்கிய சம்பவமாகியது.

இந்தப் போராட்டம், முற்போக்கு எழுத்தாளர்கள் அனைவரையும் பாதித்து எழுத வைத்தது. 'சங்காரம்' 'கந்தன் கருணை' போன்ற நாடகங்கள் உருவாகின. கவிதைகள் நெருப்பாய் ஊற்றெடுத்தன. இவை கலைப் படைப்பாகி மக்கள் முன்னே மீண்டும் சென்றன.

இந்தப்போராட்டங்களில் பங்கு கொண்டதால் சிறந்த பலரை நெருக்கமான நண்பர்களாய் பெறமுடிந்தது. கே. டானியல், கைலாசபதி, சிவத்தம்பி, செ. கணேசலிங்கன், டொமினிக் ஜீவா, அகஸ்தியர், ஈழத்துச்சோமு, செ. கதிர் காமநாதன், நீர்வை பொன்னையன், பெனடிக்ற்பாலன், சுபத்திரன் போன்ற பிரபல எழுத்தாளர்களெல்லாம் ஏதாவதொரு போராட்டத்தின் மூலம் என்னோடு தோழ மையானவர்களே. இவர்களைப் போல இலக்கியவாதியில்

லாத ஒருவர், கே. ஏ. சுப்பிரமணியம். நல்ல படிப்பாளி. சொல்லும் செயலும் ஒன்றான தோழர். மானிட நேய மிக்கவர், என்மேல் மாறா அன்புகொண்டிருந்தவர். நேரிய விமரிசகர். இன்னொருவர் நா. வானமாமலை. 1975 முதல் என்னோடு பழக்கமுள்ளவர். 1978-ல் நேரில் சந்தித்தேன். இளம் எழுத்தாளர்களை சித்தாந்த அடிப்படையில் நேர் படுத்தியவர்.

● அண்மைக் காலமாக முற்போக்கு எழுத்துக்கள். மொழி வளமற்றுப் போய்விட்டன என்று நவீனத்துவவாதிகள் சிலர் கருத்துக் கூறுகின்றனரே....இதுபற்றியும் இதற்கான பின்னணி பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள்...?

○ இன்றைக்கு இலக்கியத்தில் மொழிநடை பற்றி அங்குமிங்குமாய் சிறு அளவிலான குழுவினர் வாதப்பிரதி வாதங்கள் நடத்திக் கொண்டிருக்கின்றனர். இந்த வாதப் பிரதிவாதம் முற்போக்கு இலக்கியவாதிகளுக்கு எதிராகவே வைக்கப்படுகின்றதென்பதையும் அறிய முடிகிறது. முற் போக்கு எழுத்தாளர்களில் பலருக்கு மொழியறிவோ, மொழி ஆளுமையோ, நவீன தமிழைக் கையாளும் திற மையோ இல்லையென்பது இந்தக் குழுவினரின் தர்க்க சாராம்சம்.

உலகின் மொழி, படைப்பிலக்கிய வரலாறு, என்பன வற்றை அறிந்தவர்களுக்கு இது புதிய குரலாகத் தெரிவ தில்லை. ஏனெனில் இந்தக் கருந்தோட்டம் முற்போக்கு இலக்கிய சிந்தனை உருவான காலத்திலேயே தோன்றி, வலுவிழந்து, முனை மழுங்கிப் போன ஒன்றுதான். முற் போக்கு இலக்கியம் வாழ்வின் அடிநிலையிலிருக்கிற ஒடுக்கப் பட்ட மக்களையும், அவர்களைவிட சற்று மேலே—ஆனால் அடிமைத்தனங்களில் உழல்கிற மானிடர்களையும் சித்திரிப் பதும் அவர்களை கைபிடித்து முன்னே கூட்டிச் செல்வது மாகவும் உள்ளதை இலக்காகக் கொண்டவை. அடிப்படை யில் இந்த எழுத்தின் வேர்கள் சேற்றிலும், சகதியிலும்

வியர்வையிலும், இரத்தத்திலும், ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சொல்லிலும், செயலிலும் ஆழப்பதிந்திருக்கின்றன. வீறார்ந்த மூச்சோடு எதிர்க்குரல் கொடுக்கின்றன. இவை இந்த மக்களின் உயிர்த்துடிப்புள்ள மொழியை அப்படியே சொல்கின்றன. இந்த மக்களின் மொழி நீண்ட நெடுங்காலமாக இந்த மக்களால் பேசப்பட்டு, வளமைப்படுத்தப்பட்டு, செம்மையுற்று செழுமைப்படுத்தப்பட்டது.

உலகின் பெரும்பான்மையான மக்களால் பேசப்படும் இந்த மொழி, மிகச்சிறுபான்மையான ஆளும் பிரிவினரால் எந்தக் காலத்திலும் ஒத்துக்கொள்ளப் பட்டதில்லை. இறந்த காலத்தின் வரலாற்றில் கொஞ்சதூரம் போய் நின்று பார்த்தோமானால் இது தெரியவரும். இதனாலேயே 'கலை கலைக்காக' என்ற குரல் இவர்களால் எழுப்பப் பட்டது. 'கலையோ அதன் தளமான மொழியோ ஒரு உயர் தன்மை கொண்டது. அது சிலராலேயே அறிந்து உணர்ந்து மகிழக்கூடியது' என்ற கருத்தும் இந்த 'அறிவாளிகளால்' பிரகடனப்படுத்தப்பட்டதோடு, மக்கள் சார்ந்த இலக்கியங்கள் புறந்தள்ளப்பட்டு அவர்களின் இருத்தலும் சூனியமாக்கப்பட்டது. ஆனாலும் வரலாறு எத்தனை மூர்க்கமானது. அது காட்டாறாய் சீறிப்பெருகிப் பாய்ந்தது. மாறிவிட்ட மானிட சூழலில் கலைவாதத்துக்கு எதிரான குரல் தனது வருகையை ஆழப்பதித்து, ''எல்லாக்கலை இலக்கியங்களும் சாதாரண மனிதனுக்கே'' என்று உரத்து முழங்கிற்று. அது உடனடி அங்கீகாரம் பெறாவிடினும் மக்கள் அதை ஏற்றுக்கொண்டு, அதற்கான போராட்டங்களில் தம்மை அர்ப்பணித்து தமது கலைப் பொக்கிஷங்களாக்கிக் கொண்டனர்.

ஆயினும் 'கலைகலைக்காக' என்ற வாதம் வேரறுந்து போய் விடவேயில்லை. அது மக்கள் விரோதக் கலாச்சாரத்தின் நன்றி மிக்க சேவகனாக இன்றும் தன் பேரை மாற்றிக் கொண்டு பணி செய்கிறது. வேறு விதத்தில் தனது

வாதங்களைத் தெரிவிக்கின்றது. சர்வதேச அரசியல் சூழலில், தான் மீண்டும் மேலோங்கி நிற்க முடியும் எனக் கனவு காணுகின்றது.

நாம் அறிவோம்; என்றைக்கும் ஆறுகள் பின்னோக்கி ஓடியதில்லை.

முற்போக்கு இலக்கியம் பற்றி கடுமையான விமர்சனம் வைக்கிறவர்களெல்லாம் இன்று ஆர்ப்பரித்துச் சொல்கின்ற தத்துவ வித்தாரம் என்ன?

''என்னய்யா, நீங்க என்னய்யா எழுதப் போறீங்க? உங்க கதை ருஷ்யாவிலே முடிஞ்சிடுச்சு. யூகோஸ்லோவியா, செக்கோஸ்லாவோக்கியாவிலை உழுத்து தகர்ந்து போச்சு.... இனி என்னதான் பண்ணப்போறிங்க?''

இதைச் சொல்பவர்களைப் பார்க்கிறபோது இவர்களினது அறிவின் மீதும், நம்பிக்கையின் மீதும் பரிதாபம் உண்டாகிறது. அடிபபடையில் இவர்கள் விஞ்ஞானத்தின் மூலக்கூறுகள் பற்றிய பிரக்ஞையே இல்லாதவர்கள்.

மார்க்சியம் என்பது சமூக விஞ்ஞானம். அது கடந்த கால மானுட வாழ்க்கையை விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து நிகழ்காலத்தை செப்பனிட்டு வருங்காலத்திற்கு தன் கட்டுமானத்தில் வலுவான இடம் வைத்திருப்பது.

எந்த விஞ்ஞான தத்துவத்திற்கும் எப்போதோ ஒரு சோதனை அதன் நடைமுறைத் தவறுகளால் ஏற்பட்டு விடுகின்றது. ஆனால் இது விஞ்ஞான தத்துவத்தின் தோல்வி அல்ல; பின்னடைவே. வெறும் பின்னடைவு மட்டுமே.

இதை அண்மைக்கால சம்பவங்கள் மெய்ப்படுத்துகின்றன.

முற்போக்கு இலக்கியம் இந்த சித்தாந்தக் கட்டுமானத்தில் முகிழ்த்த ஒன்றே என்பதை யாரும் மறுப்பதற்கில்லை..

உலகளாவிய முற்போக்கு இலக்கியத்தில் அதன் அழகியல் பற்றி காலத்துக்கு காலம் விவாதங்கள் உண்டாகி யுள்ளன. ஆனால் அவையெல்லாம் வலுவான ஒரு ஆதா ரத்தின் மேலேயே நிகழ்த்தப் பட்டிருக்கின்றன. 'மக்களிட மிருந்து கற்றுக்கொண்டு அதைச் செழுமைப்படுத்தி மக்களுக்கே திருப்பிக் கொடுத்தல்' என்பதுதான் அது.

எனக்கு ருஷ்ய நாவலாசிரியரும் விமர்சகருமான கான் ஸ்டாண்டின் ஃபெடின் சொன்ன வார்த்தைகள் இப்போது நினைவிலே வருகின்றன. அவர் சொன்னார்: 'மொழி ஒரு உபகரணம். எழுத்தாளனது துணைக்கருவி. அவன் வாழ்ந்த, சிந்தித்துள்ள, மேலும் தன் வாழ்க்கையில் உணர்ந்த அனைத்துடனும் கூடிய, ஒரு கருப்பொருள் அது. படைப்புத் தொழிலுக்குட்படக்கூடிய ஒரு மூலப்பொருள் அது. மொழி, படைப்பின் அடிப்படைப் பொருளாகவே எப்போதும் இருக்கும் என்று முன்னமேயே நான் கூறியுள் ளேன். எழுத்து சொற்களின் கலை! இவ்வாறு எழுத்தாள னுக்கு மக்களது மொழிவளத்தைப் படிப்பது இன்றியமை யாததாகும்.'

எனவே இன்றைக்கு நவீனத்துவம் பேசுகிறவர்களும், முற்போக்கு எழுத்தாளர்களின் மொழிநடை நீர்த்துப் போய் விட்டதென்று சொல்பவர்களும் மீண்டும் உருவ வாதத்திலும் கலைவாதத்திலும் தஞ்சம் புகுந்து கொள்கிற வர்களென்றே கருதவேண்டும். இவர்கள் மக்கள் திரளின் மேல் நம்பிக்கையற்று பரிச்சயமற்றுப் போனமையாலேயே இந்தக் கருத்தாக்கத்திற்கு வந்திருக்கின்றனர். இவர்களின் எழுத்து—குழப்பமும், மொழிச்சீரழிவுமடைந்து போவதை மேலும் மேலும் காணலாம். அவையெல்லாவற்றுக்கும் மேலாக இவர்கள் மக்கள் விரோதப் படைப்பாளிகளாகவும் மெல்ல மெல்ல மாறிப்போய் விடுகின்றனர்.

● 'யதார்த்தவாதத்தை உடைப்போம்' என்று ஒரு குரல் எழுந்துள்ளதே...?

○ யதார்த்தவாதம் பற்றிய அறியாமையால்தான் இந்தக் குரல் எழுப்பப்பட்டதாக நினைக்கிறேன். இதை அறியாமை என்று கூறுவதோடு, முற்று முழுதான இலக்கிய சித்தாந்தத் தெளிவின்மையின் அடையாளமாகவே இனங் காணமுடியும். புதிதாக எழுத வருகின்ற இளைஞர்கள் பலர் இந்த அறியாமையினால் பாதிக்கப்பட்டிருப்பது கவலைக்குரியதொரு விஷயம். யதார்த்தவாதம் என்றால் என்ன? யதார்த்தம் என்பது உண்மையினைத் தேடிக் காணு கின்ற கோட்பாடு. ''உள்ளதை உள்ளவாறே படம் பிடித்து விடின் உண்மை துலங்கும் என்பதில்லை. இயற்கையில் முக்கியமானதும் முக்கியமற்றதும், பயனுள்ளதும் பயனற்ற தும், செத்ததும் உயிருள்ளதும் கலந்து விரவிக்கிடக்கின்றன. இவற்றை நுணுக்கமாக வருணித்து விடுவதால் ஒரு பொரு ளின் உள்ளியல்பு அல்லது சிறப்பியல்பு தெளிவாகாது. தள்ள வேண்டியதைத் தள்ளி, கொள்ள வேண்டியதைக் கொள்ள வேண்டும். மேலோட்டமான நுணுக்க விவரங்களையும் ஊடுருவி உள்ளியல்பினைக் கண்டறிதல் வேண்டும். இது யதார்த்த இலக்கிய நெறியாகும். இவ்வாறு பார்க்குமிடத்து யதார்த்தம் என்பது எடுத்துக் கொண்ட பொருளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. பொருளைக் கையாளும் உணர்விலே தங்கியுள்ளது'' என்ற கைலாசபதியின் கூற்றை விட இதற்குச் சிறந்த வரைவிலக்கணம் இருக்க முடியாது.

● ஈழத்திலிருந்து வரும் இலக்கியத்திற்கு அடிக்குறிப்பு வேண்டும்; அது தமிழக இலக்கியத்தை விட இருபது வருடங் கள் பின தங்கியிருப்பதாக ஒரு கருத்து உண்டே. இது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

○ முதலில் ஒன்றை ஒப்புக்கொள்ளுங்கள். ஈழத்திற்கு தமிழ்ப் படைப்பிலக்கியங்களை இறக்குமதி செய்யப்பட்டு படிக்கப்படுவது போல, நவீன காலப் படைப்புகள் இங்கே

வருவிக்கப்படுவதுமில்லை. படிக்கப்படுவதுமில்லை. அதற்கு ஆர்வமும் இருந்ததில்லை. நாம் தமிழக வட்டார வழக்கு நாவல்கள் யாவற்றையும் படித்துப் புரிந்து கொள்கிறோம். முடியாவிடில் முயற்சித்துப் படிக்கின்றோம். அதுபோல படிப்பவர்கள், இங்கு வெகு சிலரே உள்ளனர். பழக்க வழக்கங்கள், உறவு முறைகள், சம்பிரதாயங்கள் போன்றவற்றுக்கு சில வேளைகளில் அடிக்குறிப்புகள் தேவைப் படுவது உண்மைதான். ஆனால் எமது தமிழுக்கே அடிக் குறிப்பு கேட்பது பொறுப்பற்ற, இலக்கியப் பிரக்ஞையற்ற குரலென்றே எண்ணுகிறேன்.

1956—க்கு முன்னரும் சரி, இப்போதும் சரி எமது சிறு கதைகளில் கணிசமானவை தரமிக்கவையே. கலைமகள், மணிக்கொடி, கிராம ஊழியன், தேனீ இதழ்களில் வெளி யான இலங்கையர்கோன், சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் ஆகியோரின் கதைகள் புதுமைப்பித்தன், கு. ப. ரா. கதை களுக்கு நிகரானவை.

இப்போதைய கதைகளைப் பற்றி உங்களுக்குத் தெரியும். சர்வதேசத் தகுதி பெற்ற இருபத்தைந்து படைப் பாளிகளை—ஈழத்தவர்களை—என்னால் கூறமுடியும்.

● அதென்ன? 1956-ஐ ஒரு கால அடையாளமாகக் குறிப்பிடுகின்றீர்கள்?

○ 1956-ல்தான் 'தேசிய இலக்கியக் கோட்பாடு' இலங்கைப் படைப்பிலக்கியத்தில் முன் வைக்கப்பட்டது.

அதற்கு முன்னர் தமிழ்நாட்டு எழுத்துக்கள் ஈழத்தை முற்று முழுதாக ஆக்கிரமித்திருந்தன. இந்தியா தாய் நாடென்றும் இலங்கை சேய்நாடென்றும் கூறப்பட்டது. ஈழத்து மண்வாசனை கமழும் படைப்புகள் அங்கீகாரத்துக் காகப் போராட வேண்டியிருந்தன. இதற்கு எதிராக இடது சாரி, முற்போக்கு எழுத்தாளர்கள் போராடினார்கள். அப்போதைய தேசிய முதலாளித்துவ அரசியல் போக்கில் இது வெற்றி பெறுவது இலகுவில் சாத்தியமாகிற்று.

1956-ன் இந்த இலக்கியக் கோட்பாடு ஈழ இலக்கியம் தனது தனித்துவத்துடனும், மண்வளம் கமழவும் வழி செய்தது ஈழப் படைப்பிலக்கியங்கள் புத்துணர்வுடனும் வீறுடனும் தரத்துடனும் வெளிவரத் தொடங்கின. பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தாய்மொழியிலேயே கல்வி என்ற திட்ட அமுலாக்கம், படைப்பிலக்கியத்தில் நிறையப் பேரை உருவாக்கிற்று. மக்கள் இலக்கியத்தை பழமைப்பிடிப்பும் சாதியுணர்வுமுள்ளவர்கள் ஏற்றுக் கொள்ளாமல் இருந்த நிலையில், தேசிய இலக்கியக் கொள்கை அதற்கெதிரான கூர்மையான தத்துவப் போராட்டத்தை தொடங்கிய காலமும் இதுதான்.

● **'தலித்' இலக்கியம் தலித்துக்களால் மட்டுமே எழுதப் பட வேண்டுமென்ற கருத்துப் பற்றி...?**

○ இலங்கையைப் பின்னணியாக வைத்தே என்னால் இந்தக் கேள்விகளுக்குப் பதிலைச் சொல்ல முடியும்.

இலங்கையில், குறிப்பாக தமிழ்ப் பிரதேசத்தில் கொடூரமான சாதி வெறிக்கும், ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் எதிராக நீண்ட நெடுங்காலமாக கடுமையான போராட்டம் நடந்து வந்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் கோயில்களுக்கு, தேனீர்க்கடைகளுக்கு, உணவுவிடுதிகளுக்கு சில பாடசாலைகளுக்கு செல்லமுடியாத நிலை. சிகை திருத்தகங்களுக்கோ, சலவையகங்களுக்கோ, நூலகங்களுக்கோ அவர்கள் போகமுடியாது. பெண்கள் ரவிக்கை போடமுடியாது. தாலி கட்ட முடியவில்லை. சில கிராமங்களில் அவர்கள் செருப்புப் போடவும்,சுடலைகளில் பிரேதம் எரிக்கவும், வைபவங்களில் மேளம் அடிக்கவும் அனுமதியில்லை; மிகக் கேவலமான அடிமை நிலையிருந்தது. அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக இந்தப் போக்கிற்கு எதிரான போராட்டம் அரசியல் ரீதியான பின்னணியில் நடைபெற்று வந்திருக்கிறது.

இடதுசாரி இயக்கங்கள் இந்தப் போராட்டத்தை உறுதியோடு முன்னெடுத்துச் சென்றன. அடிபட்டன.

ஆளும், உயர்சாதி வகுப்பினரின் கொடுமைகளை எதிர் கொண்டன.

1966-ம் ஆண்டு அக்டோபர் 21-ம் தேதி தீண்டாமைக் கெதிரான பெரிய எழுச்சி நாளாக, இம்மக்களால் நினைவு கூரப்படுகிறது. அப்போதுதான் தீண்டாமைக்கெதிரான உறுதியான போராட்டமும், கொள்கையும் முழு வடிவம் பெற்றன. இலங்கையின் சமூக அமைப்பில் சாதி அடக்கு முறை பிரதான முரண்பாடு என்ற இடத்தை வகிக்க வில்லை. தமிழர் சமுதாய அமைப்பில் நிலப்பிரபுத்துவ முறைகளுடன் இணைந்த ஒன்றாகவே சாதிமுறை விளங்கு கிறது. இதில் சாதியுணர்வு கொண்டவர்களும், சாதி வெறியர்களுமே ஒடுக்கப்பட்ட மக்களின் விரோதிகளாக இருக்க முடியுமே தவிர, எல்லா உயர் சாதியினரும் அல்ல. ஒடுக்கப் பட்ட மக்கள் தமது போராட்டங்களுடன் முற்போக்கு, நல்லுணர்வு கொண்ட, வர்க்க ரீதியில் ஒன்றுபடக் கூடிய உயர் சமூக மக்களுடனும் தமது ஐக்கியத்தை வலுப்படுத்தி கொள்ள வேண்டும். இந்தக் கருத்து, கலை இலக்கியத்தில் அப்படியே பிரதிபலித்தது. இதே குரலில் கலை இலக்கியங் கள் படைக்கப்பட்டன.

தமது பிரச்சினையை ஒடுக்கப்பட்ட மக்கள் மிக உயிர்ப் புடன் எழுத முடியுமென்பது உண்மையே. ஆனால் முற் போக்கு நல்லுணர்வு கொண்ட உயர் ஜாதியினர் அதைப் பற்றி எழுதக் கூடாதென்பது சரியல்ல.

இலங்கையில் மட்டுமல்ல, தமிழிலேயே 'தலித்' இலக் கியமென்று இப்போது சொல்லப்படுகிற இலக்கிய வகை யின் முன்னோடி கே. டானியலே. இவரைப்போல சாதி ஒடுக்குமுறைக்கு உள்ளானவர் வேறு யாருமில்லை. ஆனால் இவரளவுக்கு சாதிக் கொடுமைக்கு எதிராகப் போராடித் துன்பப்பட்ட உயர் சாதி முற்போக்காளர் அரசியலிலும் இலக்கியத்திலும் நிறையப்பேர் இருந்திருக்கின்றனர். இருக் கின்றனர்.

ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்த படைப்பாளிகளான டானியல், டொமினிக் ஜீவா, பசுபதி, சுபத்திரன், பெனடிக்ற் பாலன், சி. மௌனகுரு, என். கே. ரகுநாதன் போல செ. கணேசலிங்கன், முருகையன், நீர்வை பொன்னையன், கைலாசபதி ஆகிய உயர்சாதிக்காரர்களும் சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடி வருபவர்களே...

இதே வேளையில் வசதியும் செல்வமும் படைத்த ஒடுக்கப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள், மோசமான பிற்போக்கு அரசியலுக்கும், கலை இலக்கியத்துக்கும் முட்டுக்கொடுத்து நின்றார்களென்பதையும் நீங்கள் கவனிக்க வேண்டும்.

● ஈழத்து இலக்கியப் போக்குகள் பற்றி...?

○ ஆரம்ப கால ஈழத்துப் படைப்பிலக்கியம் தமிழ் நாட்டைச் சார்ந்தே வளர்ந்தது. கலைமகள், மணிக்கொடி, கிராம ஊழியன், தேனீ, ஆனந்த விகடன் ஆகிய இதழ்களில் ஈழத்து முன்னோடி எழுத்தாளர்களான 'இலங்கையர் கோன்', சி. வைத்தியலிங்கம், 'சம்பந்தன்' ஆகியோர் எழுதினார்கள். இலங்கையர்கோன் மண்மணங்கமழ எழுதினார். கு. ப. ராவுக்கு இணையாக காவியநயம் தோய எழுதினார் சி. வைத்தியலிங்கம். அப்போது தமிழகப் பத்திரிகைகள் முற்றுமுழுதாக இலங்கையை ஆக்கிரமித்திருந்தன. 1952-க்குப் பிறகே இலங்கையிலிருந்து இந்தியா வருவதற்கு 'பாஸ்போர்ட்' தேவைப்பட்டது. எனவே தாராளமாக வந்து போக முடிந்தது.

இரண்டாவது கட்டமாக வரதர், அ. ந. கந்தசாமி, அ. செ. முருகானந்தன் முதலான இளைஞர்கள் புதிய கண்ணோட்டத்துடனும் வேகத்துடனும் எழுத்துத் துறைக்கு வந்தனர். வரதரின் 'மறுமலர்ச்சி' ஈழத்து இலக்கியத்தில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை உண்டாக்கிய பத்திரிகை, ஏற்கனவே நான் சொன்னபடி இடதுசாரிப் போக்கின் ஆதிக்கம் இலக்கியத்தையும் வழிநடத்திற்று. முற்

போக்கு எழுத்தாளர் இலக்கியங்கள், ஈழத்திலக்கியமாக அறியப்பட்டுள்ளன. அதே வேளையில் சமூகப் பிரக்ஞை யற்ற இலக்கியப் போக்கும் சமமாகவே இயங்கி வந்தது. 1956-ம் ஆண்டில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை தாய் மொழியே பயிற்று மொழியாகிற்று. தேசிய முதலாளித்துவ அரசு ஆட்சியைப் பிடித்தது. இடதுசாரி சிந்தனை மேலும் வலுப்பெற்றது. இந்தப் பின்னணியிலே இலங்கையின் வலிமை வாய்ந்த எழுத்தாளர் இயக்கமான முற்போக்கு எழுத்தாளர் சங்கம் 'தேசிய இலக்கியம்' என்ற கோட்பாட்டை முன் வைத்தது. தமிழ்நாட்டு கலாசார ஆக்கிரமிப்பை இது எதிர்த்து, ஈழ மக்களின் மண்மணங் கமழும் எழுத்து வீறுபெற உழைத்தது. எஸ். பொன்னுத் துரை 'நற்போக்கு இலக்கியம்' என்ற கருத்தாக்கத்தை வெளியிட்டார். இது முளையிலேயே கருகிப் போயிற்று.

முற்போக்கு எண்ணங்கொண்ட அனைவரையும் ஒருங் கிணைக்க முயன்றது முற்போக்கு எழுத்தாளர் சங்கம். இதனோடு கருத்து ரீதியாக ஒத்துப்போக முடியாதவர்கள் 'தமிழ் எழுத்தாளர் சங்க'மாக இயங்கினார்கள்.

மலையகப் பகுதியில் தோட்டத் தொழிலாளர்க ளிடையே கோ. நடேசய்யர் ஏற்படுத்திய விழிப்புணர்வு 1960-ன் பிறகு உன்னதமான இலக்கியத்திற்கு வழி வகுத்தது. சி. வி. வேலுப்பிள்ளை, என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை ஜோசப், பன்னீர்செல்வம் ஆகிய தரமான எழுத்தாளர்களைத் தொடர்ந்து சிறந்த பலர் எழுத வந்த னர். இந்தப் பிராந்தியங்களுக்கு வெளியே உள்ள பிரதேசங் களில் இருந்தும் குறிப்பிடத்தக்க முஸ்லிம் எழுத்தாளர்கள் எழுதி வருகிறார்கள்.

இவர்களெல்லாருக்கும் இடங்கொடுத்து, இலக்கிய வளர்ச்சிக்கு கே. கணேஷின் 'பாரதி'யும், 'கலைச்செல்வி' யும் 'மரகத'மும் உதவின. பின்னர், 'மல்லிகை', 'குமரன்', 'வசந்தம்', 'அலை' 'பூரணி' 'குன்றின் குரல்' ஆகிய இதழ்கள் வெளியாகின.

தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்ததின் பிறகு, இலக்கியத்தின் போக்கும் நோக்கும் முற்றிலும் புதிய தடத்தில் இடம் பெயர்ந்தன. ஒடுக்குமுறைகள், மக்கள் எழுச்சி, தேசிய விடுதலைப் போராட்டம் என்பன இலக்கிய மாயின. இவற்றோடு அகதிகளாய் இடம் பெயர்ந்தோரின் ஈழப் பத்திரிகைகள், இலக்கிய முயற்சிகள் தொடங்கப் பட்டன. இவை இன்றைய ஈழ வாழ்வைப் பிரதிபலித்து வெளியாகின்றன. வாழ்க்கையின் இன்னல்களையும், அவதி களையும் மட்டுமல்ல, அவற்றினூடாகத் தமது புதிய வாழ் வையும் கனவு காணுகின்றன இந்த எழுத்துக்கள்! புலம் பெயர்ந்தோர் இலக்கியமென்ற பிரிவே இன்றைய ஈழத்து இலக்கியத்தில் ஒரு வகையாகிவிட்டது.

● இலக்கிய வாழ்வில் நீங்கள் அடைந்த சோகம் என்ன?

○ என் இலக்கிய வாழ்வில் சில சோகங்கள் மாறா மலே உள்ளன.

தமிழ் விமர்சனத்துறையில் புதிய பார்வையையும் மாற்றங்களையும் உருவாக்கிய பேராசிரியர் கைலாசபதி யின் வெற்றிடம் இன்றுவரையும் அப்படியே உள்ளது. விமர்சனத்துறையில் இருடார்ந்திருந்த பல பகுதிகளுக்கு துணிச்சலோடு அவர் வெளிச்சம் பாய்ச்சினார். இளம் எழுத்தாளர்களை செம்மையுறவழிப்படுத்தியவர். நேர்மை யான தத்துவ ஆசான் இவரைப் போலவே பேராசிரியர் நா. வானமாமலை, கண்காணாமலே நிறைய எழுத்தாளர் களை தனது செம்மையான விமர்சனப் பாங்கால் ஆற்றுப் படுத்தி நிலைக்கவைத்தவர். நவீனபடைப்பிலக்கியம் பற்றிய அளவற்ற கனவுகளை வைத்திருந்த மிகச்சிறந்த படைப்பாளி செ. கதிர்காமநாதன். அகாலத்திலே மரண மானவர். இலங்கை நிர்வாக சேவையாளன், உயிரோடு இருந்திருந்தால் தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் உயரமான சிகரங்களைத் தொட்டிருப்பார். இவரைப்போலவே கவிஞர் சுபத்திரனும்; சொற்களில் தீயையும் ஆக்ரோஷத் தையும் குழைத்துக் கொடுத்தவர். சில முரண்பாடுகளிருப்

பினும் கடைசி நாட்களில் போராட்டங்களினூடேயும் ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வை எழுதிய கே. டானியல், இவர்களை தமிழுக்கு நேர்ந்த வேதனைக்கும் சோகத்துக்கு உரிய இழப்பாக நான் கருதுகிறேன்.

● ஈழப் போராட்டத்தின் உக்கிரம், அதன் வெப்பம் புதுவை இரத்தினதுரை, சேரன், வ. ஐ. ச. ஜெயபாலன் கவிதை யின் நாளங்களில் ஊடுருவிய அளவுக்கு நாவலில் இல்லையே, ஏன்?

○ துப்பாக்கி ஓசையும், சாகசமும், தியாகங்களும் நிறைந்த போர்க்களத்தில் நிதானமாக உட்கார்ந்து ஒரு கலைப்படைப்பை உருவாக்க யாரால் முடியும்? சிறு இலக்கிய வடிவமான கவிதை; அதுவும் ஒரு போராட்டத் தேவையாய், போர்க்களத்தில் நிற்பவர்களாலேயே உரு வாக்கப்படுகிறது. இதற்கு ஈழத்திலிருந்து இன்று கேட்கும் கவிதைகள், சிறப்பான உதாரணம் நீங்கள் குறிப்பிட்ட மூவரிலும் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் தனித்துவமும், வீச்சும், உயிர்ப்பும், உண்மையும் நிறையப் பெற்றவை. சிகரங்களைத் தொட்டவை.

போர் ஒரு முடிவுக்கு வரும்போது, அதை நினைவு கொள்வதாய் உன்னதமான நாவல்கள் ஈழத்திலிருந்து தோன்றும். இன்று ஈழத்தில் இதே விதமாய் எழுதப்படும் கதைகள் எனக்குப் படிக்கக் கிடைக்கவில்லை.

● தமிழ்நாட்டின் இலக்கிய நிலைமைகள் பற்றி?

○ பத்தாண்டு காலத்துக்கு முன்னர் சிறப்பாக எழு திக் கொண்டிருந்த பலர் இன்று எழுதுவதை நிறுத்தி விட் டார்கள். எழுதி வருகிற சிலரும் எப்போதாவது எழுது கிறார்கள். புதிதாக எழுத்துத்துறைக்கு வந்து தேறியிருப்ப வர்கள் வெகு சிலரே. இவர்களில் ஆர்வத்தோடு சோதனை முயற்சிகளில் ஈடுபட்டு வருபவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். ஆனால் சோதனை முயற்சி மட்டுமே இலக்கிய மாகும் என்று கூறப்படுவது சிறுபிள்ளைத்தனமானது.

முற்போக்கு எழுத்தாளர்களென்று சொல்லிக் கொள்பவர்களில் பலருக்கு சித்தாந்தத் தெளிவோ, இலக்கியப் பரிச்சயமோ இல்லாதிருக்கிறது. இவர்களின் எதிரே நிறைந்து கிடக்கிற இலக்கியங்களையும், மானுட வாழ்வையும் பயிலுவதற்கு இவர்களுக்கு வழி நடத்தல் தேவை. அதிலும் நிறையச் சிக்கல்கள் தெரிகின்றன.

வணிகச் சூழலில் இயங்குகிற பத்திரிகை, பதிப்பகத் துறைகள் மோசமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளன. சென்னையின் பெரிய புத்தக நிலையமான ஹிக்கின் போதம்ஸுக்கு சென்று பாருங்கள். எண்டமூரி வீரேந்திரநாத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு போன்ற மூன்றாந்தர நாவல்களுக்கு 'தனி ஷெல்ப்' வைக்கப்பட்டிருக்கிறது. தமிழில் எந்த எழுத்தாளனுக்கும் இப்படி இல்லை. தரமான எழுத்தை எந்தப் பிரபலமான நிறுவனங்களும் வெளியிடத் தயாராயில்லை. பத்து ஆண்டுகளின் முன்னே நல்ல இலக்கியம், நசிவு இலக்கியம் என்ற தெளிவான வரையறை இருந்தது. வெகுஜன தொடர்பு சாதனங்களில் நசிவு இலக்கியங்களே இன்று முதன்மை பெறுகின்றன. நல்ல இலக்கியங்கள், வெளியே அனுமதியின்றிக் காத்திருக்கின்றன.

முன்னர் எழுதுகிறவர்களில் பலருக்கும் ஆங்கிலமொழி அறிவிருந்தது. ஆனாலும் சர்வதேச அளவினிலே புகழ் பெற்ற பிறமொழி நூலொன்று, அது வெளிவந்த இரண்டு மூன்று வருடங்களிலேயே தமிழில் மொழிபெயர்க்கப் பட்டது. இப்போது எழுதுகிறவர்களில் பலபேருக்கு இரண்டாவது மொழியே தெரியவில்லை. எனினும் மொழி பெயர்ப்பு அங்குமிங்குமாக தனி முயற்சியாக வெளியாகிறது. அவற்றிலும் பல சொற்பெயர்ப்பாகவே உள்ளன.

● உங்கள் புலம்பெயர்ந்த வாழ்வு எப்படியிருக்கிறது...?

○ பத்து வருஷங்கள் போய்விட்டன. தனியாக உட்கார்ந்து நினைத்துப் பார்த்தால் மனதைக் கொத்திக்

கொதறுகின்ற நிகழ்ச்சிதான் இது. நான் எனது மனைவி மக்களைப் பார்த்து ஐந்து வருஷங்கள் ஆச்சு. குண்டுவீச்சு விமானத் தாக்குதல் செய்திகளைப் படிக்கையில் நெஞ்சு அனலாய் எரியும். இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அடிப் படை வசதியின்றி, மின்சாரமின்றி, மருத்துவ வசதியற்று எனது மக்கள் வாழும் வாழ்வு. நாளாந்தம் மனதை வாட்டு கிறது. அவர்கள் கற்கால மக்களின் வாழ்க்கையை வாழ் கிறார்கள். வெளியுலகம் அவர்களுக்கு அந்நியமாகி விட்டது. எனது வீட்டின் மீது குண்டு சிதிலங்கள், விழுந்து சேதப்பட்டதையும், எனது ஒரே மகனை இராணுவம் இழுத்துச்செல்ல முயன்றதையும், அவன் பயங்கர நோய்க்கு ஆளாகி, தாய் மருத்துவ வசதியற்ற சூழலில் கலங்கித் துடித்து அவனைக் குணப்படுத்திய செய்திகளையும் என் னால் மூன்று மாதங்கள் தாண்டியே அறியமுடிகிறது. எனது நெருங்கிய நண்பர்கள் இறந்ததை பல மாதங்களின் பின்னர் தற்செயலாக கேள்விப்படுகின்றேன். என்னோடு கூடப் பிறந்தவர்கள், இங்கிலாந்திலும், ஜெர்மனியிலும் தங்கள் வயிற்றுக்காக சவக்குழி வெட்டிப் பிழைப்பதை பல முறை நான் ஞாபகத்திற்கு கொண்டுவர முயல்கிறேன். முடியவில்லை. குண்டுப் புகையும், ஹெலிகாப்டர் ஓசையும், விமான இரைச்சலுமே கேட்கின்றன. இறப்புக்காக ஒப்பாரி வைத்து துக்கம் காக்கிற மரபு போய்விட்டது. இறப்புகளை சாதாரணமாக தாண்டிச் செல்கிற மனதையும், வலிவையும் பெற்றுவிட்ட மக்களை அறிந்து வியப்பாகிறது. ஆனால் பூமிப்பந்தெங்கும் சிதறியுள்ள லட்சக்கணக்கான ஈழத்து அகதிகள் படுகின்ற அவதியைப் பார்க்கிறபோது எனது துயரம் கரைந்து போய் விடுகிறது. என்னைவிட பல வருஷ காலம் மனைவி மக்களைப் பிரிந்து, எதிர்காலத்தை கேள்வி குறியாக வைத்துள்ள பலருக்கு வாழ்வின் எந்தப் பிடிமான மும் இல்லை. அதனால் அவர்கள் நடைப்பிணங்களாகவும் சில வேளைகளில் மோசமான குற்றவாளிகளாகவும் மாறும் அபாயம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் எனக்கு உறுதியானதொரு பிடிமானம் இருக்கிறது; அது இலக்கியம்.

கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளாக நான் எழுதி வருகிறேன். என் எழுத்துப் பற்றி எனக்கு தீர்க்கமான தீர்மானமுண்டு. நான் சகலவித ஒடுக்குமுறைகளையும் எதிர்த்து மானுட மேன்மையை நிலை நிறுத்த விரும்புகிறேன் இதை என் எழுத்தாக்குகின்றேன். எழுத்து என் அரசியல். என் ஆயுதம். என் சுவாசம்.

எனக்கு இங்கே அருமையான நண்பர்கள் வாய்த்திருக்கிறார்கள். தமது குடும்பத்தில் ஒருவனாக 'தத்து' எடுத்திருக்கின்றார்கள். படைப்புத்துறையில் எனக்குக் கிடைத்தது போல அருமையான நண்பர்கள் வேறு யாருக்கும் அமைந்திருக்கமாட்டார்கள்.

வந்த புதிதில் அலையெறியும் கடலெதிரே உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருக்கும் போது என்னையறியாமலே கண்களில் கண்ணீர் பெருகும். அதிலே இனம் புரியாத ஆறுதல் இருந்தது. பின்னர் நான் சுதாரித்துக் கொண்டேன். வேதனையை வெல்ல என்னிடமுள்ள பிடிமானம் என்னை நிமிர வைத்தது. மகாகவி பாரதி, 'மாஜினியின் பிரதிக்கினை'யாகக் கூறியவற்றை எனக்கு சுவீகரித்துக் கொண்டேன்.

"வேற்றுநாடுகளில் அவர் துரத்துண்டும்
மெய்குலைந் திருந்துமே படுதல்
ஆற்றுகிலராய் எம் மருநாட்டின்
அன்னைமார் அருங்கண்ணீராணை
மாற்றலரங்கள் கோடியர்க் இழைக்கும்
வகுக்கொணத் துயர்களினாணை"

எழுத்துத்தான் என்னை நிலைநிறுத்தியது.
அல்லாவிடில் நான் துண்டு துண்டாக உடைந்து
போயிருப்பேன்.

இந்த வைராக்கியத்துக்கு எனக்கு உறுதுணையாக இருக்கிற இங்குள்ள என் நண்பர்களை என்றென்றும் நான் மறக்க மாட்டேன்.

இப்படியான சந்தர்ப்பங்களிலே புஷ்பா மௌனம் சாதிப்பதையே வழக்கமாகக் கொண்டு விட்டாள். வெறிபிடித்த குருவிக் குஞ்சினைப்போல கிறீச்சிடுகின்ற கீச்சுக் குரலிலே தர்மராஜன் கத்தத் தொடங்கினால் மூளை அவளுக்குத் தகித்தெரியும். ஆனாலும் கணவனும் மனைவியுமாக பதினேழு ஆண்டுகள் அவர்கள் வாழ்ந்துவிட்டார்கள். அவர்களின் மூத்த மகன் தர்மசிவராமன். மகள் தர்மஜோதி. கடைசியாக தர்மபிரியதர்சினி. இவன் அரசாங்க உயர் அதிகாரியாகக் கடமையாற்றுகின்றான். தர்மராஜன் என்றால் நேரந் தவறாமை என்ற கருத்தினைக் கொள்ளலாம் என்று உயர் அதிகாரிகளால் புகழ்ந்து உரைக்கப்படுகின்ற பெருமை இவனுக்கு உண்டு. இந்தப் பதினேழு ஆண்டுகளாக அவன் எடுத்த லீவு நாட்களை பத்து விரல்களினுள்ளே எண்ணி அடக்கி விடலாம். தர்மஜோதியும், தர்மபிரியதர்சனியும் சனிக்கிழமை நள்ளிரவிலேதான் பிரசவமானார்கள். அவ்வகையில் இரு வேலை நாட்களினை

**மகாராணி மீண்டும் வருவாள்...**

'லீவு' எடாமல் தர்மராஜன் மிகவும் மன நிறைவோடு தவிர்த்துக் கொண்டான். இவன் கேட்கின்ற ஏதாவது கேள்விக்கு தர்மசிவராமன் பதில் கூறத் தெரியாமல் சிறிது நேரம் தாமதித்து விட்டால் போதும், துள்ளத் தொடங்கி விடுவான் தர்மராஜன். கையும் காலும் வெறி பிடித்தாற் போல ஆடும்.

''உன்னையும் கொம்மா வேலைமினக்கெட்டுப் பெத்து விட்டிருக்கிறாளே... உனக்காக ஒரு நாள் லீவு எடுத்து வீணாக என்ரை வேலையையும் பழுதாக்கிக்கொண்டது தான் மிச்சம். என்ன செய்யிறது? உன்னை எப்படி வளர்த்து ஆளாக்கப் போறேனோ தெரியேல்லை....''

பதினைந்து வயதான தர்மசிவராமன், தனது மூக்குக் கண்ணாடியைச் சரி செய்து கொண்டு மௌனமாகத் தலை குனிந்திருப்பான். எந்த நேரமும் தலையின் மேலே சுமை தாங்கியுள்ளவனைப் போல வேதனை பூசியிருக்கிற அவனது முகத்திலே என்றாவது ஒரு புன்னகை இரகசிய மாகவே மலரும். அதுவும் இருட்டு மலர்.

''சரி; இன்றைக்குப் பாடமாக்கவேண்டிய பத்திரிகைத் தலையங்கத்தைப் பார்த்துப் பிரதி பண்ணினாயா? ஷேக்ஸ் பியரின் 'ஒத்தெல்லோ'வில் அந்தப் பதினாறாம் பக்கத்தை மனனம் செய்தாயா.... என்ன பேசாமலே இருக்கிறாய்? தெளிவாக ஆங்கிலத்தை உச்சரிக்க வேண்டுமென்றால் ஆங்கிலத்திலே பேசித்தான் ஆகவேண்டும். சரி, எனது கேள்விக்குப் பதிலைச் சொல்லு...''

தர்மராஜன் ஆங்கிலத்தில் கேட்கிற கேள்விக்கு மிரட்சி யோடு ஆங்கிலத்திலேயே பதில் சொல்வான் தர்மசிவ ராமன். உச்சரிப்பு சுத்தமாயிராவிட்டால் பளீரென்று கன் னத்தைத் தாக்குகின்ற அறையினை அவன் எதிர்கொள்ள வேண்டி வரும். சாதாரண நோவாயிராது அது. காதுகள் கிண்ணென்று அதிர நட்சத்திரங்கள் கண்களினுள்ளே, இடிந்து சிதறுகிற வேதனை அது.

"மூன்றாந்தரமான அரசியல்வாதிகள் இந்த நாட்டையே நாசப்படுத்தி விட்டார்கள். இந்த நாட்டிலேயிருந்து ஆங்கிலத்தை எப்போது தூக்கி எறிந்தார்களோ அன்றுடனேயே இந்த நாட்டினுடைய முன்னேற்றத்தையும் போட்டு உடைத்து விட்டார்கள். ஜோதி, நீ அந்த ஆங்கிலப்பாட்டையும், பதினைந்து சொற்களையும் பாடமாக்கி விட்டாயா...?"

தர்மஜோதி மலர மலர அவனைப் பார்ப்பாள். புஷ்பாவைப் போன்ற வட்டமான முகம். பளீரிடுகின்ற கண்கள். சிறிய மூக்கு. எப்போதுமே தகப்பனாரின் கட்டளைகளைச் சிரமேற்கொண்ட இயல்பினைப் பிரதிபலிக்கிற வார்த்தைகள்.

ஆங்கிலத்திலேயே பதில் வரும்.

"ஜோதீ, எனக்கு உன்னிலை நல்ல நம்பிக்கையிருக்குது. நீ இங்கிலீசிலை நல்லாகவே கதைக்கிறாய்.... யூ ஆர் ஏ பிறிலியன்ற் கேர்ள்."

உற்சாகந் ததும்ப தகப்பன் ஆங்கிலத்தையும், தமிழையும் கலந்து பேசினாலும் தான் அவசரப்பட்டு தமிழிலே பேசிவிட்டால் தகப்பன் துள்ளிக் குதிப்பான் என்பதனை அனுபவ ரீதியாகவே உணர்ந்திருக்கின்ற ஜோதி, மௌனமாகத் தாயை நோக்குவாள். மகளின் பார்வை சொல்லுகிற பாஷையினை உணர்ந்த புஷ்பா, வேதனை கவியப் பெருமூச்செறிவாள்.

ஜோதிக்கு இனிமையான குரல். சங்கீதம் அவளை வசீகரிக்கிறது. அவளுடன் படிக்கின்ற புனிதா, பாரதி, சத்யா ஆகிய மாணவிகள் சங்கீத பாடத்தைப் பயில்கிற போது, இவளும் அவர்களோடு செல்வாள். சங்கீத ஆசிரியை இயல்பாகவே ஆர்வம் மிக்கவளாயிருந்ததால் வெகு ஈடுபாட்டினோடு மாணவிகளுக்குச் சங்கீதம் சொல்லிக்கொடுப்பாள்.

ஜோதிக்குப் பதின்மூன்று வயதானாலும், அந்த இசை வளையத்தினுள்ளே மெய்மறந்து ஆட்படுகின்ற இயல்பினை தன்னையறியாமலே அடையப் பெற்றிருக்கிறாள். பதின்மூன்று வயதிலேயே இசை ஆர்வத்தோடு, ஆர்வமிக்க கண்களோடு, தம்மை மீறிய ஈடுபாட்டோடு ராகசஞ்சாரம் செய்ய முனைகிற இத்தகைய மாணவிகள் இதுவரை இந்த சங்கீதஆசிரியைக்கு வாய்க்கவில்லைத்தான். ஜோதியை ஒரு நாள் பாடும்படி கேட்டாள் அவள். ஜோதி பாடுகிறபோது பாட்டினுள் மெய்மறந்துபோன அவளது முகத்தின் உணர்ச்சியிலே அவளது திறமை கமழ்வதனை உணர்ந்த ஆசிரியை, அவளை சங்கீத வகுப்பிற்கு ஒழுங்காக வரும்படி கேட்டாள்.

ஜோதியின் முகம் பலமிழந்தது.

தகப்பனைப்பற்றி அவள் கவலையோடு கூறினாள்.

மாலையிலேயே தாயிடம் இதனைக் கூறினாள் ஜோதி. புஷ்பாவிற்கு மகளைப் பார்க்க இரக்கமாயிருந்தது. ரகசியமாகவே வானொலியிலே தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கிற மகளினுடைய தாபத்தினை மனதார உணர்ந்த புஷ்பா, கணவனிடம் வெகு தயக்கத்தோடு மகளை சங்கீத வகுப்பிற்கும், டியூஷனுக்கும் அனுப்புவோமா எனக் கேட்டாள்.

மறுகணம், மேசையிலிருந்த 'ரீடர்ஸ் டைஜஸ்ட்', திறந்திருந்த கதவினை மோதி, பொதக்கெனக் கீழேவிழுந்து பக்கங்கள் சிதறி உருக்குலைந்தது.

ஒவ்வொரு மூலையிலும் பயம் தயங்கி நின்றது.

"புஷ்பா.... நீ உன்ரை முட்டாள்தனத்தை பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுக்காதை. நீ தமிழிலை படித்துப் பட்டம் பெற்றும் என்ன பிரயோசனம்? பிள்ளைகளை என்ரை வழியிலை வளரவிடு. உலகத்தை அறியிறதுக்கு இங்கிலீசை விட்டால் வேற வழியில்லை. இங்கிலீஸ் தெரிஞ்சால் உலகத்திலை எந்தப்பக்கத்திலும் போகமுடியும்.

இந்த நாட்டிலை என்னுடைய பிள்ளைகளை நான் கஷ்டப்பட விடமாட்டன். மகாராணி உலகை இப்ப ஆளாமல் இருக்கலாம். ஆனால் இங்கிலீஷ்தான் உலகை இப்போதும் ஆளுது. என்ரை பிள்ளைகளின்ரை உற்சாகத்தை தடுக்காதை. யூ அண்டர்ஸ்ரான்ட்....''

## 2

தர்மராஜனுக்கு அன்று ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. அலுவலகத்தில் அவன் எல்லோருடனும் வெகு உற்சாகத்தோடு நடந்து கொண்டான். அவனுடைய அமைச்சிலிருந்து, அமைச்சர் அவனது பெயருக்கு தாமே கையெழுத்திட்டு எழுதிய கடிதத்தில், யப்பானிய தொழில்துறை அமைச்சரும், அவரோடு சில தொழில் நுட்பவியலாளர்களும், விஞ்ஞானிகளும் உள்ளடங்கிய குழுவொன்று இங்கு வருவதாயும் அவர்கள் இலங்கையின் முக்கியபகுதிகளுக்குச் சென்று ஆய்வு நடத்துவார்களெனவும் அதற்கான எல்லா ஒழுங்குகளையும் தர்மராஜனே முழுப் பொறுப்புமெடுத்து மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார். இந்த விஷயம் குறித்து தர்மராஜன் மந்திரியின் செயலாளரை நேரிலே சந்தித்துப் பேசியபோது, செயலாளர் இன்னொரு மகிழ்ச்சிகரமான தகவலினையும் வெகு சூசகமாகவே தெரிவித்தார். யப்பானில் நடைபெறவுள்ள தொழில் வளர்ச்சிகள் பற்றிய சர்வதேசகக் கருத்தரங்கில் பங்குகொள்வதற்காகச் செல்லவுள்ள தூதுக்குழுவிலே தர்மராஜனையும் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சர் முடிவெடுத்திருப்பதாக அவர் கூறியபோது டோக்கியோவின் உயர்மாடிக் கட்டிடங்களிலே போய் தர்மராஜனின் மனம் தரித்தது. அடுத்த நாளிலிருத்து மற்றவர்களின் கண்களிலே படாமல் யப்பானைப்பற்றி வெளியாகிய நூல்களை வாங்கி, இரவிரவாகப் படிக்கத் தொடங்கினான் தர்மராஜன்.

யப்பான்; எரிந்து புகைந்த தீ மேட்டின் மேலே மனித பலத்தினால் புனரமைக்கப்பட்ட யப்பான்! பசிபிக் சமுத்திரத்தின் தீவுகளாயும், உழைப்பின் வலிமையாகவும் விளங்குகிற யப்பான். இராட்சத மல்லர்களையும், பியூசி மலையினையும், பூக்களின் அலங்கார இகபானாக் கலையினையும், கெய்ஷா முறையினையும், மின்சக்தியின் வல்லமையினையும், ஓய்வறியாத மனித சுறுசுறுப்பினையும் தனது இரத்தோட்டமாகக் கொண்ட யப்பான்... தர்மராஜன் யப்பானுக்குள்ளேயே ஆழ்ந்து போயிருந்தான். பகற்கனவு, இராக்கனவு எல்லாமே யப்பானைச் சுற்றியே இருந்தன. இன்னும் மூன்று வாரங்களிற்குப் பிறகுதான் யப்பானியக் குழு இலங்கைக்கு வருகை தரவிருந்த போதிலும், இப்போதே மிகவும் சுறுசுறுப்பாக அதற்கான ஆயத்த வேலைகளினைச் செய்து கொண்டிருந்தான் தர்மராஜன். அரசாங்கத்தின் எல்லா சாதன வசதிகளையும் இந்த நடவடிக்கைக்காகப் பயன்படுத்தலாம் என்ற அதிகாரத்தையும் தர்மராஜனுக்கு அமைச்சு கையளித்திருந்தது. தர்மராஜனின் வீட்டு வாசலில் எந்த நேரமும் அமைச்சின் வாகனங்கள் வருவதும் போவதுமாயிருந்தன. தொலைபேசி மணி ஓயாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. வீட்டிலேயும் ஒரு உதவியாளர் கடிதங்களை 'டைப்' அடித்துக் கொண்டிருந்தார்.

அவர் 'டைப்' பண்ணுவதனைப் புஷ்பாவுக்குச் சுட்டிக் காட்டியவாறு தர்மராஜன் கூறினான் :

"நீ மட்டும் இங்கிலீஷ் படித்திருந்தால் உன்னையே இப்ப எனக்கு ஒரு உதவியாளராக நான் வைத்திருக்க முடியும். நீயோ ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத விதமாக தமிழிலை படித்துப் பட்டம் பெற்று இப்போ என்னுடைய நிழலிலை வந்து நிற்கின்றாய்; இங்கிலீஷ் படிச்ச யாராவது வேலையில்லாமலிருக்கிறதை நீ கண்டிருக்கிறியா; கேட்டிருக்கிறியா? மண்ணாங்கட்டிப் பாஷைகள் எல்லாம் படிப்பு மொழியான பிறகு எவ்வளவு கஷ்டம் அனுப

விக்கிறம் பார்த்தியா? யப்பானைப் போல நாடுகள் முன்னேறினதுக்கும், நாங்கள் இருட்டுக்குள்ளை கிடக்கிற துக்கும் இப்ப காரணம் உனக்கு விளங்குதுதானே....''

அவனின் குத்துக்கதைகள் புஷ்பாவின் நெஞ்சினைக் குரூரமாக வடுப்படுத்தி வேதனையை உண்டாக்கின...

இவையெல்லாமென்ன; ஓரிரு வருஷத்து துயரங்களா? பதினேழு வருடத்துத் தொடர்கதையல்லவா? அவள், தனது துயரத்தினைத் தானே ஆற்ற முயன்றுகொண்டு அங்கிருந்து நடந்தாள். ஆயினும் சில நாட்களாக அவளுக்கும் பிள்ளை களுக்கும் கொஞ்சம் ஆறுதலிருந்தது. அந்த வீட்டிலே தர்மராஜன் சில விதி முறைகளை வகுத்திருந்தான். காலை யிலே ஆங்கிலத் தினசரி வந்தால் முதற் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை எல்லாவற்றையும் அவர்கள் வாசிக்க வேண்டும். பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கத்தை ஒவ் வொரு நாளும் வாசித்து அதனை, தர்மசிவராமன் பிரதி பண்ண வேண்டும். அர்த்தம் விளங்காத ஆங்கிலச் சொற் களிற்கு 'டிக்ஷனரி' யைப் பார்த்துக் கருத்தைத் தெரிந்து அதனை மனனம் செய்யவேண்டும், ஒவ்வொரு நாளும் ஆங்கில இலக்கியத்திலிருந்து தர்மராஜன் கொடுக்கின்ற கவிதைகளையோ, 'சனற்சை' யோ, நாடக வசனங் களையோ பாடமாக்கி சரியான ஆங்கில உச்சரிப்போடு ஒப்புவிக்க வேண்டும். அவன் ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்டால் ஆங்கிலத்திலேயே பதில் சொல்ல வேண்டும். தவறினால் கன்னத்திலே பளார்... பளார்.... பளார்; உபதேசத் திட்டுகள்.... தாங்க முடியாத நையாண்டிச் சித்திரவதைகள்....

யப்பானிய தூதுக் குழுவினை இலங்கையின் சில பகுதி களுக்கு அழைத்துச் செல்வதற்கான பொறுப்பு தர்மராஜ னுக்கு கையளிக்கப்பட்டதன் பிறகு, அவன் அந்த வேலை களோடு ஐக்கியமாகியமையினால் வீட்டின் சில ஒழுங்கு முறைகளும் நெகிழ்ந்து தளர்ந்து போயின. புஷ்பாவோடு பிள்ளைகள் விழுந்து விழுந்து தமது தாய்மொழியிலேயே

கதைத்துக் களித்தார்கள். 'ரீடர்ஸ் டைஜஸ்டு'ம், 'நியூஸ் வீக்'கும், ஆங்கில இலக்கியங்களும் இவர்களைப் போலவே ஓய்வு கொண்டன. புகை படிந்த கண்ணாடியைப் பளிச் சென்று துடைத்து விட்டாற்போல தர்மசிவராமனின் முகம் தெளிந்து போயிருந்தது. அடுத்தடுத்து இரண்டு நாட்கள் பள்ளிக் கூடத்திற்கு 'கள்ளம் போட்டு' தமிழ்ப்படங்களினை 'மேட்னி ஷோ'வில் பார்த்தான் தர்மசிவராமன். தர்மப் பிரியதர்ஸனி இதுவரை காலமும் பள்ளிக்கூடத்தில் வாசித்த தமிழ் நாவல்களினையும், சஞ்சிகைகளையும் வீட்டிலே கொண்டுவந்து வாசித்தாள். விடுதலைக் காற்றினை இப் போதுதான் சுவாசிப்பவர்களைப் போல ஆனந்தம் புஷ்பித்து மணக்கிற அவர்களின் முகத்தினைப் பார்த்து மிகுந்த நிறைவு கொண்டு புன்னகை செய்தாள் புஷ்பா.

தர்மஜோதி வானொலியில் இசைப்பயிற்சி நிகழ்ச்சி யினை அவதானித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். வெகு சுதந்திரமாக, தன்னை மறந்த லயிப்பிலே வானொலி இசையிலே ஒன்றிப் போயிருந்தவள் திடீரென்று உள்ளே வந்த தர்மராஜனின் செருமலிலே சிந்தனை கலைந்து, திடுக்கிட்டு அச்சம் உடலெல்லாம் உலுப்பத் திடுமென எழுந்தாள்.

''புஷ்ப்பா...பா''

கிறீச்சிட்டு எழுந்தது தர்மராஜனின் குரல்.

''இந்த வீட்டிலை என்ரை கண்காணிப்பு இல்லாமல் ஒன்றுமே நடவாது, எல்லாம் தலைகீழாகிப் போச்சுது.... புஷ்பா....''

வானொலியின் குமிழைப் படக்கென்று திருப்பினான் தர்மராஜன். யாரோ ஒருவன் திடீரென 'பொப்' பாடலை சீறிய குரலிலே பாடத் தொடங்கினான். தர்மராஜனின் குரல் அந்தக் குரலின் கழுத்தையும் நெரித்து உச்சஸ்தாயி யில் கிறீச்சிட்டது.

''இந்த வீட்டிலை ரேடியோவும் தமிழ் பேசக்கூடாது என்று நான் சொன்னது உங்கள் எல்லாருக்கும் மறந்து போச்சுதா?''

பொப் இசைக்காரனின் குரல் ஓய்ந்திட ஆங்கிலச் செய்தி அறிக்கையை வாசிக்க ஆரம்பித்தாள் மிஸிஸ். ஷிராணி கூரே.

## 3

யப்பானிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் முதலாவது செயலாளர் சிவலிங்கமும், யப்பானிய அமைச்சர் குழுவோடு இலங்கைக்கு வருவதாகக் கிடைத்த கடைசிச் செய்தியைப் பார்த்தபோது தர்மராஜனுக்கு மனதிலே சிறிய தொய்வு விழுந்தது. யப்பானியக்குழுவினை தானே முற்றிலும் வழிநடத்திச் சென்று, இங்கு தொழில் முயற்சிகளினை மேற்கொள்வது சம்பந்தமாக விரிவான விளக்கங்களை அவர்களுக்கு விளங்கப்படுத்துவதற்கு அத்துறையிலே தன்னைப் பரிபூரணமுள்ளவனாகப் பயிற்றியிருந்தான் தர்மராஜன். எனினும் என்ன, எப்படியும் தன்னிடம்தான் அமைச்சு முழுப்பொறுப்பையும் சுமத்தியுள்ளதால், எல்லா ஏற்பாடுகளையும் தானேதான் கவனிக்க வேண்டி வரும் என்று ஏற்கனவே செய்த ஆயத்தங்களே சரியானவை என்று முடிவெடுத்தவனாக, சிவலிங்கத்தைப்பற்றிய தகவல்களை சேகரிப்பதிலே ஈடுபட்டான் தர்மராஜன். சிவலிங்கம் வடலியடைப்பைச் சேர்ந்த 'நல்ல ஆள்'. கொழும்பிலேயே அனேக காலம் வேலை செய்து பின்னர் நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றி, நிர்வாக சேவையிலே தெரிவாகி அரசாங்கங்களின் செல்வ மகனாகி கடந்த ஆறு ஆண்டுகாலமாக தொடர்ந்து யப்பானிலுள்ள இலங்கைத் தூதரகத்திலே பணியாற்றி வருபவன். திருமணமானவன். மனைவி

யைச் சொந்தத்துள் திருமணம் செய்திருக்கிறான். நல்ல திறமைசாலி.

அன்று மாலை சில தொழில் நுட்பவியலாளர்களையும் இஞ்சினியர்களையும் கொண்ட கூட்டமொன்றினை நடத்தியபோது, அவர்கள் யப்பானியக் குழுவுக்கு தாங்கள் ஒரு இரவு போசனத்தினைக் கொடுக்க விரும்புவதாகக் கூறி தர்மராஜனிடம் அதற்கான அனுமதியைக் கோரினர். இதுபற்றி அமைச்சின் செயலாளரோடு பேசித்தான் ஒரு முடிவினுக்கு வரவேண்டும் என்பதை தர்மராஜன் நன்றாகவே அறிவானாயினும், அதனை வெளிப்படையாகக் கூறாமல்- நாளை, தான் யோசித்துப் பதில் சொல்வதாக அவர்களுக்குக் கூறினான். இரவு படுக்கையில் கிடந்தபடியே யோசித்துக் கொண்டிருக்கையில் திடுமென அவன் மனந்தனிலே எண்ணமொன்று பளிச்சிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் யப்பானியத் தூதுக் குழுவின் பாராட்டுதல்களையும் திருப்தியினையும் பெற்றுக் கொண்டுவிட்டால் நிச்சயமாக, தானும் யப்பானிற்கு சிவலிங்கத்தைப் போல ஐந்தாறு வருஷங்களுக்கு ஏதாவதொரு விதத்திலே செல்வதற்கு வாய்ப்புகள் ஏற்படும்; அந்த வாய்ப்பினைப் பயன்படுத்தியே தன்னுடைய மூத்த மகன் தர்மசிவராமனை யப்பானிலேயே உயர் கல்வி பெறுவதற்கு அனுமதி பெறலாம் என தர்மராஜனின் மனம் சொல்லிற்று. இதற்கு முன்னேற்பாடாக அங்கிருந்து வருகின்ற தூதுக்குழுவினை மிகவும் திருப்தியும் மகிழ்வும் கொள்ளவைக்க வேண்டும். தன்னுடைய நிர்வாக அறிவாலும், விஷயத்தைப் புரிய வைக்கிற ஞானத்தாலும் சரளமான ஆங்கிலப் பேச்சுவன்மையிலும் அவர்கள் வெகு நிச்சயமாகக் கவரப்பட்டு விடுவார்கள் என்பதில் ஒருசந்தேகமுமில்லை. ஆனால் இதனைவிட மேலும் ஏதாவது செய்தே ஆகவேண்டும்.... 'அவர்களுக்கு எனது சொந்தச் செலவிலே சிறந்ததொரு விருந்துபசாரம் செய்யவேண்டும். மகிழ்விலே அவர்கள் நனைந்து தோயும்படி இந்த விருந்து அமைய வேண்டும்.'

சிந்தித்துக் கொண்டிருந்த தர்மராஜனின் மனம் இப்போது அமைச்சின் செயலாளரை நினைத்துக் கொண்டது. செயலாளர், வெள்ளைக்காரன் காலத்து அதிகாரி, யப்பானின் பியூசி எரிமலையைப்போல, குணாதிசயம் அறிய முடியாதவன். பியூசி எரிமலை உறங்கிக் கொண்டேயிருக்கும். திடீரென அதிர்ந்து குமுறினால் மனிதனால் தாங்க முடியாது போய்விடும். பியூசி மலையைப்பற்றி நினைக்கிற பொழுதெல்லாம் இப்போது செயலாளரைத்தான் நினைவுக்கு வருகிறது அந்த மனிதனை சரிப்பண்ண வேண்டும். அவரது 'வீக்பொயின்ற்' தர்மராஜனுக்கு நன்றாகத் தெரியும். அதனை உபயோகித்துத்தான் இந்த விடயத்தை வெற்றிகரமாக நடத்தமுடியும். குமாரிஹாமிக்கு தொலைபேசி எடுத்துப் பேசியபோது தடங்கலின்றி அதுவும் ஏற்பாடாகி விட்டது. தர்மசிவராமனுக்கு நல்ல நாகரிகமான இரண்டு மூன்று உடுப்புகள் தைக்கவேண்டும். அதனைவிட ஆங்கிலத்தில் சரளமாக அவர்களுடன் பேசுவதற்கேற்ற முறையில் இன்னும் சிறப்பாகப் பயிற்சி கொடுக்க வேண்டும். அவனது அலுவலகத்தில் 'ஸ்டெனோ'வாக பணிபுரிகிற மிஸ். சொலமன் அட்சர சுத்தமாக ஆங்கிலம் பேசுவாள். அவளோடு பேசி தினமும் மூன்று மணித்தியாலங்களுக்கு தர்மசிவராமனுக்குப் பேச்சுப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மிஸ். சொலமன் அதை மறுக்க மாட்டாள். புஷ்பாவிடம் சில அடிப்படையான ஆங்கிலப் பேச்சு வழக்குகளைக் கூறி, அவற்றை நினைவில் வைத்திருக்கும் படியும், பேசுவதில் சிக்கல் வந்தால் வெறுமனே புன்னகை செய்துவிட்டு மேற்கொண்டு பேசாதிருக்கும் படியும் தர்மராஜன் அவளிடம் அறிவுறுத்தினான். அந்த வேளையிலும் ஆங்கிலத்தினை விட்டு, தேசிய மொழிக்கு கல்வித் திட்டத்தை மாற்றிய மூன்றாந்தர அரசியல்வாதிகளைத் திட்டித் தீர்க்கத் தவறவில்லை தர்மராஜன். இப்படியான சந்தர்ப்பங்களிலே புஷ்பா மௌனம் சாதிப்பதனையே வழக்கமாகக் கொண்டு விட்டாள்.

## 4

விமானத்தளத்திலே ஜப்பானியத் தூதுக் குழுவை, அமைச்சர் தனது அதிகாரிகளுடன் சென்று வரவேற்றார். பரஸ்பரம் ஒருவரையொருவர் அறிமுகம் செய்துகொண்ட பின் அவர்களுக்குரிய தங்குமிடமான ஐந்து நட்சத்திர ஹோட்டலிற்கு அவர்களை அழைத்துச் சென்றான் தர்ம ராஜன். அவர்களுடன் சிவலிங்கமும் நிழல்போலத் தொடர்ந்து வருவது தர்மராஜனுக்கு எரிச்சலினை மூட்டியதை தர்மராஜனின் முகம் தெட்டத் தெளிவாகக் காட்டிற்று. எனினும் சிவலிங்கத்தையும் பகைத்துக்கொள்ள விரும்பாத தர்மராஜன் தருணம் வருமாயின் ஆங்கிலேயனின் 'பிரித்தாளுகின்ற தந்திர'த்தை மேற்கொள்ள மனதினுள்ளே திட்டமிட்டிருந்தான்.

நிகழ்ச்சி நிரலில் முதல் நாளிலிருந்து மூன்று தினங்களுக்கு அவர்கள் மகாவலிகங்கைப் பிரதேசத்திலே தங்கி-தொழில், நிர்மாண வாய்ப்புகளைப் பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். மறுநாள் விடிந்தால் அவர்களை அழைத்துக்கொண்டு குளிரூட்டப் பெற்ற மோட்டார் வாகனங்களிலே மகாவலிகங்கைப் பிரதேசத்திற்குச் செல்லவேண்டும் என்று நினைத்துக்கொண்டு மாலை, ஹோட்டல் வாசலுக்குப் போனபோது அறையினுள் சிவலிங்கம் இருந்ததைக் கண்டதும் தர்மராஜனுக்குச் சினம் பொம்மிப் பொருமிற்று. அதை மனதினுள்ளேயே வாங்கிக் கொள்ளாதவன் போல, சிவலிங்கம் தனது வழுக்கைத் தலையினைத் தடவியவாறே, ''நானும் இந்த ஹோட்டலிலேயே தங்கியிருக்கிறேன். அதுதான் வசதி. இவர்களுடன் உதவிக்குச் செல்லும்படி எனக்கு கூறப்பட்டிருக்கிறது என்றபோது அதற்குப்பதில் சொல்ல தர்மராஜனின் வாய் உன்னிய வேளையில் அங்கிருந்த ஹியூஜிகுக்குடா என்ற விஞ்ஞானி சிவலிங்கத்தைப் பார்த்து யப்பானிய மொழியில் ஏதோ கேட்க, சிவலிங்கமும் யப்பானிய மொழியிலேயே பதில் கூறினான்:

''மிஸ்டர் தர்மராஜன், நீங்கள் ஒரு சிறந்த நிர்வாகி என்று அமைச்சிலே கூறினார்கள். அது நல்லது. ஆனால் உங்களுக்கு யப்பானிய மொழி தெரியுமா?''

அவனைப் பார்த்து அலட்சியமாக சிரித்தான் தர்ம ராஜன்.

பின்னர் சிவலிங்கத்தைப் பார்க்கிலும் சரியான உச் சரிப்புடன் ஆங்கிலத்திலே தர்மராஜன் பதில் சொன் னான்:

"வியப்பாயிருக்கிறது நீங்கள் கேட்பது? தொழில் நுட்பவியல் ஆராய்வு சம்பந்தமான சகல விஷயங்களையும் இந்த அறிஞர்களுக்கு வெகு தெளிவாக என்னால் ஆங்கிலத் திலேயே விளங்கவைக்க முடியும். அவர்களுக்கும் ஆங்கிலத் திலே பரிமாற்றம் கொள்வதுதான் சுலபமாயிருக்கும்.''

அவனது வார்த்தைப் பரபரப்பினைக் கவனத்திலே கொள்ளாத சிவலிங்கம் நிதானமாகக் கூறினான்:

"மிஸ்டர் தர்மராஜன், நீங்கள் எண்ணியிருப்பது தவறு. இந்தத் தூதுக்குழுவில் வந்துள்ள எவருக்கும் யப்பானிய மொழியினைத் தவிர வேறு பாஷையே தெரியாது... அத்தோடு...."

"என்ன?'' அதிர்ந்துபோன தர்மராஜனின் மூளைக் குள் பியூஜி குமுறிக் குழம்பு கக்கிற்று.

''யேஸ், மிஸ்டர் தர்மராஜன். நீங்கள் நினைப்பது போல அவர்கள் தங்களது ஆராய்ச்சியை ஆங்கில மொழி யிலே நடத்தவில்லை, யப்பான் மொழியில் படித்து, யப்பான் மொழியிலேயே சிந்தித்து, யப்பானிய மொழியிலேதான் சாதனைகளை நிலைநாட்டுகிறார்கள். அவர்கள் தங்கள் பலத்திலேதான் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்... எங் களைப்போல ஒருபுறம் தமிழ் விழாக்கள் நடத்திக்கொண்டு மறுபுறத்தில் இன்னமும் அடிமை மனோபாவத்தோடு அவர்

கள் வாழ்க்கை நடத்தவில்லை. நாங்கள் இன்னமும் மகாராணி எங்களை வந்து ஆளவேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கிறோம்...''

சிவலிங்கம் அடங்கிய குரலிலே கூறிக்கொண்டிருக்கின்ற போது, பியூஜி மலையின் எரிமலைக்குழம்புகள் தர்மராஜனின் மூளையினுள் தீயாய், தணலாய் சீறிக்கொண்டிருந்தன...

*(1981)*

சிவலிங்கம் கோடரியை எடுத்தபோதே, அவரது மனைவி தவமணி, ''இதென்ன வேலை செய்யப் போறீங்கள்? பேசாமல் உள்ளை போய் உங்களின்ரை அலுவலுகளைப் பாருங்கோ.... நாளைக்குப் பிறகு 'ஒபீசி'லை அலுப்போடை இருக்க வேண்டிவரும்... அதோடை நீங்கள் விறகு கொத்துறதை ஆராவது ஆட்கள் பார்த்தாலும் பெரிய வெட்கக்கேடு. கொஞ்ச நேரத்திலை ராமுவை அனுப்பி நான் அவன் கந்தனைக் கூப்பிட்டு விறகைக் கொத்துவிக்கிறன்....'' என்று செல்லமாகத் தடுக்க முயன்றபோதும் சிவலிங்கம் அதனைக் கேட்பதாக இல்லை.

நாற்பத்தி ஐந்து வயதான சிவலிங்கம், வாட்டசாட்டமாக வளர்ந்திருந்தார். உருண்டையான மளமளத்த முகம். அரசு உயர் அதிகாரியான இவர், நகரத்தினிலே அரசாங்க திணைக்களத்தின் உதவி ஆணையாளராகப் பணிபுரிகின்றார். நகரத்திலிருந்து எட்டுமைல் தூரம் தள்ளியிருக்கின்ற பிறந்த ஊரிலேயே சொந்த வீடு தினசரி காரிலேயே அலுவலகம்,

செல்வது. நாலரை மணிக்கு 'ரிக்கிரியேஷன் கிளப்'பினில் இலேசான இளைப்பாறல். தாக சாந்தி. டென்னிஸ் விளையாட்டு. ஆறுமணிக்கு வீடு திரும்பி விடுவார். ஓய்வு நாட்களான சனி ஞாயிறுகளில், சனியன்று நல்லஎண்ணெய் முழுக்கு. இறைச்சிக்கறி. அன்றையதினம் வீட்டை விட்டே அவர் வெளிக்கிளம்ப மாட்டார். பின்னேரம் நல்ல ஓய்வு; உறக்கம். ஞாயிறன்று காலையில் வீட்டு வேலைகள். மாலை நான்கு மணிக்கு தவமணியும், பிள்ளைகளும் புடைசூழ நகர சினிமாத்தியேட்டருக்கு விஜயம்.

சிவலிங்கம் வெகு கறார்ப் பேர்வழி என்பதனை விட, அவரது மனைவியாலேயே இப்படியிருக்கிறாரென்பதுதான் பொருத்தமானது. இதனாலேயே பல நவீன வசதிகளைக் கூட ஆடம்பரமான செலவென்று அவர்கள் ஒதுக்கி வைத்திருந்தார்கள். அவர்களுடைய திருமணத்தின்போது பரிசளிக்கப்பட்ட இரட்டை அடுக்கு மின்சாரக் குக்கர் வீட்டிலே இருந்த போதும் எப்போதாவது அவசரத்தின்போது தான் அது இயங்குவது வழக்கம். இப்போது அதுவும் பழுதடைந்து விட்டது.

"எங்களின்ரை தோட்டத்திலேயே நல்ல எரியக்கூடிய விறகுகள் இருக்குது. அதுகுமில்லாட்டில் பக்கத்து விறகு காலைக்காரன் தூக்குக் கணக்கிலை விறகு கொண்டு வந்து போடுறதுக்கு எந்த நேரமும் தயாராயிருக்கிறான். பிறகு என்னத்துக்கு 'கரண்டு'க்கு வீணாகக் காசைக் கொட்ட வேணும்?"

கீச்சுக் குரலிலே தவமணி இப்படிக் கூறியதைக் கேட்டாலே போதும்; சிவலிங்கத்தின் மளமளப்பானமுகம் பெருமிதத்தினால் மலர்ந்து விடும். தன்னுடைய மனைவியின் ஆழ்ந்த அறிவுக்குப் பாராட்டுக் கூறியவாறு முணுமுணுப்பார். "தவம் மட்டும் நிர்வாக சேவையிலே இருப்பாளானால் இந்த அரசாங்கம் பயன்படுத்தத்தக்க எத்தனை அற்புதமான திட்டங்களை உருவாக்கிக் கொடுத்திருப்பாள்!

என்ன செய்வது? அவளுக்கொரு சந்தர்ப்பம் வாய்க்காமற் போய்விட்டது...''

விறகுகாலைக்காரன் இரண்டு மாதங்களுக்கு முன்னால், மூன்று தூக்கு-கட்டை விறகு கொண்டு வந்து போட்டிருந்தான். ஒரேயடியாக விறகுக் கட்டைகளைக் கொத்தி வைக்கக்கூடாது என்பது தவமணியின் கொள்கை. இரண்டு தூக்கு விறகுக் கட்டைகளை வழமை போல சுப்பனைக் கொண்டே அவள் கொத்துவித்தாள். காலையிலே விறகு கொத்த வந்த சுப்பனுக்குத் தேநீர் கொடுத்துவிட்டு, ''சுப்பா, விறகு கட்டைகளைச் சின்னச் சின்னத் துண்டுகளாகக் கொத்து. பெரிய கொள்ளியென்றால் அடுப்புக்குள்ள வைக்க முடியாது. ஒரு தூக்கு விறகு கொத்தறதுக்கு உனக்கு ஐந்து ரூபா கணக்குப் போடுறதெல்லாம் அதுக்காகத்தான்...'' என்று கண்டிப்பான குரலிலே கூறினாள். இப்படி ஐந்து வருஷங்களாகவே அங்கு விறகு கொத்தி வருகின்ற அவனுக்கு அவள் எவ்வித அலுப்புமின்றிக் கூறி வருகின்றாள். காலை ஒன்பது மணிக்கு கோடாரியைச் சுப்பன் எடுத்து விறகு கொத்த ஆரம்பித்தால், இடையிலே பத்து நிமிஷங்களுக்கு இளைப்பாறி-பிற்பகல் இரண்டுமணிக்குள் இரண்டு தூக்கு விறகுக் கட்டைகளையும் கொத்தித் தீர்த்து விடுவான். இறுகிப்போன உடலிலிருந்து வியர்வை வழிய வழிய, கொத்து விறகுகளை ஒழுங்காகக் கொண்டு போய் சமையலறைக்கு அருகேயுள்ள சிறிய அறையினுள்ளளே அடுககி வைத்துவிட்டு வெளியே வருகின்ற சுப்பனுக்கு, பழைய சோற்றினைக் கொடுப்பாள் தவமணி. உடலிலே பொங்கி வழிகின்ற வியர்வையினை, இடுப்பிலே கட்டியிருக்கும் துண்டினை அவிழ்த்துத் துடைதது விட்டு பழைய சோற்றினை மிகுந்த நன்றியறிதல் பொழிகின்ற கண்களினோடு வாங்கிக் கொள்ளுவான் சுப்பன்.

சுப்பனுக்கு உறவென்று சொல்லிக் கொள்ள யாருமே இல்லை. விவரமறிந்த நாளிலிருந்து அன்றாட வயிற்று நிரம்பலுக்காகவே அவன் வேலை செய்து வருகிறான்.

கடுமையான உடல் உழைப்பினால், இருபது வயதிலேயே பொலிகடாவின் தோற்றம் அவனுக்கு வந்துவிட்டது. கருமையான, குட்டி டார்ஜான் உருவம். உருவ வளத்திற்கு எதிர்த்தன்மை கொண்ட மூளை வளர்ச்சி. இரண்டு ஒற்றை ரூபா நாணயங்களைக் கையிலே கொடுத்து விட்டு, "சுப்பா. உனக்கு ஐந்து ரூபா தந்திருக்குது...போதுந்தானே ..."என்று கூறினால் திருப்தியோடும் நன்றி பொங்கவும் தலையசைத்துக் கொள்ளுகின்ற அறிவுத்திறன், வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு, தவமணியிடம் அவன் முழுப்பணத்தையும் வாங்கிக் கொள்வதில்லை. ஐந்து வருஷங்களின் முன்னர், சிவலிங்கம் சொன்ன யோசனையினால் ஏற்பட்ட உடன்பாடு அது.

"டே சுப்பா, கையிலை கணக்கு வழக்கில்லாமல் காசிருந்தால் நீ வீணாகச் செலவழித்துப் போடுவாய்... நீ விறகு கொத்துகிற காசை, அம்மாவே கணக்கெழுதி வைக்கட்டும், தேவைப்படுகிறபோது நீ வாங்கிக்கொள்ளலாம்...உன்னட்டைக் காசிருந்தால்தானேயடா வடிவான பொம்பிளைகள் உன்னைக் கலியாணம் செய்யத் தேடி ஓடி வருவாளவை, உன்னுடைய காசு அம்மாவிட்டை பத்திரமாயிருக்கும். உன்னட்டை இருந்தாலென்ன அவவிட்டை இருந்தாலென்ன இரண்டும் ஒன்று மாதிரித்தானடா...."

தவமணிக்கு கண்ணடித்துவிட்டு, சிவலிங்கம் இப்படிக் கூறும்போது, "பொம்பிளைகள் உன்னைக் கலியாணம் செய்ய தேடி ஓடி வருவாளவை" என்ற சொற்கள் அழுத்தமாக வெளிவரும். அந்தச் சொற்களிலே, சுப்பனில் உடலும் மனமும் பூரித்துச் சிலிர்க்கும். மெல்லிய முறுவல் இதழ்க் கடையிலே வெளிச்சமிட, தளதளத்து நாணுகின்ற குரலிலே "சும்மா போங்கய்யா...." என்று கூறியவாறு அங்கிருந்து நழுவிச் சென்று விடுவான் சுப்பன்.

சென்ற வாரம், சுப்பன் திடீரெனத் தவமணியிடம் வந்து தனக்கு மிகவும் அவசரமாக ஐம்பது ரூபா வேண்டுமென்று கேட்டான். தவமணி அதிர்ந்தே போய்விட்டாள்.

"எவ்வளவு பெரிய தொகையான பணத்தினை என்ன இலேசாக இவன் கேட்கின்றான்? இதெல்லாம் நாங்கள் இவனுக்கு கொடுத்த இடத்தாலைதான் வந்தது..." என்று நினைத்துக் கொண்டவள், தனது மன உணர்வுகளினை வெளிப்படுத்தாமலே, "இவ்வளவு பெரிய தொகை, இப்ப உனக்கு எதுக்காக வேணும் சுப்பா?" என்று கீச்சுக் குரலிலே கேட்டாள்.

சுப்பனோ அவளது கேள்வியைப் பற்றியே கொஞ்சமேனும் அக்கறைப்படாதவனாக, "என்னுடைய கணக்கிலையுள்ள காசிலைதான் அம்மா கேட்கிறன். அவசரமாகத் தேவைப்படுகுது. உடனே தாருங்க" என்றான் பரபரப்போடு.

உயர் அரசு அதிகாரியின் மனைவியை அந்தக் கூலிக்காரன் முற்றாகவே உதாசீனம் செய்கிறாற்போல தவமணி உணர்ந்தாள். மெலிதாயுருவெடுத்து எழுந்த கோபம், இப்போது அவளின் மனதினுள்ளே அக்கினிநாக்குகளாகித் திமிறியது.

"நான் கேட்டது உனக்கு விளங்கவில்லையோ?" கோபத்தோடு சீறினாள் தவமணி. கண்கள் சிவப்பேறி, மூக்குநுனி ஜிவ்வென்றது.

"எனக்கு உடனே காசு வேணும்...."

சுப்பனின் பதிலும் இறுக்கமாகவே வெளியாயிற்று. தவமணியின் 'பிரஷர் உடம்பு' இப்போது கொதித்து தடதடவென்று ஆடிற்று. கைமுஷ்டிகளை இறுக்கிக்கொண்டு பற்களை நரும்பியவாறு அடிக்குரலிலே கத்தினாள்:

"எளிய ராஸ்கல்....என்னோடேயா எதிர்ப் பேச்சுப் பேசுகிறாய்? என்னுடைய வீட்டுச் சோற்றைத் தின்று வளர்ந்த நாயே... உனக்கு நாங்கள் ஒரு சதக் காசும் தருமதி இல்லையடா...இனி இந்த இடத்திலை நின்று ஏதாவது

கதைச்சியோ உன்னைப் பொலிஸிலைதான் பிடிச்சுக் கொடுப்பன்...''

'பொலிஸ்' என்ற சொல்லினை தவமணி உச்சரித்ததும் சுப்பன் ஆடிப்போய்விட்டான். அவனது பராக்கிரமமான ஆகிருதி குறுகிப்போய்விட்டது. நாக்கு, மேலண்ணத்தில் ஒட்டிக்கொள்ள உடலெங்கும் வியர்வை துளிர்த்துப் பொங்கிற்று. சிறிதுநேரம் தலைகுனிந்தவாறே எதையோ யோசித்தவன், ஒன்றுமே பேசாமல் தளர்ந்த நடையோடு அங்கிருந்து போய்விட்டான்.

புதன்கிழமை, சமையலுக்கு விறகில்லாமற் போய் விட்டது. தென்னந்தோட்டத்தினுள்ளே கிடந்த பாளை மட்டைகளை வைத்து அடுப்பெரித்து ஒருவாறு சமாளித்து கொண்டாள் தவமணி. விறகு கொத்துவதற்காக ஆளைத் தேடி அலுத்துப் போனவளுக்கு, சனிக்கிழமை பிரச்சினை யாகி விட்டது. எண்ணெய் முழுக்கு நாளான அன்று, இறைச்சிக் கறி சமைக்க கொத்துவிறகுதான் வேண்டும்; அப்போதுதான் கறி சுவையாயிருக்கும்.

விடியற்காலை ஏழு மணிக்கு, படுக்கை விட்டெழுந்து முட்டைக்கோப்பி குடித்த பின்னர், அரைக்காற்சட்டை யணிந்த சிவலிங்கம், விறகு—கொத்துவதற்காக கோடாரி யினை எடுத்தபோது, தவமணி அதைத் தடுத்தாலும் சிவ லிங்கம் கேட்பதாயில்லை. அவரது சுபாவத்தினை நன் குணர்ந்த தவமணி, மனதினுள்ளே சுப்பனைத் திட்டி சபித்தவாறே அறைக்குட் சென்றாள்.

## 2

விறகு கொத்துவதென்பது எவ்வளவு சிரமமான காரியமென்பதனை இப்போதுதான் புரிந்துகொண்டார்

சிவலிங்கம். விறகுக் கட்டையைத் தூக்கிப்போட்டு வளமாக நின்று இருமுறை கோடரியினைக் கட்டையின் மீது ஓங்கிக் கொத்தியபோதும், கொத்துக்கள் சறுக்குண்டு கட்டை எவ்விதமான சேதமுமின்றி நிலத்தினுள் அமுங்கிப் போய்விட்டது. மீண்டும் அதைத் தூக்கி வேறிடத்திலே போட்டு மூச்சைப் பிடித்து நாலைந்து தரம் கொத்தினார் எல்லாமே சறுக்குண்டு போயின. வியர்வை உடலெங்கும் பொங்கி வழிந்தது. மூச்சிரைத்தது. நாக்கு வரண்டு தண்ணீருக்காய் கெஞ்சிற்று. நெற்றி வியர்வையினை வழித்தெறிந்தவர், தன்னை மீறிய ஆக்ரோஷத்தினோடு இரு கைகளினாலும் கோடரியை இறுக்கிப்பிடித்து ஓங்கியவாறு விறகுக் கட்டையிலே ஆழப் பாய்ச்சினார். ஒரு விறகு சிராய், கட்டையிலிருந்து கிழிந்து அவரின் காலருகே எற்றுண்டு விழுந்தது. இவர் முகந்தனில் இலேசான புன்னகை. இப்படி ஆறேழு சிராய்களை கொத்தி எடுத்தாலே போதுமென மனம் ஏக்கங் கொண்டது. உற்சாகத்தோடு மீண்டுங் கொத்தினார். பூப்போன்ற உள்ளங்கைகள் கன்றிச் சிவந்துவிட்டன. வாயால் கைகளை ஊதிவிட்டார். மூச்சிரைக்க, வியர்வை வழிய ஒரு மணித்தியால விரயத்திற்குப் பிறகு பெரிதாயும் சிறிதாயும் இருபத்து மூன்று சிராய்களைக் கொத்தி விட்டார் சிவலிங்கம். தவமணிக்கோ அவர் படுகின்ற கஷ்டத்தினைப் பொறுக்க முடியவில்லை. தோடம்பழச்சாற்றினைக் கொண்டு வந்து கொடுத்தவள் மிக வாத்ஸயத்தோடு துவாயினால் அவரது முகத்தையும், மேலுடம்பையும் ஒற்றியெடுத்தாள். குரலிலும், கண்களிலும் கெஞ்சல் நிறைந்திருந்தது.

"இனிப்போதும் விடுங்கோ.... இவ்வளவு விறகும் போதும்.... உங்களுக்கு உடம்பு பச்சைப் புண்ணாகிப் போயிடும்.... இப்பிடி வேர்வை ஓடப் பாடுபட்டால் திடீரென ஏதாவது நோய் வந்திடும். உங்கடை உடம்பு இதையெல்லாம் கொஞ்சமும் தாங்காது.... எனக்காக.... இனி விட்டிடுங்க..."

தவமணியின் வேண்டுகோளினை அவர் ஏற்றுக்கொண்டார். கைமுட்டுகளெல்லாமே கழலுவதுபோல வலிக்கின்றன தோட் சதையிலும், முழங்கால் மூட்டுகளிலும் கிண் கிண்ணென்ற நோவு. தலையிலே இலேசான கனம், மூர்க்கத்தனமாக அழுத்தி இறுக்கிக் கொண்டிருக்கிறது. என்னைக் கொண்டுபோய் உடனே எங்காவது உடனே படுக்கப் போடு என்று சிவலிங்கத்தை அவரது உடம்பு கெஞ்சிற்று. அன்றைக்கு எண்ணெய் முழுக்காட அவர் விரும்பவில்லை. பல்லைக் கடித்தவாறே ஈஸிசியரிலே படுத்தவர் தன்னையறியாமலே கண்ணயர்ந்து போய் விட்டார். அங்கே வந்த தவமணி ஏதோ நினைவில் அவரது நெற்றியிலே கைவைத்துப் பார்த்தாள். அனலாய்க் கொதித்தது நெற்றி. பதைபதைப்போடு கைகளைப் பிசைந்தவாறே அங்குமிங்குமாய் நடந்தாள். பின்னர் மெதுவாக அவரை எழுப்பினாள். அவர் ஈனஸ்வரமாக முனகினார். கண்களை விழிக்கமுடியாமலே அவஸ்தையுற்றுத் தடுமாறினார். சொல்லமுயன்ற வார்த்தைகள் நொண்டி விழுந்தன. டொக்டர் வந்து சிவலிங்கத்தை நன்கு பரிசோதித்தார். உடல்வலிக்கு 'இஞ்செக்சன்' ஏற்றினார். உடனே தீரக்கூடிய விதத்தில் காய்ச்சலுக்கு மருந்து மாத்திரைகள் கொடுத்தார். ஒரு வார காலம் முழு ஓய்வு— 'பெட் றெஸ்ட்' எடுக்கும்படி கூறினவர் தனது பீஸான நூறு ரூபாவையும் பெற்றுக் கொண்டு சொன்னார்: "இன்றைக்கு இரவோடேயே, காய்ச்சலும் உடம்புவலியும் சுகமாகிப் போய்விடும். நாளையிலிருந்து கோழிக்குஞ்சு சூப்பும், சாப்பாட்டிற்கு முதல் கொஞ்சம் 'பிராந்தி'யும் கொடுத்து வாருங்கள்.... உடம்புக்கு ஒத்து வராத இது போன்ற கடினமான வேலைகளைச் செய்ய இவரை இனிமேல் ஒருபோதும் நீங்கள் அனுமதிக்கக் கூடாது."

தவமணி, டொக்டர் சொன்னவற்றை தலையசைத்து ஏற்றுக்கொண்டாள். அன்று மாலையிலேயே, சிவலிங்கத்தைப் பார்ப்பதற்கு அவருடைய நண்பர்கள் நிறையப் பேர் வீட்டுக்கு வந்தனர். திணைக்கள ஊழியர்கள், அலுவலர்கள்

கவலைபோர்த்த முகங்களோடு சிவலிங்கத்தின் பார்வைக்குள் விழுவதற்கு முண்டியடித்துக் கொண்டு நின்றனர். சிவலிங்கம், விறகு கொத்திய கதையினை டொக்டரைத் தவிர வேறு யாருக்குமே சொல்லவில்லை.

தோடம்பழங்கள், ஹார்லிக்ஸ், ஜின், பிராந்தி வகைகளால் அந்த அறையினையே நிறைத்து விட்டனர் சிவலிங்கத்தின் நண்பர்கள். தனது கணவருக்குள்ள செல்வாக்கினை எண்ணி இவ்வேளையிலே மிகவும் பெருமிதமும், ஆனந்தமுங் கொண்டாள் தவமணி.

## 3

ஒரு வழியாக விறகு கொத்துவதற்கு ஒருவனைத் தேடிப் பிடித்து விட்டாள் தவமணி. ஆறேழு விறகுக் குச்சிகளினாலான உயிர்பெற்ற தொகுப்புருவமாக தனக்கு முன்னே நின்ற அவனை—அப்புவை நம்பிக்கையீனமாகவே தவமணி பார்த்தாலும் இவனாவது கிடைத்தானே என்ற மன ஆறுதல்.

"இந்த ஒரு தூக்கு விறகு கொத்துவதற்கு எவ்வளவு நேரம் எடுப்பாய்?"

பட்டென்று பதில் சொன்னான் அப்பு: "இரண்டு மணித்தியாலம் போதும்..."

கோடரிக்காம்பை விட, கால்மடங்கே கைகளையுடைய அவனைப் பார்த்துக் கொண்டிருந்த தவமணியின் மனதில் திடீரென ஒரு மின்னல்.

"இந்த விறகு கட்டைகள் ஒரு தூக்குக்கு கொஞ்சங் குறைவு. மூன்று சின்னக் குற்றிகளை ஏற்கனவே கொத்தி ஆச்சுது. கொத்துக் கூலியாக எவ்வளவு காசு கேட்கிறாய்?"

''நானுங் காலையிலையிருந்து சாப்பிடவே இல்லை... ஐஞ்சு ரூபா தாருங்க....''

''என்ன?''

ஆச்சரிய பாவனையிலே நாடியிலே கை வைத்தாள் தவமணி.

''என்னப்பா இது பகற் கொள்ளை? வழமையாக ஒரு தூக்கு விறகு கொத்துவதற்கு நான் நாலு ரூபா தான் கொடுக்கிறனான். இந்தச் சின்ன வேலைக்கு நீ எந்தப் பெரிய தொகையைக் கேட்கிறாய்? காசென்றால் மரத்திலை காய்க்கிறதென்றா நினைத்தாய்?.... என்ன அநியாயம். இது கடவுளுக்கே பொறுக்காதப்பா....''

மூச்சிரைத்தாள் தவமணி.

''சரியம்மா. நாலரை ரூபா தாருங்க...''

''அது முடியாது. நாலு ரூபா என்றால், நாலு ரூபா தான். அதுக்கு மேலை ஒரு செப்புச் சல்லி கூடத் தர மாட்டேன்...''

சிறுது நேரம் யோசித்தான் அப்பு. வீட்டின் வெறும் பானை, பூனை படுத்திருக்கின்ற அடுப்பு. அழுது முகம் வீங்கியிருக்கிற குழந்தையின் முகம் பரிதாபகரமான மனைவியின் வேதனையான பெருமூச்சு.

''சரியம்மா.... தாறதைத் தாருங்க....''

தவமணியின் முகம் விரிந்து மலர்ந்தது. சிவலிங்கத்திற்குத் தோடம் பழிச்சாற்றினைப் பிழிந்து கொடுப்பதற்காக அவள் அறைக்குள் பிரவேசித்தாள்.

(1983)

அவர்களை அந்த அலங்கரிக்கப்பட்ட மண்டபந்தனிலே முதன் முதலாக எதிர் கொண்டபோது இராமகிருஷ்ணனுக்கு பலத்த திகைப்பு ஏற்பட்டதாயினும் அதனைத் தன்னுள்ளேயே அடக்கிச் சமாளித்துக் கொண்டவனாய் எதிரே தன்னை வரவேற்பதற்காக வந்த புவனேஸ்வரனை பார்த்துப் புன்னகை செய்து கொண்டான்.

இரண்டு மாதங்களிற்கு முன்னர், அது மெல்லிய மழைத்தூறல் வெய்யிலோடு ஒளித்து விளையாடிக் கொண்டிருந்த திங்கட்கிழமை பிற்பகல் வேளை — புவனேஸ்வரன் கைகளில் வழிந்த நீர்த்திவலைகளை லேஞ்சியால் துடைத்தவாறு தன்னை முதன் முதலாக வந்து சந்தித்தபோது எத்தகைய புன்னகை முகந்தனிலே விளங்கியிருந்ததோ இப்போதும் அதே புன்னகை இம்மியும் தவறாமல் அவனது முகத்தினில் பொலிந்திருக்கின்றது. இடையிலே இரண்டு தடவைகள் சந்தித்தபோதும் இதே போன்ற புன்னகை; கண்களும் சேர்ந்து சிரிக்கிறாற் போன்ற புன்னகை. தனது முகத்தி

ணிலே நிரந்தரமாகவே இப்புன்னகையினை புவனேஸ்வரன் அணிந்து கொண்டிருக்கின்றானோ? இனிமேல்தான் இதனை அவதானிக்க வேண்டுமென்ற நினைவு ஏனோ இராமகிருஷ்ணனின் மனந்தனிலே மெல்லவே அரும்பிற்று.

அவன் நாளந்தம் சந்திக்கின்ற ஆரோக்கியமற்ற, வெளிறிய மனதின் காயம் பட்ட புன்னகைகளின் இடையே இதுவொரு வித்தியாசம் கொண்டது. எவரையும்வசீகரித்து தன்னோடு நட்புக் கொள்ளும்படி தூண்டுகிற இப்புன்ன கையோடு எவரும் வெகு விரைவிலே பரிச்சயம் கொள்ளத் தான் வேண்டும்.

"நீங்கள் எங்களோடு சேர்ந்து கொள்ள எடுத்த முடிவு மிகவும் புத்திசாலித்தனமானது. அது எங்களெல்லோரை யும் கௌரவிக்கின்றது. மிக மகிழ்ச்சி கொள்ள வைக் கின்றது" என்று சுத்தமான ஆங்கிலத்தில் கூறியவாறு புவனேஸ்வரன் பிடித்துக் குலுக்கிய கையினை அவனிட மிருந்து விடுவித்துக் கொண்டபோது ஆஜானுபாகுவான ஒருவன் அவ்விடத்திற்கு வந்தான். புவனேஸ்வரன் அவனை நேயமாகப் பார்த்தான்.

அதே வேளை வெளியே இலேசான பரபரப்புடன் சிலர் காரிலேயிருந்து இறங்கினார்கள். வெளியே இப்போதே நிறைய கார்கள் வரிசையிட்டு நின்றன. இராமகிருஷ்ண னுக்கு மனதினுள்ளே சிரிப்பு சுழித்தது. அவன் ஒருவனே இக்கூட்டத்தினரிடையே எந்த வாகனத்திற்கும் சொந்த மில்லாதவன். அவன் பார்வையை மீண்டும் மண்டபத்திற் குள்ளே கொண்டு வந்தான்.

அவன் எதிரே வந்த ஆஜானுபாகுவான தோற்ற முடையவன், அங்குள்ளோரைப் போலவே மிக அவதானத் தோடு உடையணிந்திருந்தான். கிறீம் பூசிய கருகருவென்ற தலை முடியைப் போலவே சப்பாத்துக்கள் மினுங்கின. கிட்டத்தட்ட முப்பத்தைந்து வயது மதிக்கத்தக்க அவனது

உருவம் எவரையுமே உடனே வசீகரிக்கத்தக்கது. உருண்ட முகம்; முகத்திலேயே முதன்மைப்பட்டு நிற்கிற தடித்து அடர்ந்த மீசையும், பள பளக்கிற கண்களும்.

புவனேஸ்வரன், இராமகிருஷ்ணனுக்கு கனகலிங்கத்தை அறிமுகம் செயது வைத்தான். கனகலிங்கம் அப்பகுதியின் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர். சென்ற ஏப்ரலில்தான் இங்கே பதவி உயர்வில் வந்தான். எட்டு மாதங்களாகின்றன. கனகலிங்கம், இராமகிருஷ்ணனைச் சந்திப்பதையிட்டு தான் மிகுந்த மகிழ்ச்சியடைவதாகக் கூறியவாறே கையைக் குலுக்கினான். மனமும் அப்படி நினைத்ததென்பதனை அவனது ஒளிதரும் புன்னகை உறுதிப்படுத்திற்று.... "மிஸ்டர் ராம் உங்களை நான் பிறகு சந்திக்கின்றேன்.... மிகவும் அவசியமாகவே சந்திக்க வேண்டும்..." என்று கூறிவிட்டு, அங்கிருந்து மேடையிருந்த பக்கமாகப் போய் விட்டான் கனகலிங்கம்.

"கனகலிங்கம் மிகவும் உற்சாகமான இளைஞன். கடமையிலே கண்ணாயுள்ளவன். எங்கள் 'வீல்ஸ் கிளப்' பிற்கு மிகவும் பிரயோசனமான ஆசாமி" என்று சொல்லத் தொடங்கிய புவனேஸ்வரன், "உங்களைப் போலவே என்று சொல்லுங்களேன்...." எனக் கூறி முடித்தவனாக, இராமகிருஷ்ணனை நோட்டமிட்டு புன்னகையான முகத்தினில் இன்னும் கொஞ்சம் மலர்ச்சியினைத் தோற்றுவித்துக் கொண்டான்.

இராமகிருஷ்ணனின் முகத்தில் இலேசான சிரிப்புத் துளிர்த்தது.

மண்டபத்தினுள் மின் விளக்குகள் ஒளியுமிழத் தொடங்கின. மெல்லிய இசை பிரவகிக்கத் தொடங்கிற்று. இரண்டினுக்கும் இடையே ஒரு பொருத்தப்பாட்டினை உணர முடிந்தது. நிறநிறமான மின் விளக்குகள் ஒளிப்பழங்களாய்த் தொங்கி, அவற்றின் வெளிச்சங்கள் வர்ணப் பொடிகளாய் இருட்காகிதத்தின் மேலே சிதறிப் படிந்தன. வட்ட ஒழுங்கமைப்பில் நிரைப்படுத்

தியிருந்த ஆசனங்களில், பெண்களும், ஆண்களுமாக— பூக்கள், நவீன ஓவியங்கள், காஞ்சிபுரம், நைலெக்ஸ், கோர்ட், ரை, எனச் செயற்கை மினுமினுப்பைக் கொடுத் திருந்தது. பல நாட்டு வாசனைகளின் கமழ்வில் பரிமளிக் கிற இன்னொரு கதம்பமான வாசம். நாகரிகமான சிரிப் புக்கள், மெல்லிய இசைக்கு மேலே, நீரூள் விழுந்து கற்கள் சிதறுவிக்கின்ற ஒலித்துள்ளலாய் ஓசையிட்டுக் கேட்டன இடையிடையே.

இவ்வளவு கலகலப்பும் ஆடம்பர உணர்வுகளும் மிக்க உலகினுள் தான் அறிமுகமாகிறதையிட்டு இராம கிருஷ்ணனுக்கு கூச்சமாகவே இருந்தது. பல்கலைக்கழகத் திலே படிக்கையிலும் இது போலவேதான். இத்தகைய நிகழ்ச்சிகளிலே இருந்து முற்றாக ஒதுங்கிக் கொண்டிருந் தான். அதனால் விமர்சனங்களுக்கு உள்ளானான். இப்போதோ தனது இலட்சிய செயற்பாட்டிற்கு இதை ஒரு வடிகாலாய் தேர்ந்தெடுத்திருக்கிறான்.

நீண்ட மண்டபத்தின் தொடக்கத்தில் அமைந்த மேடையில்-பின் புலத்திலே ஐந்து சக்கரங்கள் பற்களால் ஒன்றையொன்று கவ்வியிருப்பவை மின்விளக்கில் உருவ கைக்கப்பட்டு தகதகத்தன. அந்த ஐந்து சக்கரங்களின் கீழேயும் 'உலகம் உங்களதும்: எங்களதும்' என்ற ஆங்கில எழுத்துக்கள் நீலவர்ணத்தில் ஒளிர்ந்தன.

அந்தப் பின்னணியிலே, மேடையிலே ஐந்து கதிரை கள். கம்பளம் விரிக்கப்பட்ட நீண்ட மேசை. மேசையின் இருபுறத்திலும் பூங்கொத்துக்கள் நிறைந்த சாடிகள். அவற்றின் அருகாக இருபுறமும் 'மைக்'குகள்.

பரமேஸ்வரனுக்கு எல்லையில்லாத மகிழ்ச்சி, இந்த நகரத்தின் பிரதானமான மனிதர்கள் எல்லோரும் இன்று இங்கே ஒன்றாகத் திரண்டிருக்கிறார்கள்... இது ஒரு சாதா ரண நிகழ்வு அல்ல. சாதனை, இந்தச் சாதனைக்குரியவன் பரமேஸ்வரன். தனது முதுகிலே செல்லமாகத் தட்டிக் கொடுத்தான்.

சரியாக ஏழு பதினைந்துக்கு, குறிப்பிட்டபடி ஒரு கணங்கூடப் பிசகின்றி ஒரு கைத்தட்டல் எழ, அதனோடு பின்சேர்ந்து கொண்ட பல கைதட்டல்களோடு மண்டப மெங்கும் கரகோஷம் பொங்கி வழிந்தது 'வீல்ஸ் கிளப்' பின் தலைவர் குலசேகரம் அந்த ஓசையிலே நீந்தியபடி மேடையிலே சென்று உட்கார்ந்து கொண்டார். தொடர்ந்து ஏனைய ஆசனங்களில் பெருமிதந் தவழ்கிற முகங்களோடு பதவிகள் அமர்ந்து கொண்டன.

ஒவ்வொரு நவம்பர் மாதத்தின் இரண்டாவது வாரத்திலும் சனிக்கிழமையன்று ஆண்டு தோறும் இத்தகையதொரு பொதுக் கூட்டத்தையும் அதோடு சேர்ந்த இராப் போசன வைபவத்தையும் ஒழுங்காக நடத்தி வருவதனை தனது உலகார்ந்த மரபாகக் கொண்டுள்ளது 'வீல்ஸ் கிளப்.'

இராமகிருஷ்ணனுக்கு 'வீல்ஸ் கிளப்' போடு தொடர்பு ஏற்பட்டமை ஒரு தற்செயல் நிகழ்ச்சியே என அவன் கருதினாலும், அதற்குரிய ஏற்பாடுகள் ஒவ்வொன்றையுமே தீர்க்கமான முறையில் மேற்கொண்டு அவனை 'வீல்ஸ் கிளப்பில் எப்படியும் அங்கத்தவனாகச் சேர்த்துவிட வேண்டுமென்ற 'கிளப்'பினரின் ஆசையினை புவனேஸ்வரன் நிறைவேற்றி விட்டான்.

அந்த நகரத்தின் முக்கியமான புள்ளிகளாக விளங்குபவர்களில், அரசினர் வைத்தியசாலையின் தலைமை டொக்டரும் ஒருவர். வயது முதிர்ந்து, அங்கிருந்தே 'பென்ஷனா'கி விட்ட டொக்டர் ஏரம்ப மூர்த்தியின் பின்னர் அவ்விடந்திற்கு நியமிக்கப்பட்டவன் இராமகிருஷ்ணன். டொக்டர் ஏரம்பமூர்த்தியை 'வீல்ஸ் கிளப்' பும் அவ்வளவாய் விரும்பவில்லை. இவரும் அவர்களை ஏளனப் புன்னகையோடேயே இவ்விஷயத்தில் எதிர் கொண்டு வந்தார். இராமகிருஷ்ணனை எப்படியும் தமது இணைப்புகளில் சேர்த்துக் கொள்வதற்குப் பலரும் பாடு பட்டனர். கடைசியில் 'வீல்ஸ் கிளப்' பினரே அந்தக்

கயிறிழுப்பில் வெற்றி கண்டனர் அந்த நிகழ்வு இப்போதும் இராமகிருஷ்ணனின் நினைவுதனில் மிதந்து வருகின்றது...

"டொக்டர், வெறுமனே உத்தியோகத்தை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தால் போதுமா? மனிதனாய் பிறந்த நாங்கள் இந்தச் சமூகத்திற்கு ஏதாவது நன்மை செய்தே ஆகவேண்டும். சமூகத்தின் உயர் மட்டத்தினிலே இருக்கிற நாங்கள் கீழ் மட்டத்திலை வாழ்கிற சமுதாயத்திற்கு எங்களுடைய இயல்புக்குத்தக்கதாக உதவிகள் செய்ய வேண்டுமல்லவா?.... இந்த உன்னதமான நோக்கத்தினை வைத்துத்தான் 'வீல்ஸ் கிளப்' ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு உலகளாவிய இயக்கம், ஒரு சக்கரம் இன்னொரு சக்கரத்தைச் சுழற்ற, இன்னொன்று மற்றதைச் சுழற்ற இப்படி ஒன்றையொன்று தள்ளி உலகமே இயங்கும்..."

'வீல்ஸ்' என்ற வளவளப்பான தாளில் அச்சிட்ட நீல நிறமான தடித்த புத்தகத்தினை தனது 'பிறீப் கேசி'லிருந்து வெளியே எடுத்து மேசையில் வைத்து விட்டு புவனேஸ்வரன் தனது முன் நெற்றியில் முத்திட்ட வியர்வையினை கைக்குட்டையினால் ஒற்றித் துடைத்துக்கொண்டே தொடர்ந்தான் :

"இந்தச் சக்கரங்கள் என்றால் என்ன? இவை வெறும் சொற்களல்ல. சிந்தனையாளர்களின் கருத்துருவங்கள் இவை. சில உண்மைகளின் குறியீடுகள் ஆனவை இச் சின்னங்கள். சமுதாயத்தில் டொக்டர் என்பவன் ஒரு சக்கரம். இஞ்சினியர் இன்னொரு சக்கரம். அரசாங்க உயர்நிர்வாகியும்.... அட்வக்கேட்டும், உயர்மட்ட வர்த்தகனும் இன்னும் சில சக்கரங்கள்.... இந்தச் சக்கரங்கள் எல்லாஞ் சேர்ந்து இயக்கத் தொடங்குகின்ற போதுதான், ஒன்றையொன்று தள்ளி உருள வைக்கின்ற போதுதான் சமுதாயத்திலே எந்த இயக்கமுமே நிகழ முடியும்... அந்த விதத்திலை இப்படி ஒவ்வொரு துறையிலுமிருக்கக்

கூடிய சிறந்தவர்களாகிய நாங்கள் ஒருமித்துச் சேர்ந்து இந்த 'வீல்ஸ் கிளப்'பை பலப்படுத்த வேண்டும். நீங்கள் மறுக்காமல் எங்களுடைய 'கிளப்'பிலை சேரவேண்டும். நாங்கள் பின்தங்கிய கிராமங்களிலை எத்தனையோ 'மெடிக்கல் கிளினிக்'குகளை நடத்தியிருக்கிறோம்.... நீங்கள் இந்தப் பகுதிக்கு வந்த மிகக் குறுகின காலத்துக்குள் நல்ல செல்வாக்கைப் பெற்றதை நாங்கள் அவதானித்ததற்குப் பிறகுதான் உங்களை எப்படியும் எங்களினுடைய 'கிளப்'பிலை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற முடிவு ஆழமாகவே உறுதிப்பட்டு விட்டது. இப்படியான ஒரு 'பொப்பியூலர் பிகர்' கட்டாயம் எங்களோடு சேர்ந்து செயற்பட வேண்டும்... என்ன மிஸ்டர் வெற்றிவேலு?"

வெற்றிவேலு முதற் தடவையாகப் புன்னகைத்தார்.

"மிஸ்டர் வெற்றிவேலுவை பாருங்கள்.... ஒரு நிமிஷங் கூட அவர் 'பிஸ்னஸ்' தவிர வேறெதையும் சிந்திக்கவே நேரமில்லாதவர். ஆனால் தன்னுடைய எல்லா அலுவல்களையும் விட்டுவிட்டு இப்போது 'கிளப்' அலுவல்களுக்காக என்னோடு வந்திருக்கிறார். அவருடைய காரிலைதான் நானும் சேர்ந்து வருந்திருக்கிறேன்..." என்றவர் திடுமென்று தமிழிற்கு மாறி. "நீங்களும் இவருக்கு கொஞ்சம் சொல்லுங்க மிஸ்டர் வெற்றிவேலு...." என்றவாறு வெற்றிவேலுவைப் பார்த்தான்.

எதிரேயிருந்த தொழிலதிபர் வெற்றிவேலு, எதையுமே அறிந்துகொள்ள முடியாத உறைந்த முகத்தோடு வெளியே யன்னலுக்கூடாக எதையோ பார்த்துக் கொண்டிருந்தவர் மீண்டும் மெலிதான புன்னகையொன்றை முகத்தில் புகையாகப் படரவிட்டார் வழுக்கைத் தலையைத் தடவிக் கொண்டே, கரகரத்த குரலிலே மெதுவாகக் கூறினார்:

"டொக்டர் நிச்சயமாக எங்களுக்கு மிகத் தேவையான ஒருத்தர். நாங்க செயய உள்ள பல சமூக சேவைகளுக்கு அவருடைய உதவியும், ஆலோசனைகளும் கட்டாயமாக

வேணும்.... அதைவிட சமுதாயத்தினுடைய முதன்மையான நிலைமையிலை உள்ளவர்கள் ஒருத்தரோடை ஒருத்தர் இணைந்து, ஒருத்தரை ஒருத்தர் அறிந்து வைத்திருக்கிறது பல வழிகளிலையும் ஒரு நன்மை தருகிற விஷயம். நாங்கள் அப்பிடி ஐக்கியமாய் இருக்கிறதாலை, எங்களுக்கு எந்தக் காரியத்தையும் இலகுவாய் நினைச்சபடி செய்ய முடியும்... இதையெல்லாம் நடைமுறை அனுபவத்திலையே நீங்கள் கண்டு கொள்ளலாம் டொக்டர். சுருக்கமாகச் சொன்னால் எங்களோடை நீங்கள் சேருகிறதாலை உங்களுக்கும் நன்மை, ஊருக்கும் நன்மை....''

புவனேஸ்வரன் வெற்றிவேலுவை உற்சாகப்படுத்துகிறாற் போலப் பார்த்துக் கொண்டிருந்தவன், ஒவ்வொரு வார்த்தைக்கும் தலையசைத்தவாறிருந்து விட்டு அவர் சொல்லி முடித்ததும் பார்வையை இராமகிருஷ்ணன் மேலே பதித்து அவனை ஊடுருவினான்.

இராமகிருஷ்ணன் மௌனமாகவே இருந்தான். வெகு தொலைவிலே 'ட்டுவிக் ட்டுவிக்....' என்ற அணிற் பிள்ளைகளின் ஓசை மட்டும் விட்டு விட்டுக் கேட்டுக் கொண்டிருந்தது. புவனேஸ்வரன், இராமகிருஷ்ணனின் மேலேயே இன்னமும் பார்வையினைப் படியவிட்டிருந்தான்.

'ஆள், கொஞ்சங் கொஞ்சமாக இளகிக் கொண்டிருக்கிறான்; இதுதான் தருணம். எப்படியும் சம்மதிக்க வைத்து விடவேண்டும்.'

இராமகிருஷ்ணனுடைய மௌனத்திற்குள் நிறையச் சிந்தனைகள் கிளர்ந்தெழுந்தன. அவன் ஒரு அடக்கமான பேர்வழி. மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கையிலேயே தானுண்டு, தன்பாடுண்டு என்றிருந்தவன். தோட்டக்காரனின் மகன், கீழ்மட்டத் தோட்டக்காரன் ஒருவனின் சுகதுக்கங்கள், கஷ்டநஷ்டங்கள், சஞ்சலங்கள், ஏக்கங்கள், எதிர்பார்ப்புகள் என்பனவற்றை அனுபவ ரீதியாகவே உணர்ந்து கொண்டவன். இளவயதி

லிருந்தே தான் பிறந்து வளர்ந்து உயர்வடைந்த நிலைமையினை மனந்தனிலே கொண்டு, தான் நல்ல நிலைமைக்கு வந்தால், ஏதாவது ஒரு விதத்தில் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்திட வேண்டுமென்று உறுதி கொண்டிருந்தான். பல இடையூறுகளுக்கிடையிலே அவன் மருத்துவக் கல்லூரியைவிட்டு வெகு சிறப்பான முறையிலே சித்தியெய்தி வெளியேறி டொக்டரானபோது, தன் எல்லைக்குள்ளேயே பல உதவிகளை கஷ்டப்படுகின்றவர்களுக்கு செய்து மனதாரத் திருப்தியடைந்திருக்கிறான்.

முதன்முறையாக இந்த நகரத்திலேயுள்ள அரசினர் வைத்தியசாலையின் தலைமைப் பொறுப்பினை ஏற்ற போது அவனுக்குப்பல ஆச்சரியங்கள் காத்திருந்தன.

ஆஸ்பத்திரியில் மட்டுமே இருக்கக்கூடிய மருந்து வகைகள், ஆஸ்பத்திரிக்கு முன்னாலுள்ள கடைகளில் தாராளமாக விற்பனைக்கிருக்கையில் ஆஸ்பத்திரியில் மருந்துகள் இருப்பிலில்லாது இருந்தன. வெளிக்கடைகளில் மதிப்பு வாய்ந்த மருந்துகள் பலமடங்கு விலையிலே விற்கப் பட்டன. பணமுள்ளவர்களுக்கும், அறிமுகமுள்ளவர்களுக்குமே வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதற்கு முன்னுரிமைகள் வழங்கப்பட்டிருந்தன. வைத்தியசாலையினுள்ளேயே பெரிய பெருச்சாளிகள் நிறையக் குடியிருந்தன.

இவற்றையெல்லாம் துடைத்தெறிவதற்கு அவனுக்கு பகிரங்கமாக உதவி செய்வதற்கு வைத்தியசாலையின் ஊழியர்களில் பலரே தயக்கமும் பயமும் கொண்டிருந்தனர். இந்த நிலைமையிலேதான், ஒருநாள் அவனுடைய மனதிலே 'வீல்ஸ் கிளப்' பற்றிய எண்ணங்களை விதைத்து விட்டான் புவனேஸ்வரன்.

ஒரு தீர்க்கமான தீர்மானத்தோடும், நம்பிக்கை கலந்த எதிர்பார்ப்போடும் 'வீல்ஸ் கிளப்'பில் சேர்ந்து கொள்வதற்கு இராமகிருஷ்ணன் விருப்பம் தெரிவித்தபோது புவனேஸ்வரன் சந்தோஷ மகுதியினால் இருக்கையில்

இருந்து துள்ளியெழுந்து தனது பாராட்டுக்களை இராம கிருஷ்ணனுக்கு கூறிக்கொண்டான்.

"நிச்சயமாக உங்களை வைத்து நாங்கள் நிறையச் சேவைகளை மக்களுக்கு வழங்க முடியும்... என்னுடைய வாழ்க்கையிலே நான் இன்றுபோல மிகவும் சந்தோஷப் பட்டதில்லை டொக்டர். யூ ஆர் கிரேட். டொக்டர்.... தாங்க்யூ ஸோ மச்.... தாங்க்யூ ஸோ மச்...."

புவனேஸ்வரனைப் போலவே அவனது வார்த்தைகளும் உற்சாகத்தோடும் பரபரப்போடும் ஒலித்தன.

## இரண்டு

கனகலிங்கம் தன்னுடைய உத்தியோக உடையோ டேயே ஆஸ்பத்திரிக்கு வந்தபோது, இராமகிருஷ்ணனது அறைக்கு எதிரேயுள்ள மண்டபத்திலே நிறைய நோயாளி கள் காணப்பட்டனர்.

பத்துப் பதினைந்து மைல் சுற்று வட்டாரத்திலுள்ள நோயாளிகளுக்கான ஒரே பெரியாஸ்பத்திரி அதுதான். சிலர் முதல்நாள் இரவே புறப்பட்டு வந்து அங்கே முன் வாங்குகளில் அதிகாலையில் இருந்து இடம் பிடித்து விடு வார்கள்.

அதனாலே நிறைந்து வழிகின்ற மிகுதிப் பேர், ஆஸ் பத்திரியின் முன்னாலேயுள்ள சடைத்த மாமரங்களின் கீழே மணித்தியாலக் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள். நோயின் கடுமையால் மௌனமாயும், புலம்பலாயுமிருக்கும்.

குழந்தைகளின் வீறலும், நோயாளிகளின் அனுங்கலும் நிறைந்து வழிந்த மண்டபத்தினூடாக இராமகிருஷ்ணனது அறையை நோக்கி கனகலிங்கம் வந்தபோது திடீரென

அமைதி குடிகொண்டது. மக்களின் முகம் பரபரப்புக் கண்டது.

இராமகிஷ்ணன் நிமிர்ந்து பார்த்தான். கனகலிங்கம் தன் முன்னேயிருந்த கதிரையை இழுத்துப் போட்டுவிட்டு உட்கார்ந்தபோது மெலிதான கோபமும், அதிர்ச்சியும் இராமகிருஷ்ணனது மனதிலே தோன்றிய போதிலும் அதனைக் காட்டிக் கொள்ளாமல் இலேசாகவே புன்னகை புரிந்தான்.

''மிஸ்டர் ராம், 'போனி'லேயே உங்களோடு கதைக்க வேணுமென்றுதான் எண்ணியிருந்தேன். ஆனால் டெலி போனை மூன்றோ நான்கு தரம் எடுத்துப் பார்த்தேன். நீங்கள் நோயாளிகளோடை 'பிஸி' யாக இருக்கிறதாகத் தான் பதில் வந்தது இனி நான் உங்களுக்கு டெலிபோன் எடுத்தால் நேராகவே 'கனெக்ஷன்' கொடுக்கச் சொல் லுங்க.... ஏன் உங்களுக்கு 'டிறக்ற் நம்பர்' இல்லையோ?''

நன்றாக மழித்த, சதைப்பிடிப்பு நிறைந்த கனகலிங்கத் தின் முகத்திலே கண்டிப்பு ரேகைகள் பரவியிருந்ததை இராமகிருஷ்ணன் அவதானித்தான். வெளியே வீரிட்டழுத குழந்தையின் ஓசை மங்கிக் கரைந்ததும் கொஞ்சம் கனத்த குரலிலே அவன் பதில் சொன்னான்:

''இல்லை... நான்தான் ஆஸ்பத்திரியிலை இப்பிடி யொரு ஒழுங்கை ஏற்படுத்தி இருக்கிறன்... நோயாளிகளை பார்வையிடுகிற நேரத்திலை நான் டெலிபோன் குறுக்கீடு களை விரும்புகிறதில்லை... அப்படி ஏதாவது அவசர நோயாளிகள் பற்றி டெலிபோனில் வந்தால் மட்டும் அறி விக்கச் சொல்லுவேன்... மற்றபடி எதற்கும் நான் உத்தி யோக நேரத்திலை டெலிபோனிலை தனிப்பட்ட அலுவல் களைக் கவனிக்கிறதில்லை....''

சொல்லிக் கொண்டிருந்தவன் தனக்கெதிரே அவசர அவசரமாக வந்து நின்ற பியோன் துளசிங்கத்தை என்ன வென்ற பாவனையில் நோக்கினான்,

''எம். பி. டெலிபோனிலை நிற்கிறார். ஒரு நோயாளிக்கு தான் 'லெட்டர்' கொடுத்துவிட்டிருக்கிறாராம். அவரைப் பற்றி உங்களோடை இன்னுங் கொஞ்சம் கதைக்க வேணுமாம்... அதுதான் உங்களிட்டை கேட்டுவிட்டு டெலிபோனை உங்களுக்கு போடலாம் என்று சொல்லிவிட்டு வந்தனான் ஸேர்... உங்களோடை பேசச்சொல்லட்டுமா?''

இராமகிருஷ்ணனிடமிருந்து உடனேயே பதில் வந்தது:

"இல்லை துளசிங்கம். அதற்கு அவசியமில்லை. நான் எல்லா நோயாளிகளையும் ஒரே மாதிரித்தான் பார்க்கிறனான், எம்.பி. சொல்லி மட்டும் நான் கவனமாகப் பார்க்கிறவனாயிருந்தால் நான் இந்தத் தொழிலுக்கே பொருத்தமில்லாதவன். நான் அவருடைய நோயாளிக்கு என்னாலை ஆன மட்டிலை வைத்தியம் செய்து விடுவன் என்று மட்டும் சொல்லிவிடு.''

துளசிங்கம் தலையைச் சொறிந்து கொண்டே அவ்விடத்தை விட்டு நடந்தான்.

போய்க் கொண்டிருக்கையிலேயே துளசிங்கம் வாய்க்குள்ளே முணுமுணுத்துக் கொண்டான்; ''வந்த உடனேயே எம். பி. யோடை தகராறு பண்ணிக் கொள்கிறார். வெகு சீக்கிரத்திலை மனிஷன் 'தண்ணியில்லாக் காட்டுக்குப்' போகப் போகிறார். நமக்கென்ன? நாங்கள் சொல்லுறதை பெரியவை கேட்கவா போகிறார்கள்?''

இராமகிருஷ்ணனின் இந்தப் போக்கினை எதிர்பார்த்திராமையை, கனகலிங்கத்தின் அதிர்வடைந்த முகம் புலப்படுத்திற்று. சிறிது நேரம் மௌனமாக அவன் அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஸ்டெதஸ்கோப்பை மேசையில் நகர்த்தியவாறே கனக லிங்கத்தைப் பார்த்த இராமகிருஷ்ணன், ''சரி, உங்க ளுடைய பிரச்சனையைச் சொல்லுங்கள்...'' என்று இறங் கிய குரலிலே கூறினான்.

''இல்லை டொக்டர்....நான் வந்ததெல்லாம் தனிப் பட்ட முறையிலை உங்களிடமிருந்து ஒரு 'பேவர்' கேட்கத் தான்... ஆனால் உங்களினுடைய பதிலுகளைக் கேட்ட தற்குப் பிறகு அந்த 'பேவ'ரைக் கேட்க மனம் வரேல்லை.. நீங்கள் சரியான 'ஸ்றிக்ட்'. என்னுடைய கதையையும் நீங்கள் கேட்க விருப்பம் இல்லை என்றால் கேட்காமலே விட்டிடலாம்... இனி உங்களினுடைய விருப்பத்தைச்சொல்ல லாம்....நான் எதையும் ஒளிவு மறைவுமில்லாமல் கதைக்க விரும்புகிறவன்.''

அந்த தந்திரம் நிறைந்த வார்த்தைகள் இராமகிருஷ் ணனை கனகலிங்கத்தின் பக்கத்திற்கு வலிந்து பலாத்கார மாக அழைத்தது போல இராமகிருஷ்ணன் உணர்ந்தான்.

''சரி....இதிலையென்ன? இதுவே முதலும் கடைசியாக வுமிருக்கட்டும்...'' என்றான் இராமகிருஷ்ணன்.

இதே வேளையிலே குழந்தையின் வீறலோசை மிகவும் தீனமாயெழுந்து பரிதாபகரமாக மெல்ல மெல்ல விக்கிறது. அந்த ஓசையைத் தொடர்ந்து நர்ஸ் ஒருத்தி அவசர அவசர மாக வந்து கொண்டிருந்தாள். முகமும் வார்த்தைகளும் பரபரத்தன அவளுக்கு.

இராமகிருஷ்ணன் வேகமாக எழுந்தான்.

கனகலிங்கம் ஒன்றுமே பேசாதிருந்தான். அவனைப் பார்த்த இராமகிருஷ்ணன் அமைதியாகச் சொன்னான்: ''பிறகு சந்திக்கலாம்...'குவார்ட்டர்சு'க்கே வாருங்கமிஸ்டர் கனகலிங்கம்...''

தன்னைத் திரும்பிப் பாராமலே செல்கின்ற இராமகிருஷ்ணனை சினம் வெடிக்கப் பார்த்துவிட்டு விறுவிறுவென்று அங்கிருந்து நடந்தான் கனகலிங்கம்.

'அலுவல் முடியட்டும்...பிறகு இவனுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேணும்...'

## மூன்று

மாதத்தின் முதலாவது, மூன்றாவது புதன்கிழமைகளில் 'வீல்ஸ் கிளப்'பின் செயற்குழுக் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம். இரண்டு மாதத்திற்கொருமுறை அதன் பொதுக் கூட்டங்கள், கிட்டதட்ட ஒருவரையொருவர் சந்தித்துக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளுகிற விதத்திலே நிகழ்வதுண்டு. இக்கூட்டத்திற்கு 'வீல்ஸ் கிளப்' உறுப்பினர்களோடு அவர்களது மனைவிமாரும் வந்து கலந்து கொள்ளலாம்.

இதே போன்ற நான்கு கூட்டங்களிற்கு இதுவரை சென்று வந்திருக்கின்றான் இராமகிருஷ்ணன். இராப் போசனமும், கூட்டம் நடைபெறும் வீட்டிலேதான்.

முதலாவது கூட்டத்து இராப்போசனம் பசுமையாக அவனது நினைவிலே தரித்திருக்கின்றது! எத்தனை வகையான இறைச்சிகள் அவ்விருந்திலே பரிமாறப்பட்டன. திகட்டத்தக்க அளவு விதவிதமாகப் பாகம் பண்ணப்பட்ட அக்கறிகளில் எதைச் சாப்பிடுவதென்று அவனுக்குத் தெரியவில்லை. கிட்டத்தட்ட நூறுபேர்வரை. ஆண்களும், பெண்களுமாய்க் குழுமியிருந்த அவர்கள் அட்வக்கேட் நடராஜனின் அந்த விருந்தினைப் பெரிதும் வியந்தனர். அவையெல்லாம் தயாரிக்கப்படுவதற்காய் அன்று காலையிலிருந்து அவரது வீட்டில் ஐந்து சமையற்காரர்கள் இயங்கி

னர் என மிஸிஸ். நடராஜன் மிகுந்த தன்னடக்கத்துடன் கூறியதை எல்லோரும் வாயாரப் பாராட்டினர்.

'தண்ணீர்ப் பிரியர்களுக்கு' உள்நாட்டு, வெளிநாட்டு மதுவகைகள் போதும் போதுமென்ற அளவுக்கு கொடுக்கப் பட்டன. இராமகிருஷ்ணனுக்கு அந்த நிமிஷங்கள்தான் மிகவும் சங்கடமளித்தன. போதாக்குறைக்கு இரண்டொரு பெண்களும் தாராளமாக விஸ்கி அருந்திக் கொண்டிருந் தனர்.

"நீங்கள் குடிப்பழக்கமில்லாதவராக இருப்பது மிகவும் ஆச்சரியமானதொரு விஷயம்தான். இதெல்லாமென்ன ஒரு உல்லாசம்... ஒருவரை ஒருவர் கௌரவித்து அறிந்து கொள்ள, அவ்வளவுதானே? எப்படியிருப்பினும் நீங்கள் ஒரு அதிசயமான மனிதர்தான்..."

சுத்தமான ஆங்கில உச்சரிப்போடு தன்னிடம் பேசிக் கொண்டிருந்த மிஸிஸ். ஏரம்பமூர்த்தியை மரியாதையோடு பார்த்துச் சிரித்தான் இராமகிருஷ்ணன். அவனுக்குப் பக்கத் திலேயிருந்த கதிரையிலே அவள் உட்கார்ந்து கொண்டாள். மாநிறம். பேசாமலிருக்கின்றபோதே மோகமெனும் பாஷையினைப் பேசிக் கொண்டிருக்கின்ற மையுண்ட நீளக் கண்கள். ஆரோக்கியமான நெடிய உருவம். மாறாத புன்னகை ததும்புகிற முகம்.

"மிஸிஸ். ஏரம்பமூர்த்தி என்னுடைய பெயர். கணவர் பாங்க் மேனேஜர்; நானும் பாங்கிலேயே வேலை செய்கி றேன். என்னை நீங்கள் காயத்ரிதேவி, அல்லது காயத்ரி என்று குறிப்பிடலாம்...."

சொல்லிவிட்டு புன்னகையிலிருந்து சிரிப்பிற்கு மாறி னாள் காயத்ரி. அவளிடம்தான் முதன் முதலாக புன்னகை யும் சிரிப்பும் வெவ்வேறானவை, ஒன்றைவிட இன்னொன்று சௌந்தர்யம் மிக்கது என்பதைத் தெரிந்து கொண்டான்

இராமகிருஷ்ணன். சிரிக்கையிலே முற்றிலும் மலர்ந்த சூரிய காந்தியாயிருந்தாள் காயத்ரி.

இராமகிருஷ்ணன் மீண்டும் புன்னகை செய்தவாறு மரியாதையுடன் தலையசைத்துவிட்டு தன்னை அவளுக்கு அறிமுகம் செய்ய நினைத்தவனாய் வாயைத்திறந்தான். காயத்ரி புன்முறுவலோடு கையசைத்து விட்டு அவனைப் பற்றிய விபரங்களை அவனுக்குக் கூறினாள்.

"உங்களைப் பற்றி இப்போது இப்பகுதியிலே அறியாதவர்களே இல்லை.... அவ்வளவு பேரெடுத்து விட்டீர்கள்... நான் வெறும் முகஸ்துதிக்காக இதைச் சொல்கிறேனென்று நினைக்காதீர்கள் மிஸ்டர் ராம்.... உண்மையில் யூ ஆர் கிரேட்...."

இராமகிருஷ்ணனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. உடம்பு கூசிற்று. தன்னையறியாமலே "தாங்க்யூ" என்றான். பின்னர், அந்தப் பகுதி மக்கள் பிரச்னைகள் பற்றி காயத்ரி கூறியதை இராமகிருஷ்ணன் அமைதியாகவே கேட்டுக் கொண்டிருந்தான். இரவு பதினொரு மணிவரையிலேதான் அன்றைய கூட்டம் முடிவடைந்தது.

இரண்டாவது கூட்டம் உதவித் தொழில் ஆணையாளரான நடனசபாபதியின் வீட்டிலே நடைபெற்றது. ஒவ்வொரு செயற்குழு கூட்டத்திலும் மிகவும் ஆணித்தரமான விஷயங்களை முன்வைப்பவர் நடனசபாபதி. பொது மக்களுக்கு உதவிகள் செய்வதென்பது மட்டுமில்லை விஷயம் அந்த ஒவ்வொரு உதவியும் செய்யப்படுகின்ற போது 'வீல்ஸ்கிளப்' பின் பெயர் அதிலே குறிப்பிடப்படவேண்டியதுதான் முக்கியமானது என்பது அவருடைய வாதம்.

"பொது ஜனங்களுக்கு உதவி செய்வதோடு நாங்கள் ஓய்ந்து விடக்கூடாது... அவற்றை பொது ஜனங்களுக்கு மத்தியிலே பிரபல்யமடையச் செய்ய வேண்டியதும் மிக்க

அவசியமென'' அவர் அடிக்கடி வலியுறுத்திக் கூறுவார். எனவே 'வீல்ஸ்கிளப்' பின் பொதுநல உறவுப்பொறுப்பாளராக அவரே நியமிக்கப்பட்டு எல்லாப் பத்திரிகையாளர்களதும் நட்புக்குரியவராக அவர் கருதப்பட்டு வருகின்றார்.

நாற்பத்தைந்து வயதுக்கு உருவமதிப்பீடு செய்யப்படுகின்ற அவருக்கு ஐம்பத்தி மூன்று வயதாகி ஆறு மாதங்கள் கழிந்துவிட்டன. கூர்மையான, ஆளைக் கிழித்துப் பார்க்கின்ற கண்கள். சற்று நீண்ட மூக்கு. சுறுசுறுப்பான தோற்றம். மனதின் உணர்ச்சியை இம்மியும் தெரியப்படுத்தாத முகம். கருகருத்து அடர்ந்த சுருள் முடி. அவருடைய கதையிலே மயங்காத, அவருடைய வழியினை ஒப்புக் கொள்ளாத யாருமே இருக்கமாட்டார்களென்று பொதுவானதொரு அபிப்பிராயம் உருவாகியிருந்தது. அதோடு, எந்தத் தொழிற் பிரச்சினையிலும் அவரது மத்தியஸ்தமே இறுதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிவாக வந்து கொண்டிருக்கிறது என்ற புகழுக்கும் அவர் உரித்தாளியாயிருந்தார்.

இந்த வாரம் அவருடைய வீட்டிலேதான் 'வீல்ஸ் கிளப்' கூடுகின்றது. வாசலிலே நின்று மிகுந்த உற்சாகத்தோடு வருபவர்களை கைலாகு கொடுத்து வரவேற்றுக் கொண்டிருந்தார் நடனசபாபதி. பார்த்தவரை வசீகரித்து, நாமும் இப்படி நடந்துகொண்டால் நல்லாயிருக்குமே என எண்ணத் தூண்டுகின்ற நடனசபாபதியின் சுறுசுறுப்பு இப்போது மேலும் உற்சாகத்தோடு இயங்கிக்கொண்டிருந்தது.

நடன சபாபதியின் வீடு நவீன பாணியிலமைந்திருந்தது. விசாலமான மாடி வீடு. வீட்டில் நுழைந்ததும் ஹாலின் மையப்பகுதியிலே சிவலிங்கத்தை ஒரு பெண் ஆரத்தழுவியிருக்கும் ஜோர்ஜ் கெயிற்சின் பிரமாண்டமான ஓவியம். இதன் இப்போதைய பெறுமதி ஏழாயிரத்து ஐந்நூறுரூபா.

அந்த ஹாலினுள்ளே கதிரை, மேசை எதுவுமே கிடையாது. வீட்டின் வலது புறத்திலே விதவிதமான மலர்கள் புஷ்பித்திருக்கின்ற பூந்தோட்டம். வலதுபக்கத்தின் நீண்ட அறையிலே சாயிபாபா பல்வேறு கோணங்களிலே பக்தர்களை ஆசீர்வாதம் செய்து கொண்டிருந்தார்.

இடதுபுற ஓரமாக உள்ள மாடிப்படிகளிலே ஏறி மேல் வீட்டிற்குச் செல்லும்படி நடேசபாபதி சொல்லிக் கொண்டிருந்தார். மேலேதான் கூட்டமும், இராப்போசனமும் நிகழவுள்ளன.

வாசற்புறத்தில் நின்றபடியே ஒரு கோவிலெனத் தோற்றங்கொடுத்த அறையையும். அந்த மண்டபத்தையும் மிகுந்த பக்திசிரத்தையோடு பார்த்துக்கொண்டு நின்றான் கனகலிங்கம். அவனும் சாயிசமிதியிலே சேர்ந்திருக்கின்றான். புட்டபர்த்திக்கு ஒரு முறை சென்று திரும்பி விட்டுவந்தவன், ஐ ஜியைச் சந்தித்து அவருக்கு பிரசாதமும், சாயிபாபாவின் படத்தினைப்பதித்த பதக்கத்தையும் கொடுத்திருக்கின்றான், அவர் சாயிபாபாவின் தாசானுதாசர். மிகவும் மகிழ்ந்து போய்விட்டார்.

சாயிபாபாவின் பிரசாதத்தை மிகவும் மரியாதையோடு வாங்கி உள்ளே கொண்டுபோய் வைத்துவிட்டு வந்து மிகுந்த நேயத்தோடும் பரவசத்தோடும் அவனைப் பார்த்தார்:

''ரொம்ப மகிழ்ச்சி. உனக்கு என்ன தேவையானாலும் என்னிடம் நேரே வந்து சொல்லலாம்...பாபா உன்னை ஆசீர்வதிப்பார்....''

கனகலிங்கம் நெகிழ்ந்து போய்விட்டான். இதுவும் பாபாவின் ஒரு சித்துவேலையே என எண்ணிப் புளகாங்கிதமடைந்தான்.

அந்தச் சம்பவம் நடைபெற்று இரண்டாண்டுகள் கழிந்து போய்விட்டன. அவர் விரும்பினால் அவனை

'ஸ்டேட்'சுக்கு ஒரு வருஷ 'ஸ்கொலர்ஷிப்'பில்—போதைப் பொருள் கடத்தல் அல்லது கலகம் அடக்குகிற உத்திமுறைகள் பற்றி படித்து வருவதற்காய் அனுப்பிவைக்க முடியும், பின்னர் பதவி உயர்வோடு வசதிகள் நிறைந்த இடத்திற்கு மாற்ற முடியும். அவன் ஐ.ஜியைச் சந்தித்து ஒரு வார்த்தை சொல்லவேண்டும். அவ்வளவுதான்.

அதற்கிடையிலே நெருஞ்சி முள்ளுப்போல வனஜாவின் பிரச்சினை வந்துநிற்கிறது. கனகலிங்கத்திற்கு சினம் மெல்ல மனதினுள்ளே புகையவாரம்பித்தது.

'இன்றைக்கு எப்படியும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவுகண்டாக வேண்டும்...கட்டாயமாய்....'

யோசித்துக் கொண்டு நின்ற கனகலிங்கத்தை நடனசபாபதியின் மெல்லிய கனைப்பு சுயநினைவுக்கு கொண்டு வந்தது. இதுவரையும் கனகலிங்கத்தை வார்த்தை அளவிலேயே தெரிந்து வைத்திருக்கின்ற தனது மனைவி கோகிலவர்த்தினிக்கு, அவனை அறிமுகம் செய்து வைத்தார் நடனசபாபதி.

கோகிலவர்த்தனி தன்னிலிருந்து பத்து வயதுகளைக் குறைத்துக் கொள்ள எடுத்துக் கொண்ட பிரயத்தனங்களை அவளது ஒப்பனைகளால் மிகுந்த தோல்வியோடேயே நிறைவேற்ற முடிந்திருந்தது. நகைகள், தங்கமும் வைரமுமாய் சேர்ந்து அவளை அணிந்துகொண்டு பளபளத்தன. செயற்கையான நாணச் சிரிப்பினை முகத்திலே படரவிட்டு கொண்டே கனகலிங்கத்தைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"தனியேதான் வந்தீர்களோ?" என்று அவனைப் பார்த்துக் கேட்ட அவளை, மிகவும் பெருமையாகப் பார்த்தபடியே நடனசபாபதி சிரித்தார்.

"நாங்கள்தான் மிஸ்டர். கனகலிங்கத்திற்கு நல்ல இடமாகப் பார்க்கவேணும். அவரும் எங்களைப் போல

குணங்களைக் கொண்ட இளைஞன். அவையெல்லாவற்றை யும் விட பாபாவின் பக்தன். புட்டபர்த்திக்கு நேரிலேயே போய், எங்களைப் போலவே பகவானைத் தரிசித்து வந்தவர்...''

மெய்மறந்தவர் போல ஆங்கிலத்திலேயே நடனசபா பதி கூறிக்கொண்டு போனார்.

கோகிலவர்த்தனி ஆனந்த பரவசமாகி கனகலிங் கத்தைப் பார்த்தாள்.

"உங்களைச் சந்தித்தது மிகவும் சந்தோஷம்தான்... நீங்கள் எங்களுடைய சமிதியில் சேரக்கூடாதா?''

கனகலிங்கம் நிமிஷமும் யோசிக்கவில்லை. ''கட்டாய மாக சேர்ந்து கொள்கிறேன்....'' என்றான். உடனேயே கோகிலவர்த்தனி பாபாவின் படத்தைப் பார்த்து மிகுந்த பயபக்தியோடு நமஸ்கரித்தாள்.

அன்று 'கிளப்' கூட்டம் முடிந்த உடனேயே இராம கிருஷ்ணன் அங்கிருந்து எழுந்து செல்ல விரும்பியபோதி லும் நடனசபாபதியினதும், கோகிலவர்த்தனியினதும் அன்பான கட்டளை அவனது முடிவினை மாற்றிவிட்டது.

புஸ்புஸ்ஸென்று மிதக்கின்ற சோபாவில் உட்கார்ந்த வாறு, நடனசபாபதியின் சுறுசுறுப்பினை இராமகிருஷ்ணன் வியந்து கொண்டிருக்கையில் அவனுக்கு எதிரே புன்னகை யுடன் தோன்றினான் கனகலிங்கம். அன்றைய சம்பவத்தின் பின்னர் இன்றுதான் கனகலிங்கத்தைச் சந்திக்கின்றான் இராமகிருஷ்ணன்.

அந்த நிகழ்ச்சியின் விளைவாக இனி அவன் தன்னோடு முகங்கொடுத்தும் கதைக்க மாட்டான் என நினைத்திருந்த இராமகிருஷ்ணனுக்கு, கனகலிங்கத்தின் புன்னகையும், அதே சரளமான போக்கும் கொஞ்சம் வியப்பையே கொடுத்திருந்தது.

கனகலிங்கம், இராமகிருஷ்ணனின் முகபாவத்தைப் படித்து விட்டான்.

இனி அவனோடு எப்படிப் பேச வேண்டுமென்பதை யும் மறுகணமே தீர்மானித்துக் கொண்டான். பொலிஸ் புலனாய்வுத் துறையிலே படித்த சில பயிற்சிகளை தனிப் பட்ட வாழ்விலே வெகு நுட்பமாக நடைமுறைப்படுத்து கிற தனது மதி நுட்பத்தை அவன் மனதாரப் பாராட்டிக் கொண்டான்.

"உத்தியோக அலுவல்களாய் கொழும்புக்குப் போயிருந்ததாலை போன கூட்டங்களுக்கும் வரமுடி யேல்லை" என்று தமிழிலேதொடங்கியவன் ஆங்கிலத்திற்கு மாறினான்:

''என்ன டொக்டர்... என்ன திகைத்துப்போய் ஒன் றுமே பேசாமல் இருக்கிறீர்கள்? ஓ.... அந்தச் சம்பவத்தை நினைத்தீர்களா? அதை மறந்து போய்விடுங்கள்.... அதெல் லாம் சின்னச் சின்ன விஷயங்கள்...."

அவன், தான் மிகவும் இயல்பாகவேபேசுவதைப்போலக் காட்டிக்கொள்ள முயன்றதை முகத்தினால் அப்படியே பிரதிபலிக்க முடியவில்லை.

இராமகிருஷ்ணன் தன்னைச் சுதாரித்துக் கொண் டான்.

"பிறகு நீங்கள் என்னைப் பார்க்க வரவேயில்லை, மிஸ்டர் கனகலிங்கம்...."

கனகலிங்கத்திடமிருந்து வெகு சாதாரணமாகவே பதில் வந்தது.

"வருவதற்கே தேவையில்லாமல் போய்விட்டது டொக்டர். நான் எந்த ஒரு விஷயத்தையும் ஒருவரிடம் ஒருதரந்தான் கேட்பது வழக்கம்.... அது போகட்டும். விட்டுவிடுவோம். ஆனாலும் நான் பொதுவாகச் சொல்லு வது என்னவென்றால், இந்த மட்டத்திலே உத்தியோகம்

பார்க்கிற நாங்கள் கட்டாயம் ஒருவருக்கொருவர் துணை யாய், பரஸ்பரம் உதவி செய்கிற மனோபாவம் உள்ளவர் களாய் இருக்கவேண்டும், அல்லது கஷ்டப்பட வேண்டி வரும்...''

கனகலிங்கத்தின் ஒவ்வொரு வார்த்தையும் நிறுத்து நிறுத்துச் சொல்வதுபோல வெளியாகின. அனுபவமுதிர்ச்சி யோடு உபதேசிக்கின்ற ஒருவனின் பாவனையிலே அவன் கூறிக்கொண்டிருந்தான்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் கும்மென்று 'சென்ட்' வாசனை எங்குமே கமழ்ந்தது. புன்னகை நெளி கின்ற முகத்தோடு வாசனைக்குரிய பெண் கையிலே பெரிய தட்டிலே போத்தல், கிளாஸ்களைத் தாங்கியவாறு நின் றாள்.

''ஓ... நீங்களா...'' என்று அவளைப் பார்த்துக் கூறிய கனகலிங்கம், ''இவர் டொக்டர் இராமகிருஷ்ணன். ஷீ இஸ் மிஸிஸ் பாலன், எக்ஸ்-பியூட்டி குயின்... இப்போதும் தான்....'' என்று அவளை இராமகிருஷ்ணனுக்கு அறிமுகம் செய்துவைத்தான்.

''கொழும்பிலிருந்து மிஸ்டர். பாலன் இப்போது தான் இடமாற்றம் பெற்று வந்திருக்கிறார். கொழும்புக் 'கிளப்' பிலேயே இவர்கள் தான் என்னைச் சேர்த்து வைத்தவர் கள்...''

திருமதி. பாலனின் முகத்திலே நாணம் தவழ்ந்தது. அழகாகவே இருந்தாள். கனகலிங்கத்தின் வார்த்தைகளை அக்கறைப் படுத்தாமலே இராமகிருஷ்ணனிலேயே அவளது கண்கள் நின்றன.

வெட்கப்படுவதனையும் தனக்கு அழகு சேர்க்கின்ற ஒப்பனையாக்கிக் கொண்டு வெகு நளினமாகவே கிளாஸ் களினுள் பியரை நிறைத்தாள்.

இராமகிருஷ்ணன் கனகலிங்கத்தைப் பார்த்து. ''நான் இதெல்லாமே குடிக்கிறதில்லை... 'ஸொப்ட் டிறிங்ஸ்' 'ஒறேஞ் பார்ளி' இருந்தால் தாருங்க'' என்றான்.

கனகலிங்கம் போலித்தனமான ஆச்சரியத்தினை முகத்திலே ஒட்டிக் கொண்டு, ''என்ன டொக்டர் இது? நல்ல 'கொம்பனி' என்றல்லவோ நான் உங்களோடு வந்து சேர்ந்திருக்கிறேன்... என்ன ஆச்சரியமான வைதீகப் பேர்வழி நீங்கள்?'' என்றான் இகழ்ச்சி கலக்க.

நடனசபாபதி அவ்விடத்திற்கு இன்னொரு தட்டோடு வந்தார்.... ''ஃபாரின் விஸ்கி, ஜின்'' என்று ஆர்வத்தோடு வந்தது அவரது குரல்.

திருமதி. பாலன் எதிரேயுள்ள சோபாவில் சற்று நிமிர்ந்து உட்கார்ந்தாள், மேலாக்கு முன்னே விழுந்தது. தாழ வெட்டிய பிளவுஸ். மார்பகங்கள், தொப்புள் எல்லாமே பளிச்சென்று தெரிந்தன. வெகுசாவகாசமாகவே மேலாகவை சரிப்படுத்திக் கொண்டாள்.

பின்னர் விஷமப் புன்னகையோடு நடனசபாபதியை பார்த்துக்கொண்டு, ''ஐ லைக் சம் ஜின்....'' என்றவாறே கிளாசை நீட்டினாள்.

''ராம்... நீங்கள் எப்படியிருந்தாலும் கொஞ்சமாவது குடிக்க வேண்டும்... என்ன சொன்னீர்கள்? 'ஸொப்ட் டிறிங்ஸ்'... ஆ... இதெல்லாம் அதுதானே. கொஞ்சம் ஜின் எடுங்கள்...'' என்று திருமதி. பாலன், இராமகிருஷ்ணனுக்கு நன்கு அறிமுகமானவள் போல போதை துளும்புகிற குரலிலே கூறியவளாய், இன்னொரு கிளாசிலும் ஜின்னை ஊற்றினாள்.

இராமகிருஷ்ணனுக்கு என்ன செயவதென்றே தெரியவில்லை. நாக்கு அடைத்து நின்றது. சொல்ல வந்த வார்த்தைகள் மனதினுள்ளே பின் வாங்கிக் கொண்டன. மீண்டும் அவள் குரல் கெஞ்சுகிறாற்போல் ஒலித்தது.

கனகலிங்கம் மிகுந்த குரோதத்தோடு இராமகிருஷ்ணனைப் பார்த்தான். மனதிலே இனந்தெரியாத வெறுப்பு அவன் மீது பொருமியது.

''நோ....மிஸிஸ் பாலன்....ராம் ஒரு ஆசாரவாதி. என்னிடம் அந்தக் கிளாசைத் தாருங்கள்...'' என்று அவளிடமிருந்து பிடுங்காத குறையாகக் கிளாசைப் பறித்துக் கொண்டான்.

நடனசபாபதியின் முகம் இப்போது மலர்ந்தது.

திருமதி. பாலன் இந்தக் கிளப்பிற்கு இன்றுதான் முதற் தடவையாக வந்திருக்கின்றாள். அவளின் மனம் நோகக் கூடாது என்பதுலே அவர் மிகுந்த அக்கறையோடிருந்தார்.

அரசியல் வட்டாரத்திலே, அவள் தனது கணவனை விடச் செல்வாக்கு மிக்கவள். ஒரு டெலிபோன் பேச்சோடேயே எந்த மனிதனது எதிர்காலத்தையும் தீர்மானிக்கிற சக்திபடைத்த அவளை இந்த டொக்டர் திருப்தி பண்ணாதது அவருக்கு சிறிது எரிச்சலையும் தோற்றுவித்து விட்டது.

திருமதி. பாலன் எதையோ சட்டென்று யோசித்து விட்டு முணுமுணுத்தவாறே நிறநிறமான வில்லைகளில் இரண்டை கணப்பொழுதிலே வாய்க்குள் போட்டு விழுங்கி விட்டு ஜின்னை ஒருமுறை உறிஞ்சினாள்.

''அனுபவிக்க விருப்பமுள்ளவர்களுக்கு அனுபவிக்கின்ற பாக்கியம் கிட்டும்.... மற்றவர்களின் துரதிருஷ்டத்துக்கு நாங்கள் என்ன செய்ய முடியும்? விட்டு விடுங்கள் மிஸிஸ். பாலன். உங்களின் கௌரவத்தையும், மகிமையையும் எல்லோரும் அறிவோம்... உங்களையே எல்லோரும் இன்றைய நட்சத்திரமாக இங்கே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்....'' என்றவாறு நடனசபாபதி அங்கிருந்து போனபோது, அந்தச் சொற்களினுள்ளே அமுங்கிப்போய் மௌனமாகிவிட்டான் இராமகிருஷ்ணன்.

# நான்கு

அவனுடைய விலா எலும்புகளை மிகவும் அனுதாபத்தோடு பார்த்துக் கொண்டிருந்த வேளையிலே இராமகிருஷ்ணனுக்கு அவனுடைய தகப்பனின் ஞாபகம் மனதிலே வந்து தொற்றிக் கொண்டது.

இராமகிருஷ்ணனின் தகப்பன் சிவபாதவிருதயரும் ஒரு ஏழை விவசாயி. மண்ணைக் கொத்திக் கொத்தியே தனது வாழ்க்கையினை முடித்துக் கொண்ட வைராக்கியவான். தன்னுடைய வயற்காணியினைத் தவிர வேறிடம் எதையுமே அறியாது வாழ்ந்து, தனது மூன்று பிள்ளைகளையும் வளர்தது ஆளாக்கிவிட்ட அவரை நினைக்கின்ற போதிலேயும், அவருக்கூடாகவே தன் ஏழ்மை படர்ந்த கிராமத்தின் ஒவ்வொரு மனிதனது முகத்தையும் எண்ணுகிற வேளையிலேயும் தனக்கு ஒரு சமூகக் கடமை இருப்பதாக இராமகிருஷ்ணனுடைய மனம் உறுதி கொள்ளும்.

மருத்துவக் கல்லூரியிலே பயின்று கொண்டிருந்த போதுகூட அவன் ஒதுங்கித்தான் வாழ்ந்தான். தான் தேர்ந்தெடுத்துள்ள துறை தன்னை எவ்விதத்திலும் மாற்றாதவாறு வாழ வேண்டுமென அவன் தனது உறுதியை மனதினுள்ளே அடிக்கடி, புதுப்பித்து வந்திருக்கின்றான்.

"டொக்டர் ஒருவனுக்கு சமூகத்திலை தனி அந்தஸ்து இருக்குது.... அதை நாங்கள் நிலைநாட்டிக் கொள்ள வேணும். அதுக்குத் தக்க மாதிரியே சினேகிதங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் வேணும்.... எஞ்சினியரிங் ஸ்டுடன்சோடு பழகலாம்...ஆர்ட்ஸ், லோயக்கல்ரி ஸ்டுடன்சோடை பழக்கம் வைத்துக் கொள்ளப்படாது.... டொக்டரானதும் உனக்கு இலட்சக் கணக்கிலை சீதனம் பேசிக் கொண்டு கியூவிலை வந்து நிற்பார்கள்... இதற்கு என்ன காரணம்? எங்களுக்கு அவ்வளவு மதிப்பு இந்தச் சமூகத்திலை இருக்குது...."

எந்த நேரமும் மடிப்பு கலையாத உடுப்பும், சூழுமிட மெல்லாம் வாசனையோடு நிறைத்து அட்டகாசமுமாகப் பேசிக் கொண்டிருக்கின்ற சோமேஸ்வரன் என்ற தனது அறை நண்பன் இப்படி அடிக்கடி கூறுவது இராமகிருஷ்ண னுக்கு இலேசான அதிருப்தியை ஏற்படுத்தும். மௌன மாகப் பதிலேதுமின்றிச் சிரித்துக் கொள்வான்.

சோமேஸ்வரனும் இராமகிருஷ்ணனைப் போன்ற வாழ்க்கைத் தரத்திலே உள்ளவன்தான். அப்படியிருந்தும் ஏன் இவன் இப்படி நடந்து கொள்கிறான் என இராம கிருஷ்ணன் வியப்புக் கொள்வதுண்டு.

''உண்மைதான். ஒரு டொக்டருக்கு சமூகத்திலை மிகப் பெரிய மதிப்புத்தான் இருக்கிறது. பணக்காரக் குடும்பத் திலை பிறந்த பையன்களைத்தான் மருத்துவக் கல்லூரி யிலை சேர்க்க வேண்டுமென்ற நடைமுறைகூட எங்களி னுடைய நாட்டிலை இருக்கிறபோதும் எப்பிடியோ தப்பித் தவறி நாங்களும் மருத்துவக் கல்லூரிக்குள்ளை வந்திடுறம். அதுவும் கஞ்சிக்குள்ளை போட்ட பயிறு போல....'' சோமேஸ்வரன், இராமகிருஷ்ணனை செயற்கையான பரிதாபத்தோடு நோக்குவான். அவனது முகத்தைப் பார்க் காமலே கூறுவான் இராமகிருஷ்ணன்.

''சோமா, நீர் என்ன சொன்னாலும் இது மனித குலத் திற்கு நன்மை தரக்கூடிய தொழில். பணக்காரன் காசை வீசி என்ன வைத்தியமும் செய்து கொள்ள முடியும். ஆனால் அன்றாடம் வயிற்றுக்காக உழைத்தும் பாடுபடு கின்ற மக்கள்...? இந்தத் தொழிலை அத்தகைய மக்களிற்கு அருகாமையிலே கொண்டு போக வேண்டியது எங்களைப் போன்றவர்களின் கடமை அல்லவா?''

சோமேஸ்வரன் அட்டகாசமாக, கண்களிலே நீர் துளும்புமளவிற்குச் சிரிப்பான். பின்னர் இரக்க பாவனை யோடு அவனைப் பார்ப்பான்.

"ராம், இந்த வயதிலை சிலர் இப்படித்தான் கதைக்கிறது வழக்கம். ஆனால் இதெல்லாம் வெறும் இலட்சிய வரட்டுவாதம். நீர் படித்து முடித்ததற்குப் பிறகு என்ன நடக்கப் போகிறது? உமக்கு கைநிறையச் சம்பளத்தோடை நல்ல இடத்திலை வேலை கிடைக்கும்.... பிறகு நல்ல சீதனத்தோடையும் கார், வீடு வளவோடையும் கலியாணம்.... கடைசியாக பிள்ளைகளைப் பெற்று அவர்களை சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரச் செய்வதற்கு எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருப்பாய்.... நீர் கதைக்கிற கதையைப் பார்த்தால் நாங்களெல்லாரும் ஒதுக்கி வைத்திருக்கிற மகேசன் சொல்லுறதே சரியென்று ஆமோதிக்கிறது போலையிருக்குது...."

மகேசன்! விசித்திரமான மகேசன்... அவன் ஒரு மருத்துவ மாணவனாக இருந்தபோதிலும் ஏனைய மருத்துவ மாணவர்களில் பெரும்பான்மையோரால் ஒதுக்கி அருவருக்கப்படுபவன் பல்கலைக்கழக மாணவர்களின் அடிப்படைத் தேவைகளை முன் வைத்து நடத்தப்பெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் ஆதரவு தரவில்லை. அவ்வேளையிலே அவர்களோடு தோளோடு தோள் நின்று போராடிய ஒரே மருத்துவத்துறை சார்ந்த மாணவன் மகேசன். மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற எந்தக் களியாட்டு வைபவங்களிலும் அவன் கலந்து கொள்ளவில்லை. இப்போது அவன் எங்கேயிருப்பான்? நிச்சயமாக கிராமப்புறம் ஒன்றிலேதான் பணியாற்றிக் கொண்டிருப்பானென இராமகிருஷ்ணனின் மனம் நினைத்துக் கொண்டது.

இப்போது மகேசனைப் பற்றி நினைக்கையிலே, மகேசனும் தன்னைப் போலவே வறுமைப்பட்டதொரு குடும்பத்திலிருந்து வந்தவனாயிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது இராமகிருஷ்ணனுக்கு. அந்த நாளிலே

அவனோடு தொடர்பு கொள்ளாமலிருந்ததற்காக மனம் இப்போதும் அங்கலாய்த்துக் கொள்ளுகின்றது.

....வளரிளம் பருவத்திலே தான் இழந்துபோன அற்புதமான அந்த சிநேகிதன், எந்நேரமும் புத்தகங்களிலே மூழ்கிப்போய், இளந்தாடியோடேயே காணப்படுகின்ற மச்சான்-தனக்கு மானசீகமானதொரு முன்னோடி என்ற உணர்வு இராமகிருஷ்ணனுக்கு மனதினுள் அடிக்கடி எழுவதையிட்டு அவனே வியப்படைவதுண்டு...

நிலத்தைக் கொத்தி முடித்த பொன்னையன் தன் முன்னே வந்து செருமிக் கொண்டபோதுதான் சுயநினைவுக்கு வந்தான் இராமகிருஷ்ணன். எதிரேயுள்ள முதிரை மரத்திலிருந்து சொரிந்து கிடந்த சருகுபோல சுருங்கிக் காய்ந்திருந்தது அவனது முகம். ஆமணக்கம் தடி போன்ற குச்சிக்கால்கள், கைகள், ஒட்டிய வயிறு, பூனைக்கண்களால் கெஞ்சுகிறாற் போலப் பார்த்துக்கொண்டு நின்றான்.

பொன்னையன், தனக்குள்ள பிரச்சினையொன்றிலே இராமகிருஷ்ணன், தனக்கு எப்படியும் உதவி செய்ய வேண்டுமெனக் கேட்டிருந்தான். அதனைப் பற்றித்தான் இப்போதும் கதைக்கப் போகின்றான் என்பதனை அவனது முகபாவம் தெளிவாகவே சொல்லிற்று.

"ஐயா, நேர காலத்தோடை இதைத் தீர்த்துவைக்காட்டில் கடைசியிலை நான் ஏமாறத்தான் வேண்டிவரும். உங்களைத் தானைய்யா தெய்வத்தைப்போல நம்பியிருக்கிறன்... எனக்கு எப்பிடியும் நீங்கதானைய்யா உதவி செய்ய வேணும்...."

பொன்னையனுக்கு நகரமருங்குப் பகுதியிலே ஒன்றரை ஏக்கரளவிலான காணியொன்றியிருக்கின்றது. அவனுடைய முதிசச்சொத்து அது. கணேசபிள்ளை ஸ்டோர் முதலாளியிடம் அந்தக் காணியினை அடமானமாக வைத்து நான்கு வருஷங்களின் முன்னர் 1500/=ரூபாவை

பொன்னையன் வாங்கியிருந்தான். வட்டியும் முதலும் இப்போது காணிவிலைக்கு மேலாக வந்துவிட்டதாகவும் காணியை இரண்டு மாதங்களிற்குள் மீட்காவிட்டால் அதனை பகிரங்க ஏலத்தில் விற்றுவிடப் போவதாயும் அல்லாவிடில் காணியைத் தனது பெயருக்கு மாற்றி யெழுதும்படியும் ஒற்றைக்காலில் நிற்கிறார் கணேச பிள்ளை. பொன்னையன் இதனைத் தயங்கித் தயங்கிச் சொல்லி முடித்து பல நிமிஷங்கள் கழிந்த பின்னர்தான் இராமகிருஷ்ணன் திகைப்பிலிருந்து விடுபட்டான். மன துள் ஆத்திரம் குமைந்து பரவிற்று.

''இது மோசமான அநியாயம் இல்லையா?''

பொன்னையன் தவிப்போடு சொன்னான்;

''இதைப் பற்றியெல்லாம் நாங்க ஆரோடை கதைக்க முடியும் ஐயா? கணேசபிள்ளையர் பெரிய பணக்காரன் இந்தப் பக்கத்திலையுள்ள பலரையும் அவர் கையுக்குள்ளை வைச்சிருக்கிறார்... இப்பிடி அவர் பல பேருக்கு செய்திருக் கிறார்... ஆனால் ஆரும் இதுக்கு மாறாகக் கதைக்க வில்லை...''

''இல்லை....பொன்னையா உலகத்திலை நியாயமென்று ஒரு விஷயமிருக்குது... அதை மீறி எல்லா அலுவலையும் செய்ய முடியுமா....?''

கூறிக்கொண்டு போன இராமகிருஷ்ணனின் மனதி னுள்ளே பளீச்சென ஒரு எண்ணம் மின்னிற்று. 'வீல்ஸ் கிளப்' ஏழைகளின் நலன்களைக் காப்பதிலே அக்கறை கொண்டதென அடிக்கடி அதன் உறுப்பினர்கள் பெரு மையோடு பிரலாபிப்பார்கள். இந்த விஷயத்தையும் 'வீல்ஸ் கிளப்'பில் சமர்ப்பிக்க வேண்டும். வசதிகளற்ற ஏழைகளுக்கு 'வீல்ஸ் கிளப்' சட்ட ஆலோசனைகள் வழங் குவதோடு, தேவையெனக் கருதும் பட்சத்திலே அவர் களுக்காக நீதிமன்றத்திலே 'வீல்ஸ் கிளப்'பிலுள்ள வழக் கறிஞர்கள் இலவசமாக ஆஜராக வேண்டும். இப்படி

யொரு தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முழு மூச்சோடு செயற்பட வேண்டுமென இராமகிருஷ்ணனின் மனம் அந்த நிமிஷத்திலேயே உறுதி கொண்டது.

'கொம்யூனிற்றி சேர்வீஸ்' என்ற பிரிவின் உறுப்பின ரில் ஒருவனாக இராமகிருஷ்ணனும் 'வீல்ஸ் கிளப்'பில் நிய மனம் பெற்றிருக்கின்றான். எனவே இத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது அவனைப் பொறுத்தவரையில் லேசான விஷயமாகவே தோன்றிற்று.

'கொம்யூனிற்றி சேர்வீஸ்' கூட்டங்களிலே ஏழைகளைப் பற்றி அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுவதுண்டு. வாழ்வின் அடிமூலையிலே கிடந்து உழல்கிற அவர்களுக்கு ஒளி வாய்ந்த நம்பிக்கை நட்சத்திரமாக 'வீல்ஸ் கிளப்' விளங்க வேண்டுமென்பதே தனது ஒரே வீறார்ந்த இலட்சியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிற துரைமுருகன் தனக்கு நிச்சயம் கைகொடுப்பான் என எண்ணிக் கொண்ட இராம கிருஷ்ணன், பொன்னையாவின் காணி பற்றிய கோப் பொன்றினைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.

## ஐந்து

சேகரின் அவசரமும், அனுதாபம் நிறைந்த வார்த்தை களும் அவன் மீது இராமகிருஷ்ணனுக்கு மிகுந்த மரியாதை யையும், நெருக்கத்தையும் ஏற்படுத்திவிட்டன. இராம கிருஷ்ணனுக்கும் சேகருக்கும் ஒரே வயதுதான் இருக்கலாம். சேகர் மிகவும் எளிமையாகக் காணப்பட்டான். அடங்கிய குரலிலே ஆனால் ஆர்வமும், ஆவேசமும் தொனிக்கக் கதைத்தான். இங்கே 'நிறைவேற்றுப் பொறியியலாளராக' மாற்றம் பெற்று வந்திருக்கின்றான். நிறைய வேலைகள் உள்ள பகுதி இதுவென்று கூறினான்.

அவனது பிரிவிலே கடமையாற்றுகின்ற சிற்றூழியன் கந்தசாமி. கந்தசாமியின் மூத்தபிள்ளை தங்கச்சியம்மா— பத்துவயதானவள். கடுமையான வயிற்றுவலைவால் பாதிக்கப்பட்டு கைமருந்தோடு இரண்டு நாட்களாய் அவதிப்பட்டு கொண்டிருந்திருக்கின்றாள். மூன்றாம் நாள் கந்தசாமியையும், மகளையும் சேகரே ஆஸ்பத்திரிக்கு அழைத்துவந்தான். தங்கச்சியம்மா வாடிவதங்கிய செடியாய் தொய்ந்து போயிருந்தாள்.

'ஸ்ரெட்சரில்' வைத்து 'வார்ட்'டுக்கு கொண்டுபோனதும் இராமகிருஷ்ணன் அவளைப் பரிசோதித்தான். வியாதி முற்றிப் போயிருந்தது. பரிசோதித்து முடிநததும் இராமகிருஷ்ணனின் மனதிலே திடீரென்று கவலை பரவிற்று. இந்த முற்றிய நிலையிலுள்ள நோயுக்குரிய மருந்து ஆஸ்பத்திரியிலே முடிந்து போய் இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. இந்த முற்றிய நிலையிலே மாற்று மருந்துப் பரிசோதனை மிகுந்த ஆபத்தானதென்பதை இராமகிருஷ்ணன் அனுபவரீதியாக அறிந்திருந்தான். 'இன்ஜெக்ஷன்' மட்டுமே கைவசமிருந்தது. நிலைமையை சேகருக்கும் கந்தசாமிக்கும் விளக்கினான்.

''டொக்டர் நீங்கள் 'இன்ஜெக்ஷனை'ப் போடுங்கள்... நாங்கள் வெளியிலே மருந்தை வாங்கிக் கொள்கிறோம்... நீங்கள் இவ்வளவு கவனிப்போடை வைத்தியம் செய்கிறதே அரைவாசி நோயை மாற்றிவிடும்....''

மிகுந்த நன்றியோடு சேகர் சொன்ன வார்த்தைகள் இராமகிருஷ்ணனின் மனதை நெகிழ்த்திற்று. இராமகிருஷ்ணன், நேர்சை அழைத்து தங்கச்சியம்மாவிற்குப் பரிசோதனை ஊசியை ஏற்றுமாறு பணித்தான். அரைமணி நேரத்திற்குப் பிறகுதான் மற்ற ஊசி.

உள்ளே சென்று சேகரும், இராமகிருஷ்ணனும் பேசிக்கொண்டிருந்தபோது நேர்ஸ் பரபரப்போடு ஓடிவந்தாள். 'சேர்...சேர்.... அந்த 'ரெஸ்ரிங் இன்ஜெக்ஷன்' பேஷன்டுக்கு

ஒத்துக்கொள்ளவில்லை.... உடம்பெல்லாம் அரித்து தலை விறைத்துக் கொண்டிருப்பதாகச் சொல்லுகிறாள்...''

இராமகிருஷ்ணனின் முகம் வாடிச்சுருங்கிற்று. ஊசி மருந்து ஒத்துக்கொள்ளாத நோயாளிக்கு அதற்கு மாற்றாக வேறுமருந்துதான் கொடுக்கவேண்டும். அதுவும் மிக அவசரமாக. அந்த மருந்தும் ஆஸ்பத்திரியிலே இல்லை. யோசித்தவாறே மீண்டும் 'வார்ட்'டிற்குள் சென்றான் இராமகிருஷ்ணன்.

தங்கச்சியம்மாள் வயிற்றை கைகளால் அமுக்கியவாறே வலிதாங்காமல் அலறிக் கொண்டிருந்தாள். கந்தசாமியின் கண்கள் கலங்கியிருந்தன. இராமகிருஷ்ணன் மனதினுள்ளே அவதியுற்றான்...

''கண்ணுக்கு முன்னாலே ஒரு நோயாளி வியாதியால் அவஸ்தைப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கின்ற எனக்கு உடனடியாக எந்தச் சிகிச்சையையும் செய்ய முடியாமல் இருக்கிறதே.... இன்றைக்கு உடனடியாகவே இந்த ஆஸ்பத்திரியினுடைய நிலைமையைப் பற்றி மேலதிகாரிகளுக்கு மட்டுமல்ல. அரசாங்க அலுவலகத்திற்கும் விரிவான முறையில் கடிதம் எழுதவேண்டும் முனகிக்கொண்டிருப்பதைவிட உடனே ஏதாவது செய்ய வேண்டிய நிலைமை இப்போது எனக்கு ஏற்பட்டிருக்கிறது. ஒன்றில் ஒழுங்காகப் பணி செய்யவேண்டும் அல்லது எல்லாவற்றையும் ஒழுங்குக்கு கொண்டுவர வேண்டும்.''

சேகருக்கு இராமகிருஷ்ணனது சங்கடம் விளங்கியிருக்க வேண்டும். தணிந்த குரலிலே கூறினான்.

''கந்தசாமி, பிள்ளையை வீட்டுக்கு கொண்டு போவோம். வெளியிலை உள்ள மருந்துக் கடையிலே குளிசைகளை வாங்கிக்கொள்ளலாம். டொக்டர் தன்னாலை இயலக்கூடியவரை பார்த்துவிட்டார். ஆஸ்பத்திரியிலை மருந்து இல்லாமலிருக்கிறதுக்கு அவர் என்ன செய்ய முடியும்...?''

மறுநாள் பின்னேரமும் இராமகிருஷ்ணனை, சேகர் சந்தித்தான். தங்கச்சியம்மாவின் நிலைமை கொஞ்சமும் சீராகவில்லை. இரவிரவாக வயிற்றுவலி தாங்காமல் அலறிக் கொண்டிருந்தாள் என்றும் கூறினான். நாளைக் காலையில் மீண்டும் அவளை, தான் பரிசோதனை செய்வ தாகவும் கூறிய இராமகிருஷ்ணன், "வயிற்றுளைவு என் றால் இப்படித்தான், அதுவும் தொடக்கத்தில் கவனமாக இல்லாவிட்டால் எந்த வியாதியும் வெகுவேகமாக அதி கரித்துவிடும். கழிச்சலும், மலச்சிக்கலும் இருந்து கொண்டேயிருக்கும். இளநீர், தோடம்பழச்சாறு, அறோட்டுமா ஆகியவற்றை இப்போதைக்கு குடிப்பது நல்லது. தங்கச்சியம்மாவுக்கு வியாதி கொஞ்சம் அதிக மாகத்தான் இருக்கிறது. நான் எழுதித்தந்த மருந்துகள் விலைகூட என்றாலும் வியாதியை கூடியவரை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வந்துவிடும்.." என்று சொன் னான்.

சேகருக்கு இராமகிருஷ்ணன் ஒல்வொரு நோயாளியின் மீதும் காட்டுகிற வாஞ்சையும் ஆர்வமும் மிகுந்த மகிழ்ச்சி யினைக் கொடுத்து அவன்பால் நேயத்தை ஏற்படுத்திற்று. அவனைப் பாராட்டினான்.

"நீங்கள் பாராட்டுவது சரி ஆனால் நான் நினைத்த வற்றையெல்லாம் செய்யமுடியாத நிலைமைக்கு நிப்பந்திக் கப்பட்டிருக்கிறேன். ஆஸ்பத்திரியிலே மருந்துகள் போதிய அளவு இல்லை. ஆஸ்பத்திரியில் இருக்கவேண்டிய மருந்து களெல்லாம் திருட்டுத்தனமாகக் கொண்டுப் போகப்பட்டு தனியார் கடைகளிலே உச்சநிலைக்கு விற்கப்படுகின்றன. ஆஸ்பத்திரியில் மருந்தில்லை என்று கடிதங்கள் எழுதினால் அவை பற்றி ஒரு பதிலுமில்லை... எல்லாமே தாறுமாறா யிருக்கிறது. இதை 'வீல்ஸ் கிளப்'பிலையும் ஒரு பிரச்சினை யாய் பேசினேன். எம். பி. யைப் போய் சந்தித்தால் என்ன என்று கேட்கிறார்கள்.... எம். பி. யோ எல்லாம் தெரிந் திருந்தும் நான் தன்னுடைய காலடியிலை வந்து விழவேண்

டும். பிறகுதான் மற்ற அலுவல்கள் எல்லாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்...''

சலித்துவந்தது இராமகிருஷ்ணனின் குரல்.

''பொதுமக்களின் நிலைமையை யோசித்தால் எனக்கு மிகவும் மனக்கஷ்டமாக இருக்கிறது. என்னாலான உதவிகளை இந்த அவதிப்பட்ட மக்களுக்கு செய்ய விரும்புகிறேன்.... ஆனால் அதிலே எவ்வளவு கஷ்டங்கள் குறுக்கிடுகின்றன. கண்ணிற்கு முன்னாலே நிகழ்கிற அயோக்கியத்தனங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கச் சொல்லுகிற எனது தொழிற்சகாக்கள். இந்த அயோக்கியத்தனங்களையெல்லாம் செய்து கொண்டே சத்தியவான்களாகத் தங்களைப் பிறருக்கு காட்டிக் கொண்டிருக்கிற வேஷதாரிகள்.... இவற்றிடையே எனக்கு ஒரு ஆறுதலாக உள்ளது 'வீல்ஸ் கிளப்' தான். அதன் மூலம் ஏதாவது செய்யலாம் என்று நினைக்கிறேன்... ஏன்... உங்களை 'வீல்ஸ் கிளப்'பில் சேரும்படி யாரும் கேட்கவில்லையா?''

புன்முறுவல் செய்தான் சேகர்.

''பலமுறை என்னிடம் வந்து கேட்டார்கள். உங்களையும் அங்கத்தவராகக் கொண்டுள்ளதாகச் சொன்னார்கள். நான் முற்றாகவே மறுத்துவிட்டேன்...''

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' — குறுக்கிட்டான் இராமகிருஷ்ணன்.

''இப்படியான 'கிளப்'புகள் மேல் எனக்கு நம்பிக்கையில்லை. இதெல்லாம் புளிச்சல் ஏவறைக்காரர்களின் ஓய்வு வேலைகள் என நான் நினைக்கிறேன். இப்படிச் சொல்வதற்காக என்னை மன்னியுங்கள். இந்த அமைப்பு இப்படியே இருக்க வேண்டுமென்றும், பணக்காரன் ஏழைகளுக்கு உதவிகளும், நிவாரணங்களும் வழங்கிக் கொண்டிருக்க வேண்டுமென்றும் இவர்கள் நினைக்கிறார்கள். அதாவது இந்த சமுதாய அமைப்பை உள்ளது உள்ள

படியே இருக்க வேண்டுமென்று இவர்கள் விரும்புகிறார்கள். இத்தகைய நிலைமைகளினை நான் அடியோடு வெறுத்து நிராகரிக்கிறேன்.... இதை நீங்களும் விரைவிலேயே உணர முடியும்....''

சேகர் ஆங்கிலத்திலேதான் சொல்லிக் கொண்டிருந்தான். ஒவ்வொரு வார்த்தையையும் நிதானமாகக் கூறினாலும், நெருப்பிலே அவை தோய்ந்திருந்தன.

''நீங்களும் இந்த கிளப்பிலே அங்கத்தவராக இருப்பதாக அவர்கள் சொன்னபோது எனக்கு உங்கள் மீது ஆத்திரமும், வெறுப்புமேயுண்டாகின. ஆனால் சாதாரணமான ஏழை மக்களின் மீது உங்களுக்கிருந்த செல்வாக்கு என்னைக் கொஞ்சம் நிதானிக்க வைத்தது. உங்களோடு பழகிய நிமிஷங்களிலே உங்களின் உண்மையான தோற்றத்தை என்னால் அனுமானிக்க முடிந்தது...''

இராமகிருஷ்ணன் ஸ்தம்பித்துப் போயிருந்தான். அவனைப் பற்றிய விமர்சனத்தை முதன் முறையாக வாழ்க்கையிலே இப்போதுதான் அவன் கேட்கிறான். சேகரின் வார்த்தைகள் அவனது இதய அந்தரங்கத்தையே நெகிழ்த்தி அசைத்துவிட்டன. ஆயினும் அவனால் எந்தத் தீர்மானத்துக்கும் வரமுடியவில்லை.

''இதே போல பிரச்சினை உங்களுக்கு மட்டுமில்லை, எங்களைப் போல தரத்திலை உள்ள, எங்களைப்போல சிந்தனை உள்ள எல்லாருக்குந்தான் ஏற்பட்டு நிலை குலையச் செய்கிறது.... நான் சொன்னது உங்களை கஷ்டப்படுத்துகிறதோ தெரியவில்லை... ஆனால் இது நடைமுறை உண்மை...''

இராமகிருஷ்ணனின் மனதிலே மகேசனின் சிரித்த முகம் தோன்றி மறைந்தது. பழைய நினைவுகள் நெஞ்சிலே மிதந்தெழுந்தன....

மகேசன் மருத்துவக் கல்லூரியிலே படித்துக் கொண்டு இருந்தபோது எவ்வளவு ஒதுக்கிவைத்தல்களுக்கும் பரிகாசங்களுக்கும் உள்ளாகியிருந்தான். ''இவனைப்போல குப்பையன்களெல்லாம் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதிக்க பட்டதாலேதான் டொக்டர் தொழிலுக்கே அவமானம் உண்டாகுது....எங்களுக்கெல்லாம் உயர்ந்த சமூக அந்தஸ்து இருக்குது... இவன் பைத்தியக்காரனைப்போல உளறிக் கொண்டு திரிகிறான்...'' என ஆனந்தராஜன் அடிக்கடி முணுமுணுத்துக் கொண்டிருப்பான். இராமகிருஷ்ணனுக்கு மகேசன்மீது அவனது திறமைகளை ஒட்டி மதிப்பிருந்த போதும் மற்றைய மாணவர்களின் மனப்பாங்கிற்கு எதிரே போக விரும்பாமையால் அவனோடு நட்புக் கொள்ளத் துணிவு வரவில்லை. ஆனால் இப்போது நினைத்துப் பார்த் தால் அந்த எண்ணம் தவறென்றே படுகிறது. அது மட்டும் அல்ல இன்னொரு மகேசனாய், சேகரை அவனது மனம் நினைத்துக் கொள்கிறது.

சேகரைப் பற்றித் தான் அறிந்தது, பழகியதெல்லாம் சில மணி நேரந்தான். ஆனாலும் எவ்வளவோ நாட்கள் பழகி உணர்ந்து பரஸ்பரம் நட்புற்றாற் போன்ற உணர்வு இராமகிருஷ்ணனுக்கு ஏற்பட்டது. எல்லாவற்றையும்விட எவ்வித ஒளிவு மறைவுமின்றி சேகர் கூறிய வார்த்தைகள் இவனுக்கு மனதினுள்ளே சேகருக்கு அவனையறியாமலே உயர்ந்த இடத்தை கொடுத்துவிட்டது.

'நான் உங்களின் மனதினைக் குழப்பி விட்டேனோ தெரியவில்லை. ஆனால் நான் சொன்னவற்றையெல்லாம் ஒரு முறை யோசித்துப் பாருங்கள்... நானும் எனக்கு கிடைத்த சில அனுபவங்களை ஆதாரமாகக் கொண்டு தான் இவற்றையெல்லாம் சொன்னேன். பணக்காரர் களுடைய எந்த அமைப்பும், தன்னோடு உள்ள எவரையும் தனக்கு சாதகமாக உள்ள வரையிலேதான் அன்போடு ஏற்றுக் கொள்ளும். தன்னைப்பற்றி அவர் விமர்சிப்ப தாகவோ அல்லது எதிர்ப்பதாகவோ அவை கருதினால்

சம்பந்தப்பட்டவரை அது தூக்கி எறிந்து விடுவதோடு மட்டும் நின்றுவிடாது; தனது கால்களின் கீழே போட்டு அழித்து நசித்து இல்லாதொழித்ததின் பிறகுதான் அடுத்த வேலையைப் பற்றி சிந்திக்கத் தொடங்கும். இது தேய்மானமில்லாத வரலாற்று உண்மை.''

சொல்லிக்கொண்டு போன சேகர் வெளியே யாரோ நிற்பதைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டு இராம கிருஷ்ணனுக்கு சொன்னான்.

நின்றது பொன்னையா. இம்முறை 'வீல்ஸ் கிளப்' கூட்டத்திலே தவறாது பொன்னையாவின பிரச்சினையும் எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்பதை இராம கிருஷ்ணன் மிகுந்த மகிழ்ச்சியோடு பொன்னையாவுக்கு கூறினான்.

## ஆறு

'வீல்ஸ் கிளப்' தனது தீர்மானத்தினை இப்படியொரு நோக்கில் அணுகுமென்பதனைக் கொஞ்சங்கூட எதிர் பார்த்திருக்கவில்லை இராமகிருஷ்ணன். பொன்னையனுக்கும் கணேசபிள்ளைக்குமிடையே ஏற்பட்டுள்ள நிலத் தகராறினை பதினைந்து நிமிஷங்களாக மிகவும் நிதானமாகவும் ஆதாரபூர்வமாகவும் விவரித்தான் இராம கிருஷ்ணன். எல்லோரும் வெகு அவதானமாகக் கேட்டுக் கொண்டிருந்தனர்; ஆனால் சிலருடைய முகத்திலே ஏளனமும், இன்னமும் சிலருக்கு எரிச்சலும் தொனித்தது. தொழில் ஆணையாளர் நடனசபாபதியின் கண்களிலே தந்திரம் மின்னப் புன்னகை செய்தார்:

''நீங்கள் சொல்வதெல்லாவற்றையும் ஒரு பேச்சுக்கு உண்மையென்று வைத்துக்கொள்வோம், ராம்...அது சரி

தான். ஆனால் பொதுமக்களுக்கு உதவி செய்வது மட்டும் எங்களின் பணியல்ல.... அதனால் நமது 'கிளப்'புக்கு வரக் கூடிய நன்மை தீமைகளைப் பற்றியும் நாங்கள் முதன்மை யாகவும், முக்கியமாகவும் கவனிக்க வேண்டும்... இந்த விஷயத்திலே நாங்கள் யாரின் பக்கத்திலே நிற்க வேண் டும்? கணேசபிள்ளையின் பக்கமா?... பொன்னையாவுக் காகவா?''

நடனசபாபதி நிறுத்திவிட்டு, கூட்டத்திலிருந்தவர் களை சில கணங்களிற்கு உற்று நோக்கினார்; ''நாங்கள் மனதில் நினைப்பதையே நீங்கள் கூறிக்கொண்டிருக்கிறீர் கள்.... தொடர்ந்து சொல்லுங்கள்.... ம்ம்...காரி ஆன்...'' என்று அவர்களின் முகம் சொல்லிக்கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டார் நடனசபாபதி.

பெருமிதம் மிதக்க இராமகிருஷ்ணனைப் பார்த்தார். பின்னர் அட்வகேட் நடராஜனைப் பார்த்து ஆங்கிலத் திலேயே, ''மிஸ்டர் நடராஜன், இதிலே உங்களுடைய அபிப்ராயமும் மிகவும் முக்கியமானது. அனுபவமற்ற இளைஞர்கள் பேசுகிறபோது உங்களைப் போன்றவர்கள் தருகின்ற விளக்கம்தான் தெளிவான வழியைக் காண பிக்கும். தயவுசெய்து உங்களின் மேலான புத்திமதியை எங்களுக்கு கூறுங்கள்'' என்று விநயமான குரலிலே கூறினார்.

நடராஜன், பிடரியைத் தடவிக்கொண்டே சற்றுநேரம் இருந்தார். சிந்தனை வயப்பட்டவர்போல எழுந்து கூட்டத்தினரின் முகங்களையெல்லாம் ஒருமுறை நோக்கி னார். எல்லோருடைய முகத்தின் பாஷையும் அவரைப் பேசும்படி ஏகோபித்து விளங்கிற்று. அதைவிட அவரளித்த இராப்போசன விருந்து மனதிலே குளுமையாய் நினைவுத் தடம் பதித்தது.

''மிஸ்டர் நடனசபாபதி சொன்னவற்றைவிட நான் அதிகமாகச் சொல்ல என்ன இருக்கிறது?'' என்று தன்

னடக்கமான குரலிலே தொடங்கியவர் கணீரென்ற குரலிலே தொடர்ந்தார்:

''மிஸ்டர் நடனசபாபதி சொன்ன பிரதான விஷயம் என்னவென்றால், நாங்கள் யாரின் பக்கம் நிற்பதால் எங்கள் 'கிளப்'பிற்கு நன்மை உண்டாகும் என்பதுதான். நான் இதை இன்னுங் கொஞ்சம் விரிவாகச் சொன்னால் எங்களின் நிலைப்பாட்டிற்கு நாங்கள் எவ்விதமாக நடந்து கொள்ள வேண்டுமென்பதுதான் முக்கியமான விஷயம். கணேசபிள்ளை யார்? எம். பி. யினுடைய மைத்துனர். எல்லாவற்றையும்விட வியாபாரத் துறையிலே முக்கிய மான புள்ளி. இதை மிஸ்டர் கதிரவேலுவும் சொல்லுவார். எங்களுக்கு அவர் நிறைய பண உதவிகள் செய்திருக்கிறார். செயய ஒப்புக் கொண்டுமிருக்கிறார். நீதிமன்றத்திலை ஒரு வழக்கிலை எவ்விதமாகவும் வெல்லக் கூடிய வல்லமையுள்ள வர். எல்லாவற்றையும்விட முக்கியமான விஷயம் நான் தான் அவருடைய சட்ட ஆலோசகர். இவற்றையெல்லாம் யோசித்து நீங்கள் முடிவுக்கு வரலாம். யோசிக்காமல் இப்படியான விஷயத்திலை நாங்கள் முடிவொன்றுக்கு வந்தால், அதன் விளைவுகள் 'கிளப்'பின் எதிர் காலத்தை யும் பாதிக்கும். அவ்வளவுதான்...''

இராமகிருஷ்ணன் வார்த்தைகளற்று ஸ்தம்பித்துப் போயிருந்தான். நெஞ்சு குழம்பிக் குமுறிக்கொண்டிருந்தது. நிராசையும் ஏக்கமும் கலந்த பொன்னையாவின் முகம் நீர் மல்கத் தோன்றிற்று. அவனைப் பற்றியோ, அவனது மன உணர்வுகளைப் பற்றியோ யாரும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் மிகவும் நையாண்டியாகச் சிரித்த படியே தன்னைக் காட்டி, கதிரவேலுவுக்கு ஏதோ சொன்ன கனகலிங்கத்தை மட்டும் இராமகிருஷ்ணன் கவனிக்கத் தவறவில்லை.

கூட்டத்தினர் இப்போது நிகழ்ச்சி நிரலிலேயுள்ள வேறு விஷயங்களைப் பற்றி ஆராய ஆயத்தமானார்கள்.

புதிய விஷயம் சொல்லப்பட்டதும் சபையின் முகத்திலே உற்சாகம் துள்ளிற்று. சர்வதேச 'வீல்ஸ் கிளப்'புகள் யாவும் இன்னும் ஒரு மாதத்திலே இந்தியாவிலே தங்களினுடைய ஆண்டுக் கூட்டத்தை நடத்தப் போகிறார்கள். ஆண்டுக் கூட்டம், சுற்றுலா, ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் விருந்துபசாரம். எல்லோரும் தங்கள் மனைவியரையும் அழைத்து வரலாம். பூபாகத்தின் எல்லாத் திக்கிலிருந்தும் இக்கூட்டத்திற்கு 'வீல்ஸ் கிளப்' பினர் திரண்டு வருவார்கள்...

கனகலிங்கம் உச்சாகத்தோடு எழுந்தான்.

''எங்கள் 'கிளப்'பிலிருந்து நல்ல நாகரிகந் தெரிந்தவர்களைத்தான் அனுப்ப வேண்டும். உலகத்தின் எல்லாப் பக்கத்திலிருந்தும் நிறையப்பேர் வருவார்களல்லவா?'' சொல்லியபடியே ஏரம்பமூர்த்தியைப் பார்த்துக் கண் சிமிட்டினான் கனகலிங்கம். இராமகிருஷ்ணன் அந்த வார்த்தைகளை ஏன் கனகலிங்கம் கூறுகின்றான் என்பதை உணர்ந்தவனாய் வெறுப்புமிழ அவனை ஏறிட்டான்.

கதிரவேலு, விமானம் 'சார்ட்டர்' பண்ணிப் போகுமளவிற்கு 'வீல்ஸ் கிளப்' உறுப்பினர்கள் நிறையப் பேர் வர வேண்டுமென்று கூறி விட்டு உட்கார்ந்த போது, ஒரு பையன் வந்து இராமகிருஷ்ணனுக்கு அவசர தொலைபேசி அழைப்பு வந்திருப்பதாகக் கூறினான். இராமகிருஷ்ணன் அவசர அவசரமாக எழுந்து தொலைபேசி இருந்த இடத்திற்குச் சென்றான். மறுமுனையிலேயே சேகர்.

....சேகரின் குரல் பதட்டத்துடனே கேட்டது.

உடனடியாக கந்தசாமி வீட்டிற்கு வரமுடியுமா? என்றான்.

இராமகிருஷ்ணன், 'உடனேயே வருகிறேன்' என்று கூறிவிட்டு, கூட்டம் நடந்த இடத்திற்குச் சென்றான். அவசர அலுவலாகச் செல்ல வேண்டும் என்று கூறி

விட்டு வெளியே வந்து பார்த்தான். 'வீல்ஸ் பிளப்' கூட்டத்திற்கு வந்தவர்களின் கார்கள் வரிசையில் நின்றன. அங்குள்ளோரில் எந்தவித வாகனமும் இல்லாதவன் இராமகிருஷ்ணன் ஒருவன்தான். வரும்போது கதிரவேலு அவனை தன்னுடைய காரிலே அழைத்து வந்திருந்தார். இராமகிருஷ்ணன் வெளியே இறங்கினான். மழைதுமித்துக் கொண்டிருந்தது. சேகரின் பதட்டமான குரல் மனதினுள் கேட்டவாறிருந்தது.

ஓரளவிற்கு நிலைமையை இராமகிருஷ்ணன் ஊகித்து கொண்டான். அந்தச் சிறு பூங்கொத்தின் அநியாயமான இழப்பு, அக்கறையின்மையால் வந்ததென்று எண்ணியவாறு விரைவாக நடந்தான். மழை பலமாகப் பெய்யத் தொடங்கியது. இராமகிருஷ்ணன் ஒதுங்கிக் கொள்ள எண்ணவில்லை. ஓடுகிறாற்போல நடந்தான்.

கந்தசாமியின் வீட்டு வாசலிலே, சேகரின் ஜீப் நின்றது. வீட்டிலுள்ளிருந்து நெஞ்சைப் பிளக்கும் அலறல் பீறிக்கொண்டு வந்தது. இராமகிருஷ்ணன் சற்றுத் தடுமாறினான். பின்னர் மனதைத் திடப்படுத்தியவாறு வெளியே ஈரத்தை உதறிக் கொண்டான். தங்கச்சியம்மாவின் மறைவு அங்கே விளைத்த வேதனையை வெளியே நின்று கேட்பதே அவனுக்கு தாங்க முடியாத துயரமாக இருந்தது.

## ஏழு

தங்கச்சியம்மாவின் அவல மரணம் இராமகிருஷ்ணனை மிகவும் பாதித்து விட்டதென்பதை உணர்ந்த சேகர், மிகவும் ஆறுதல் படுத்துகின்ற குரலில், ''இனி யார் என்ன செய்ய முடியும்? ஆனாலும் ராம், இந்தப் பெண்ணின் விஷயமாக அதுவும் மிகவும் ஏழையான இவளின்

பொருட்டு நீங்கள் எடுத்துக்கொண்ட அக்கறையை எங்கள் யாராலுமே மறக்கமுடியாது...'' என்று கூறினான்.

இராமகிருஷ்ணனுக்கோ, மனம் ஒரு நிலைக்கு வரவில்லை. அவனெடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கும் எழுதிக் கொடுத்த மருந்துக்கும் தங்கச்சியம்மாவிற்கு மரணம் என்பது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும் என அவன் இப்போது உறுதியாக நம்புகிறான். இராமகிருஷ்ணனின் மனதினுள்ளே திடீரென்று எண்ணமொன்று சுரீரிட்டது, சேகரிடம் மெதுவாகக் கூறினான்:

''தங்கச்சியம்மாவுக்கு நீங்கள் கொடுத்த அந்த மருந்துகளை நான் ஒருமுறை பார்க்க வேண்டும்.... மருந்துகள் ஏதும் மிச்சமாய் இருக்கிறதா என்று கந்தசாமியைக் கூப்பிட்டுக் கேளுங்கள்...''

கந்தசாமி மருந்து வில்லைகளைக் கொண்டு வந்தான். வாங்கிய இராமகிருஷ்ணன் அந்த வில்லைகளைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான். அவனது கண்களிலே நெருப்பு எரிந்தது. அவனையறியாமலே கைகளைப் பிசைந்து கொண்டவன், சிறிது கணங்களில் நிதானித்தவாறே கந்தசாமியைப் பார்த்தபடி, "இந்த மருந்துகளை எந்தக் கடையிலே வாங்கினீர்கள்?'' என்று கேட்டான்.

கந்தசாமி தலையைச் சொறிந்துவிட்டு, ''குலசிங்கத்தினுடைய மருந்துக் கடையிலேதான் வாங்கின மருந்துகள்'' என்றான்.

இராமகிருஷ்ணனின் முகத்திலே எரிச்சலும் கோபமும் கவிந்தன.

"மனித உயிரைக்கூட கொஞ்சமும் பெறுமதியற்றதாக நினைத்து இவர்களெல்லாம் எவ்வளவு மோசடிகள் செய்கிறார்கள். இவர்களையெல்லாம் நடுவீதியிலே நிற்க வைத்துச் சவுக்கடி கொடுத்தால் கூட அது குறைந்த

தண்டனைதான்... இந்தக் கடைக்காரன் என்ன செய்திருக்கிறான் தெரியுமா?... நான் எழுதிக் கொடுத்த மருந்துகளிற்குப் பதிலாக வெறும் 'ஆஸ்பிரின்' மாத்திரைகளைக் கொடுத்திருக்கிறான்... உண்மையிலே சொல்லப்போனால் நோய்க்குரிய மருந்துகளில்லாமல்தான் தங்கச்சியம்மா செத்துப் போயிருக்கிறாள்.... இது நோயாலே ஏற்பட்ட மரணமல்ல... கொலை... அவள் கொலை செய்யப்பட்டிருக்கிறாள்...''

இப்போது அவன் மட்டுமே உணர்ச்சி வசப்பட்டிருக்கவில்லை. கந்தசாமியும், சேகரும் கொதிப்போடு நின்றார்கள்.

சேகர் சொன்னான் சினம் தெறிக்கின்ற குரலிலே: ''இரண்டு பேருமே வாருங்கள். மருந்துக்கடையிலே போய்க் கேட்டுவிடலாம். இப்பிடியான விஷயங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டிருந்தால் நில்லாமலே நீண்டு கொண்டிருக்கும். இந்தக் கொலைகாரனுக்கு எதிராகத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி இதற்கு முன் இவன் எத்தனை கொலைகள் செய்திருப்பான்' என்றான்.

இராமகிருஷ்ணனுக்கு சேகர் சொன்னவையெல்லாமே நியாயமாகவும், தனது மன உணர்வின் பிரதிபலிப்பாயும் தெரிந்தன.

நகரின் மூலைப்பக்கத்திலுள்ள 'குலசிங்கம் பார்மஸி'யை மூலைக்கடையென்றே யாவரும் அறிவார்கள். நகரமையத்திலே, பஸ்நிலையத்தின் மூலைப்புறத்திலேயுள்ள அவனது பார்மஸியிலே, அரசினர் ஆஸ்பத்திரியிலிருந்து மருந்துகள் திருட்டுத்தனமாகக் கொண்டு செல்லப்பட்டு விற்கப்பெறுவதாய் ஏற்கனவே பல முணு முணுப்புகள். நகரத்தின் முக்கிய புள்ளிகளில் குலசிங்கம் ஒருவனாதலால் யாருமே இதைப் பற்றி பகிரங்கமாகப் பேசிக்

கொள்வதில்லை என்பதனை இராமகிருஷ்ணன் அறிந்திருக்கவில்லை.

மூலைக்கடையின் எதிரே ஜீப்வண்டி நிறுத்தப்பட்டதனைக் கடைக்கண்ணால் கவனித்த குலசிங்கம், அவர்கள் கடைப்படிகளிலே ஏறியபோது, அதைத் தெரியாதவனைப் போல பத்திரிகையை அவதானமாகப் படிப்பவனைப் போன்று பாவனை செய்து கொண்டிருந்தான்.

பின்னர் காலடிச் சத்தத்தைக் கேட்டு கவனங் குலைந்தவன் போலெழுந்து, அட்டகாசமான வரவேற்புக் குரலோடு முகத்திலே இன்னொரு முகத்தை அணிந்தவனாக இராமகிருஷ்ணனையும் சேகரையும் வரவேற்றான்.

விஷயத்திற்கு நேராகவே வந்தான் இராமகிருஷ்ணன். தங்கச்சியம்மாவின் மரணத்திற்கு நீயே பொறுப்பேற்க வேண்டுமென்று அவனது குரல் சுட்டுவிரல் நீட்டிக் குற்றம் சாட்டிற்று. ஆயினும் இந்த விஷயமே தெரியாதவன்போல குலசிங்கம் பதில் கூறினான்: "எங்களினுடைய கடையிலை நாங்கள் யாருமே அப்படிப் பிழை விட்டிருக்க மாட்டோம் டொக்டர். இப்படியெல்லாம் குற்றங் கேட்க வேண்டிவரும் என்றுதான் நான் இந்தக் கடையை மூட ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால் ஏழை, எளிய சனங்களினுடைய கட்டாயத்தாலேயும், அவர்களினுடைய நன்மை கருதியுந்தான் நான் இந்தக் கடையையே நடத்திக் கொண்டிருக்கிறேன்... டொக்டர், இதையெல்லாம் விஷயம் அறியாத ஒருவன் சொல்லியிருந்தால் நான் அதைக் கணக்கிலேயே எடுத்திருக்கப்போறதில்லை... என்ன டொக்டர் இது...இப்படி என்னுடைய மனதினை நோகச் செய்திட்டீங்கள்...."

சலித்து அலுத்து வந்தது குலசிங்கத்தின் குரல். மெலிந்த உருவமும், பசித்த கண்களுமுள்ள அவனது பொய்யான பாவனைகள் சேகருக்கு மிகவும் எரிச்சலை மூட்டின. 'நீ எவ்வளவு கொலைகளையெல்லாம் செய்து

விட்டு இப்படியொரு அப்பாவியாக நடித்துக் கொண்டிருக்கிறாய்? சகல போக்கிரித்தனங்களையும் வாழ்வின் ஆதாரமாயும், அடித்தளமாயும் கொண்டிருக்கிற நீங்கள் வெளியுலகிற்கு எவ்வளவு சத்திய வந்தர்களாய் மிகக் கவனமாயும் திட்டமிட்டும் தோற்றங் காட்டுகிறீர்கள்...'

கந்தசாமி ஆணித்தரமான குரலிலே குலசிங்கத்தைப் பார்த்து உறுமினான்:

"என்னய்யா கதை விடுகிறீர்கள்? டொக்டர் ஐயா எழுதித்தந்த மருந்துத் துண்டை அப்படியே உங்களிட்டைக் கொண்டு வந்து தந்தேன். நீங்கள் தான் முப்பது ரூபாய்க் காசையும் வாங்கிவிட்டு எனக்கு மருந்தைத் தந்தீங்கள... என்னுடைய பிள்ளை செத்துப் போனதுக்கு நோய் காரணமில்லை. நீங்கள்...நீங்கதான் காரணம்..."

பொங்குகின்ற ஆவேசத்தோடு கைகளைப் பிசைகின்ற கந்தசாமியை மிரட்டுகிற குரலிலே நிறுத்திட முயன்றான் குலசிங்கம்.

''கூலிக்காரப் பயலே, யாரோ தூண்டிவிட்டுத்தான் நீ கொஞ்சமும் மட்டு மரியாதையே இல்லாமல் கதைக்கிறாய். எனக்கு உன்னுடைய முப்பது ரூபா பெரிய காசில்லை.... நீ, நான் தந்த மருந்துக் குளிசையை எங்கையாவது உள்ள கள்ளுக் கொட்டில்லை வைத்து விட்டுக் கள்ளுக் குடித்திருக்கிறாய், அங்கே மாறிப் போயிருக்கும்... என்ன டொக்டர், நீங்கள் இப்பிடியான தெருப் பொறுக்கிகளுடைய சொல்லைக் கேட்டுக் கொண்டு என்னை அவமரியாதை செய்யலாமா?"

''நீங்கள் சமாளிக்கிற வேலை பார்க்க வேண்டாம்... கந்தசாமி சொல்கிறதை நாங்கள் நம்புகிறோம். உண்மையாகச் சொன்னால் தங்கச்சியம்மாவினுடைய மரணத்துக்கான பொறுப்பை நீங்கள் தான் ஏற்றுக் கொள்ளவேணும்.... அதுமட்டுமில்லை. இந்தச் சம்பவத்தினுடைய எதிர் விளைவுகளெல்லாம் உங்களுக்குத்தான் வந்து சேரும்."

அந்த வார்த்தைகள் குலசிங்கத்தின் ஆளுமையினை மூர்க்காவேசத்தோடு மோதியிருக்கவேண்டும். அவன் அணிந் திருந்த பொய் முகம் உடைந்து நொறுங்கிட உண்மையான முகம் பளீச்சென்று வெளியானது.

"நீங்களெல்லாம் ஏதோ இரண்டு சொல்லுத் தெரிந்த ஆட்களென்றுதான் நான் கதைத்துக் கொண்டிருக்கிறேன். ஏதோ பெரிய கதைகளெல்லாம் விடுகிறியள்... இவன் என்னுடைய கடையிலை மருந்து வாங்கினதுக்கு என்ன அத்தாட்சி இருக்கிறது? நான் பில் தந்திருக்கிறேனா?... இருந்தால் காட்டவேண்டிய இடத்திலை காட்டி, எடுக்க வேண்டிய என்ன நடவடிக்கையையும் நீங்கள் எடுக்கலாம். சரி, வியாபாரத்தைப் பழுதாக்காமல் நீங்கள் போகலாம்"

சேகர் அந்த வார்த்தைகளால் மேலும் ஆத்திரமுற்றான்.

"இந்த விஷயம் இத்தோடை முடியக்கூடியதில்லை."

குலசிங்கம் எரிச்சலூட்டும் விதத்திலே அட்டகாசமாகச் சிரித்தான். பின்னர் சேகருக்கு அருகிலே போய் அடங்கிய குரலிலே கேட்டான் :

"என்ன தம்பி, உங்களுக்கெல்லாம் தேவையான விஷயங்களைக் கந்தசாமி தானா 'சப்ளை' பண்ணிக் கொண்டிருக்கிறான். அதுதான் இவ்வளவுக்கு அவனோடை நீங்கள் உருகுறீங்களா?"

சேகர் ஆத்திரத்தோடு கையை வீசிக்கொண்டு திரும்பினான். இராமகிருஷ்ணன் அவனைச் சமாதானப் படுத்தி வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

அன்று மாலையில் இராமகிருஷ்ணனின் 'குவார்ட்டர்ஸ்'ற்கு பொலிஸ் ஜீப் வந்தது. குலசிங்கத்தின் கடைக்குள் அத்துமீறிப் புகுந்து கண்ணாடி அலமாரி, மேசை, கதிரைகளை உடைத்து குலசிங்கத்தையும் கொல்ல முயற்சித்ததாக சேகர், இராமகிருஷ்ணன் மீது குலசிங்கம் தகுந்த

சாட்சியங்களுடன் பொலிசில் புகார் செய்திருப்பதால் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி அவர்கள் சொன்னார்கள்.

## எட்டு

காயத்ரி தேவி தன்னைச் சந்திக்க வந்தது இராமகிருஷ்ணனுக்கு மிகவும் வியப்பை அளித்தது. இவளைக் கண்ட போதிலே மனதிலே இனந்தெரியாத சந்தோஷமும் விளைந்தது. சௌந்தர்யமிக்க அவளது புன்னகையும், அந்த அழகான நீளக்கண்களும் அவளுடைய இனிய இயல்புகளையே பிரதிபலிப்பதாக உணர்ந்து கொண்டான் இராமகிருஷ்ணன்.

''உங்களை எனது 'குவார்ட்டர்சு'க்கு வருவீர்கள் என்றே நான் எதிர் பார்க்கவில்லை. இந்தக் கதிரையிலே உட்காருங்கள்... என்ன சாப்பிடுகிறீர்கள், டீயா, கோம்பியா அல்லது ஸொப்ட் டிறிங்ஸா...''

இராமகிருஷ்ணனின் பரபரப்பினைப் பார்த்து காயத்ரி தேவி புன்னகை செய்துகொண்டாள்.

''ஏன் இப்படி அவசரப்படுகிறீர்கள்? இப்போது தானே வந்தேன்... இதற்குள் தாகம் வந்துவிடவில்லை. அலமாரி நிறையப் புத்தகம் வைத்திருக்கிறீர்களே...நிறைய வாசிப்பீர்கள் போல இருக்கிறதே.. எனக்கும் புத்தகங்கள் என்றால் நல்ல விருப்பம். உங்கள் புத்தகங்களை ஒருமுறை பார்க்கலாமா?''

''ஓ...தாராளமாக இதிலே பல புத்தகங்கள் எனது நண்பன் சேகரின் சிபாரிசிலே வாங்கியவை. மருத்துவ மனோதத்துவ நூல்களை எல்லாம் புதிது புதிதாக வாங்கிப் படிப்பதிலே எனக்கு நிறைய விருப்பம்...ஆனால் புத்தகங்

கள் இப்போது யானை விலை, குதிரை விலைக்கு வந்து விட்டன. வாருங்கள், வந்து பாருங்கள்...''

கண்ணாடி அலமாரியினைத் திறந்தான் இராமகிருஷ்ணன்.

ராகுல்ய சாங்கிருத்யாயனின் 'வால்காவிலிருந்து கங்கை வரை' 'Freud ன் 7 On Sexuality, Raymon Williams ன் Culture, Irving Wallace ன் The Man, ஆகிய புத்தகங்களைத் துளாவினாள்.

''தமிழிலை உங்களிடம் அதிக புத்தகங்கள் இல்லை· புதுமைப்பித்தன், பா. செயப்பிரகாசம், பொன்னீலன்... இவ்வளவுதானா? என்னிடம் நிறையப் புத்தகங்கள் உள்ளன...''

பா. செயப்பிரசாத்தின் 'காடு' புத்தகத்தையும் அவள் எடுத்துக் கொண்டாள்.

''நான் ஜெயகாந்தனின் முதற்பாதி புத்தகங்களை மிக விரும்பிப் படிக்கிறேன். அம்பை, ராஜம்கிருஷ்ணன், ஜானகிராமன், அசோகமித்திரனையும் பிடிக்கும்... இலங்கையில் இப்போது எழுதுபவர்களில் கணேசலிங்கனையும் யோகநாதனையும் பிடிக்கும்... நீங்கள் கட்டாயம் 'சடங்கை'யும், 'இரவல் தாய்நாட்'டையும் படித்துப் பார்க்கவேண்டும். என்னிடம் எல்லாப் புத்தகங்களும் உள்ளன....''

அவளின் முகத்திலே குழந்தையின் பரவசமும் புளகாங்கிதமும் தெரிந்தன. தன்னை மறந்த பற்றுணர்வோடு அவள் சொல்லிக் கொண்டிருக்கையிலே அவளின்பால் இது வரை காலமும் வைத்திருந்த அபிப்பிராயம் இப்போது மேலும் உயர்ந்தது.

''நீங்கள் என்னைப் பிரமிக்க வைக்கின்றீர்கள். ...உங்களைப் பார்க்கவே எனக்குப் பொறாமையாக இருக்கின்றது. எவ்வளவு விஷயங்களையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்கள்.''

தன்னை மறந்தவளாய் வார்த்தைகளை நழுவ விட்டாள் காயத்திரி.

"ஒவ்வொரு ஈடுபாடும் இன்னொரு கவலையை மறைப்பதற்கும், முகங்கொடுக்க விரும்பாமையாலும்தான் ஏற்படுகின்றது. ஒன்றிலிருந்து தப்பித்து நழுவிக் கொண்டு இன்னொன்றுக்குள் தஞ்சம் புகுந்து—அதன் வாயிலாக அதிசயிக்கத்தக்க விதத்திலே எங்கள் தலையை கம்பீரமாக உயர்த்திக் கொள்ள விரும்புகிறோம்; இதுதான் விஷயம்; ராம், இதுவேதான் விஷயம்..."

முதன் முறையாக அவளின் முகத்திலே பனித்திரையாகப் படர்ந்த கவலையினை அவதானித்த இராமகிருஷ்ணன், அவள் தொடர்ந்து என்ன சொல்லப் போகின்றாள் என்பதனைக் கவனிப்பதற்கு உன்னிப்போடு தயாரானான்....

ஆனால் அவள் கணப்பொழுதிலேயே தன்னைப் பழைய நிலைமைக்குத் திருப்பிக் கொண்டாள்.

"முக்கியமான விஷயத்தைப் பேசவென்று வந்துவிட்டு நான் உங்களோடு இலக்கியத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன்... எனக்குள்ள மிகப்பெரிய பலவீனம் இதுதான். அதை மாற்றவே முடியவில்லை... எங்கே நல்ல புத்தகங்களைக் காணுகின்றேனோ அங்கே எல்லாவற்றையும் மறந்து விட்டு உட்கார்ந்து கொண்டு விடுவேன்.... ஐ ஆம் ஸோ சாரி.... மிஸ்டர் ராம்...."

இராமகிருஷ்ணன் புன்னகை செய்தான்.

"இல்லை.... மிஸ், என்ன அது அவசரமான விஷயம்....? என்னவென்று சொல்லுங்கள்?"

திடுமெனக் கேட்டாள் காயத்ரி தேவி:

"பொலிஸ் ஸ்டேஷனில் என்ன நடந்தது?... அதைப் பற்றிக் கேள்விப் பட்ட நேரம் தொடக்கம் மனங்குழம்

பியே போய்விட்டது... ஆனால் நான் வந்த விஷயம் அதனைவிட முக்கியமானதும், பயங்கரமானதும்...''

''சொல்லுங்கள்? என்னவென்று சொல்லுங்கள்?''

காயத்திரி தேவி சாவகாசமாக உட்கார்ந்து கொண்டாள்.

''உங்களுக்கு பொலிஸ் ஸ்டேஷனில் என்ன நடந்தது? அப்படியெல்லாம் நடப்பதற்கு எங்கே திட்டமிடப்பட்டது என்ற விஷயமெல்லாம் எனக்கு நன்றாகவே தெரியும்... அதுவல்ல நான் சொல்ல வந்த விஷயக்ம்... அட்வக்கேட் நடராஜன், நடனசபாபதி, கனகலிங்கம் ஆகியோர் நேற்று வீட்டுக்கு வந்து எனது கணவருடன் ரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தது எனது காதுகளிலே தெளிவாகவே கேட்டது... அவர்கள் உங்களை எப்பாடுபட்டாவது இங்கிருந்து அடித்துத் துரத்துவதற்கு திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிறார்கள்.... எதற்கும் நீங்கள் மிகவும் கவனமாக இருந்து கொள்ளுங்கள்...''

ஆத்திரமும், அதிசயமும் படர்ந்தது இராமகிருஷ்ணனின் நெஞ்சிலே.

''நான் இவர்கள் யாருக்குமே என்ன தீமையும் செய்ததில்லையே... பிறகு எதற்காக இவர்கள் என் மீது இப்படியெல்லாம் வன்மம் சாதிக்கிறார்கள்? இது நியாயமாகுமா?''

அவனை இரக்கத்தோடு பார்த்தாள் காயத்திரி.

''நீங்கள் இவர்கள் சொல்கிறவற்றையெல்லாம் மறுக்காமல் செய்தால் வெகு நிச்சயமாக உங்களை நல்லவன், அற்புதமானவன் என்று இவர்கள் புகழ்வார்கள். அவர்களுக்கு விரோதமாக நீங்கள் செயற்பட்டால் அவ்வளவு தான். உங்களுக்கு விலாசமே இல்லாமல் செய்து விடுவார்கள். எவ்வளவு தள்ள முடியுமோ அப்படியே செய்து விடுவார்கள்....இவர்களோடு நீங்கள் கவனமாயிருக்கவேண்டும். உங்களிலே கனகலிங்கம் தான் மிகவும் ஆத்திரத்தோடுள்

ளான், அவன் மிகவும் மோசமான ஆள். இப்போது உங்களுக்கு குழிபறித்துக் கொண்டிருப்பவனும் அவனேதான்....'.

மெல்லச் சிரித்தான் இராமகிருஷ்ணன்.

''ஏதோ ஒரு உதவியைத் தனக்குச் செய்து தரவேண்டும், என்று அவன் கேட்டுக் கொண்டிருந்தான்....என்னவென்று சொல்லவில்லை. பின்னர் என்னை அவன் சந்திக்க வந்தபோது அதைப்பற்றிப் பேசச் சூழ்நிலை சரியாயிருக்கவில்லை பிறகு என் மீது கசப்புணர்வில்லாதவன் போலவே நடந்து கொண்டான். என்ன உதவி வேணுமென்று கேட்டானோ தெரியவில்லை...''

ஆச்சரியம் கண்களில் மின்ன அவனைப் பார்த்தாள் காயத்ரிதேவி:

''கனகலிங்கம் என்ன உதவி கேட்க நினைத்தான் என்பது இன்றுவரை உங்களுக்குத் தெரியாதா?''

இராமகிருஷ்ணன் அப்பாவித்தனமாக காயத்திரிதேவியைப் பார்த்தான்:

''பிறகு அவன் சொல்லவும் இல்லை, நானும் அதைப் பற்றிக் கேட்க அக்கறை கொள்ளவும் இல்லை. பொதுவாக நான் மற்றவர்களின் தனிப்பட்டவிவகாரங்களில், அவர்கள் விரும்பிக்கேட்டால் ஒழிய உதவி செய்யப் போவதில்லை.... பங்கு கொள்வதுமில்லை.''

''சரி.... உங்களுடைய கருத்தும், குணாதிசயமும் மிகவும் சிறந்தவைகள்தான். அதனாலேதான் நீங்கள் மாசு படாமலே இருக்கிறீர்கள்....'' அழகான ஆங்கில உச்சரிப்பிலே தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள் காயத்திரிதேவி:

''அவன்—அந்த சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்காக காக்கிச் சட்டை அணிந்து கொண்டு போலீஸ் அதிகாரியாக வேலைபார்க்கிற கனகலிங்கம் ஏதுமே அறியாத இளம் பெண்ணொருத்தியை—வனஜா

என்பவளைக் கெடுத்து விட்டான். அவள் கர்ப்பவதியான தும் அவளது கர்ப்பத்தைக் கலைப்பதற்காக உங்களிடம் உதவி கேட்டு வந்திருக்கிறான். உங்களைக் கொண்டு அதைச் செய்வது கஷ்டம் என்று தெரிந்ததும் அதை அப் படியே பேசாமல் விட்டு விட்டான்... நாட்டு வைத்தியம் மூலமாக அதனைச் செய்து, அந்த அப்பாவியை இறக்கவும் செய்து விட்டான்...''

காயத்திரி தேவியின் வார்த்தைகளிலேயும், நீண்ட விழி களிலேயும் ஆத்திரம் நெருப்பின் வெம்மையோடு வெளி யாகிற்று.

''எனவே, இத்தகைய அயோக்கியர்களெல்லாம் ஒன்று சேர்ந்து உங்களை எப்படியும் சிறைக்கம்பிகளின் பின் னாலோ, அல்லது வேலையிலிருந்து நிறுத்தவோ முயற்சி செய்கிறார்கள் என்பதனை நீங்கள் அறிந்து கொண்டு கவனமாயிருந்து கொள்ளுங்கள். அவர்கள் பேசிக் கொண் டிருப்பதைக் கேட்டபோது நான் உணர்ந்து கொண்டவை இவைதான். உடனேயே உங்களை எச்சரிக்கை செய்ய வேண்டுமென்பதற்காகவே உங்களைத் தேடி வந்தேன்...''

நன்றியோடு அவளைப் பார்த்தான் இராமகிருஷ்ணன். கனிவாகவே குரல் வந்தது.

''என் மேல் இவ்வளவு அக்கறை கொண்டு நீங்கள் இதனை இங்கு வந்து சொன்னமைக்காக நான் மிகவும் நன்றியுள்ளவன். இந்த உதவியை மறக்க மாட்டேன்....''

காயத்திரி தேவி சிறிது நேரம் யோசித்து விட்டு அவ னுடைய அறையை நோட்டம் விட்டாள். மிக ஏழ்மையான அந்த ஏழ்மை தோற்றுவித்த எளிமையே சூழ்ந்ததாய் காணப்பட்டது அவனுடைய அறை. மூன்று நாற்காலிகள் சூழ்ந்துள்ள டைனிங் டேபிள். சுவரிலே மாட்டப்பட்டிருக் கிற ஒரேயொரு இயற்கைச் சித்திரம். இவ்வளவுதான்.

விறுவிறுவென்று உள்ளே சென்ற இராமகிருஷ்ணன் இரண்டு கிளாஸ்களில் ஒரேஞ் பார்லி கொண்டு வந்து அவளிடம் நீட்டினான்.

''நான் மிகவும் நம்பிக்கையோடும், எதிர்பார்ப்புகளோடுந்தான் 'வீல்ஸ் கிளப்'பில் சேர்ந்து கொண்டேன். ஆனால் இப்போதோ நாளுக்கு நாள் ஏமாற்றமாயிருக்கிறது. எல்லாமே பகல் வேஷந்தானோ என்ற சந்தேகமும் ஏற்படுகிறது....''

காயத்திரிதேவி ராகுல்ய சாங்கிருத்யாயனின் புத்தகத்தைப் புரட்டியவாறே அவனைப் பார்த்தாள்.

''உங்கள் சந்தேகம் நியாயமானதுதான். என்றும் இத்தகைய சந்தேகம் உங்கள் மனத்திலே இருப்பது நல்லது. ஏனென்றால் உங்களைப் போன்றவர்கள் அல்லாவிட்டால் ஏமாந்து வாழ்விலே முற்றாகவே தோல்வியடைந்து போய் விடுவார்கள்.... நானும் இப்படித்தான் பல பொய்மான்களின் பின்னே ஓடிக் களைத்திருக்கின்றேன்... இந்த மேல் தட்டு வாழ்க்கை எல்லாவிதங்களிலும் பொய்முகங்களை அணிந்து கொண்டுள்ளதுதான்.... இதற்குள் புதிதாக வருபவர்கள், திக்குத் தெரியாத காட்டிற்குள் அகப்பட்டவர்களாய் அலைந்து களைத்து தோற்பதுவே விதி.... விதி என்பதை உரிய விளைவு என்ற அர்த்தத்திலேயே சொல்கிறேன்....''

காயத்திரிதேவி பெருமூச்சு விட்டாள். அவளின் வாழ்வின் பின்னணியிலே ஆறாத காயம் மறைந்திருப்பதை இராமகிருஷ்ணனால் இப்போது உணர முடிந்தது.

''நீங்கள் ஒரு வித்தியாசமான பெண்ணாக, புரிந்து கொள்ள முடியாத பெண்ணாகவே எனக்குத் தென்படுகிறீர்கள். உங்கள் கணவர் மிகவும் அதிஷ்டசாலி. இப்படியொரு புத்திஜீவியான பெண் ஒரு ஆணுக்குக் கிடைப்பது மிகவும் பாக்கியந்தான்....''

காயத்திரிதேவி கண்கள் மலர அவனைப் பார்த்தாள். புன்னகை செய்தாள். பின்னர் அழகுறச் சிரித்தாள். பேசாமலேயே கண்களிலே வார்த்தைகள் குறும்பு செய்தன.

இராமகிருஷ்ணன் சட்டென்று நிதானித்துக் கொண்டான். தன்னை மீறி, எல்லை கடந்து பேசிவிட்டதாக தன்னையே அவன் கடிந்தவாறே மௌனமாயிருந்தான். உணர்ச்சிவசப்பட்ட தனது நிலையை எண்ணியபோது தன் மீதே அவனுக்கு கோபம் ஏற்பட்டது.

"என்ன, ராம் ஒரேடியாய் மௌனமாகி விட்டீர்கள்.... என்னை நிறையப் புகழ்கிறீர்களே என்ன விஷயம்... சொல்லுங்கள்?"

"இல்லை.... ஒரு உற்சாகத்தில் நிறையப் பேசி விட்டேனோ என்று யோசித்தேன். அப்படியிருந்தால் குறையாக எண்ணாதீர்கள்...."

மீண்டும் புன்னகை செய்தாள் காயத்திரி. புன்னகை செய்தவாறே தன்னுடைய கடந்த காலத்தினை நினைவு கூர்ந்தாள்.

ஏழை ஆசிரியனின் மூன்றாவது மகளாகப் பிறந்தவள் காயத்திரி தேவி. வாயையும் வயிற்றையும் கட்டி, தகப்பனார் அவளைப்படிப்பித்துக் கொண்டிருக்கையிலேயே அவள் மிகவும் துணிச்சல்காரியாகத் திகழ்ந்தாள். எதற்குமே அஞ்சமாட்டாள். கலகலப்பாகவே பேசிக் கொண்டிருப்பாள்.

"பெண்ணாகப் பிறந்தவள் இப்படி அடக்க ஒடுக்கமில்லாமல் நடந்து கொள்ளக்கூடாது... புகையிலை விரித்தால் போச்சு... பொம்பிளை சிரிச்சால் போச்சு என்று

மூந்தின காலத்திலை சும்மா சொல்லி வைக்கவில்லைத் தெரியுமா?"

தாய் அதட்டுகிறபோதும் காயத்திரிதேவி சிரித்துக் கொள்வாள். பின்னர் ஏதாவது புத்தகமொன்றை எடுத்துப் படிக்கத் தொடங்கிவிடுவாள். அவளுக்கு எத்தனையோ பேர் காதற் கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் பெரிய விஷயமாகக் கருதாமல் அந்தக் கடிதங் களையெல்லாம் அவள் உடனுக்குடனேயே கிழித்து வீசியிருக்கின்றாள்.

'பாங்கி'லே வேலை செய்து கொண்டிருக்கையிலே ஏரம்பமூர்த்தி அவளை எப்போதாவது ஒருமுறை தன்னு டைய அறைக்கு அழைப்பான். அவளினுடைய அழகையோ நளினத்தையோ கொஞ்சமும் அக்கறைப் படுத்தாமல் அவளுக்கு கட்டளைகள் இடுவான். அதிலே தெரிந்த ஆண்மைத்தனமே இவளுக்கு அவன்பால் விருப்பத்தினைத் தோற்றுவித்து திருமணத்திலே கொண்டுவந்து விட்டது. ஆனால் தனது கணிப்பின் சரிவினை, தவறுகளையெல்லாம் ஒரு வாரத்தினுள்ளேயே அறிந்து கொண்டாள். அந்த ஏமாற்றமே முகத்தின் சந்தோஷத்தினை கொஞ்சங் கொஞ்சமாக அழிக்கத் தொடங்குவதை அவளே உணர்ந்து கொண்டாள்.

ஒவ்வொரு விஷயத்திற்கும் அவளுக்கு அவன் கட்டளை யிட்டான். உறங்குவது, விழித்தெழுவது, உண்பது, தேநீர் அருந்துவது, உலாவப் போவது... எல்லாம் நேரம், நேரம், நேரம்...

"ஆனால் நான் இயந்திரமாக மாறச் சம்மதிக்க வில்லை. ஒவ்வொன்றிலும் அவனோடு முரண்பட்டேன். அதனால் அடியும் பட்டேன். எத்தனை நாளைக்கு நானும் கைகளைக் கட்டிக் கொண்டிருப்பேன்... அவன் காரண காரியமே இல்லாமல் என்னை அடிப்பான். தான் ஒரு ஆண் மகன் என்பதாலும், பணக்காரக் கணவன் என்பதாலும்

என்னை உதைப்பதாக அடிக்கடி சொல்லிக் கொண்டே யிருப்பான் ..சிகரெட் தணலை என்னிலே ஒருநாள் வைத்து அலற அலற அவன் அழுத்தினான்...'

இராமகிருஷ்ணனுக்கு உடம்பில் தணல் சுட்டது.

''நான் என்னை என்னிலிருந்து உடனேயே உடைத் தெறிந்தேன் – இத்த Sadistக்கு, வக்கிரமானவனுக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டுமென உறுதிகொண்டேன். அடுத்தகணமே பளீரெனறு அவன் கன்னங்களிலே மாறி மாறி அறைந்தேன். மூக்கிலிருந்து இரத்தம் வழிய என்னை பரிதாபமாகப் பார்த்துக்கொண்டு செயலற்றுப்போய் நின்றான். கண்களிலே நீர் துளும்பியிருந்தது..''

''இன்னொருமுறை நீ எனக்கு கையை நீட்டுவாயானால், உன்னைத்தேடிக்கொண்டுவரும் பலபேருக்கு முன்னே வைத்து உன்னை நான் அவமானப்படுத்துவேன்.. இனி உன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றி நீயே முடிவெடுத்து கொள்ளலாம் என்றேன்.. அதன் பிறகு என்னோடு மிகவும் மரியாதையாக நடந்து கொள்ளுவான்... கிட்டக்கூட வர மாட்டான்.. ஆனால் வெளியே பார்த்தால் எங்களைப் போல இனிய தம்பதிகள் யாருமே இல்லையென்றுதான் சொல்லுவார்கள்...''

ஒவ்வொரு இதயத்திற்குள்ளும் எத்தனை சஞ்சலங்கள்; நிராசைகள்; துனபமே நிழலாய் படர்ந்திருக்கின்ற அன்றாட நிகழ்ச்சிகள்... இவ்வளவு அழகான, அறிவான பெணணைச் சுற்றி எத்தனை சிறை மதில்கள்.

''உங்களைப் பார்த்தால் இவ்வளவு துக்கங்களை யெல்லாம் சுமந்திருக்கிற பெண்ணாகத் தெரியவில்லை. உங்களைப் பார்த்தால், பேசினால் — நம்பிக்கையும், சந்தோஷமும் தானாகவே மனதில் ஊற்றெடுத்துவிடு கிறது...''

''ஓ! என்னை நிறையவே புகழ்கிறீர்கள். ஆனாலும் உண்மை இதுதான். என்னைப் போன்ற பெண்கள், இந்த

Higher Circleஇல் இப்படித்தான் வேஷம் போட்டுக் கொள்ள முடியும். ஆனால் அதுகூட எனக்கு வெறுத்துப் போய் விட்டது...''

காயத்திரி தேவி தன்னுடைய நீண்ட கண்களை அரை குறையாக மூடிக்கொண்டு கொஞ்ச நேரம் மௌனமா யிருந்தாள். பின்னர் புன்னகையை மூடிய சோகத்தோடு சொன்னாள்:

''ராம்... நான் எங்கேயோ எப்போதோ படித்த சில வசனங்கள் என் மனதில் பதிந்து என் வாழ்வின் இலட்சிய மாக ஊறிப்போயிருக்கின்றன... When every thing seems lost, remember, future remains... இவைதான் என்னை இப்போதும் என் ஆளுமை சிதையாமல் இயக்கிக் கொண் டிருக்கின்றன...''

## ஒன்பது

மருத்துவமனையிலிருந்து 'குவார்ட்டர்சுக்கு' திரும்பிய இராமகிருஷ்ணன், வாசலிலே நின்ற பொலிசாரைக் கண்டதும் திகைத்துப் போய்விட்டான். வெளிப்புறமாக பொலிஸ் ஜீப்பும், சுகாதாரப் பகுதி உயர்அதிகாரியின் காரும், சுகாதாரப் பகுதி உள்ளூர் சுப்பிரிண்டன்ரின் காரும் நின்றன.

''உங்கள் திணைக்களத்தின் வேண்டுகோளின்படி உங்கள் 'குவார்ட்டர்சை' நாங்கள் சோதனை போட வேண்டியுள்ளது. அறைத் திறப்புகளை என்னிடம் தரவும்...''

கனகலிங்கத்தின் இதழ்க் கடையிலும், கண்களிலும் ஏளனம் மின்னிற்று. அவனது நீண்ட கைகளிலே முரட்டுத்

தனமும் மேலோங்கி நின்றதை அவதானித்தான் இராமகிருஷ்ணன்.

திறப்புக் கோர்வையைக் கொடுத்தான்.

எந்த அதிகாரியுமே அவனது முகத்தைப் பார்த்துப் பேசாமல் கடுகடுப்பாகவே வைத்துக் கொண்டிருந்ததுதான் இராமகிருஷ்ணனுக்கு மிகுந்த மனவேதனையை அளித்தது. காயத்திரிதேவி சொன்ன வார்த்தைகள் இப்போது காதோடு வந்து கேட்டன. தன்னைச் சுற்றிலும் பெரிய ஒரு வலை நெருங்கிச் சூழ்வதுபோல உணர்வுகொண்டான் இராமகிருஷ்ணன். மௌனமாகவே வெளிக்கதிரையில் உட்கார்ந்திருந்தான்.

வெளியே நிறையத் தலைகள் தெரிகின்றன. வேடிக்கை பார்க்கிற தலைகள். அனுதாபத்தைக் கண்களிலே தேக்கி நிற்கின்ற தலைகள். என்னய்யா உங்கள் வீட்டிலேயே இப்படியான பொலிஸ் சோதனை என்று விசும்பிக் கொண்டிருக்கிற வாயோடான தலைகள்....

வெளியிலே இப்போது இன்னும் இரண்டு கார்கள் வந்து நின்றன. முதற்காரிலே இருந்து குலசிங்கம் வன்மந் தோய்ந்த முகத்தோடு இறங்கினான். பின்னால் நின்ற காரிலேயிருந்து வெற்றிவேலு. அவனுக்குப் பின்னாலே கமெராவோடு இன்னொருவன்.

வெளிக்கதவினைத் திறந்து கொண்டு உள்ளே வந்த அவர்களைக் கண்டதும் இராமகிருஷ்ணனுக்கு எல்லையில்லாச் சினம் மூண்டது. குபீரிட்ட சினத்தோடு எழுந்தான்.

''வெளியே போங்கள்''

—ஆத்திரத்தோடு சத்தமிட்டான் இராமகிருஷ்ணன். அவனுக்குப் பின்னாலே இப்போது சொல்லி வைத்தாற் போல இரண்டு பொலிஸ்காரர்கள் வந்து நின்றனர்...

''கிளிக் கிளிக்...''

கமெரா இராமகிருஷ்ணனது வார்த்தைகளைப் பரிகசித்துக்கொண்டே கண் சிமிட்டிற்று.

கண நேரந்தான்.

கையை ஓங்கியபடி புகைப்படப்பிடிப்பாளரின்மேல் பாய்ந்தான் இராமகிருஷ்ணன்.

கமெராவைப் பிடுங்கி, பிலிம் சுருளை எடுக்க முயன்றவனை குலசிங்கம் தாக்கமுயன்றபோது குறுக்கே மின்னலாகத் தெறித்தான் பொன்னையா.

இராமகிருஷ்ணன் பிலிம் சுருளை சுக்கல் சுக்கலாகக் கிழித்தெறிந்துவிட்டுத் திரும்பியபோது, பொன்னையா இரத்தம் பீறிடுகிற தலையைப் பொத்தியவாறே சரிந்து விழுந்து கொண்டிருந்தான்....

பதினைந்து நிமிஷங்கள் சென்றன, அங்குள்ள பதட்ட நிலைமையினை பொலிசார் தங்களின் குண்டாந்தடிகளின் உதவியோடு சுமூகமான நிலைமைக்கு கொண்டுவருவதற்கு.

உள்ளேயிருந்து ஆத்திரத்தோடு வெளியே வந்து நின்று பொலிஸ்காரருக்கு உரத்த குரலிலே கட்டளை இட்டுக் கொண்டிருந்த கனகலிங்கம், அற்ப புழுவைப்போல இராமகிருஷ்ணனைப் பார்த்தான். பின்னர் சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகளை நோட்டம் விட்டான்:

''உங்கள் 'டிப்பார்ட்மென்ட்' இராமகிருஷ்ணன் போன்ற அதிகாரிகளை வைத்திருப்பதை இட்டு நீங்கள் நிச்சயமாக வெட்கப்பட வேண்டும்... இங்கு எவ்வளவு சாமர்த்தியமாக இந்த இராமகிருஷ்ணன் காடைத்தனத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறான் பார்த்தீர்களா?''

மீண்டும் மெல்லிய கிளிக்....

குலசிங்கத்தின் பக்கத்திலே இப்போது புதிய புகைப் படப்பிடிப்பாளர் மேலும் ஒரு படமெடுக்க கோணம் பார்த்துக் கொண்டிருந்தான். கனகலிங்கம் தலையிலே தொப்பியை அணிந்து கொண்டு இராமகிருஷ்ணனுக்கு அருகாக வந்து புகைப்படப்பிடிப்பாளரின் கோணத்துக்கு அமைவாக நிற்க, அவன் மேலும் உற்சாகத்தோடு நான்கு படங்களை எடுத்துக் கொண்டான்.

"அதிகாரிகளாகிய நீங்கள்தான் இந்த 'குவாட்டர்சை' பரிசோதனை செய்யும்படி எங்களை அழைத்துவந்தீர்கள்.... உங்கள் வேண்டுகோளின்படியே 'குவாட்டர்சை' அலசி னால் எவ்வளவு பெறுமதிவாய்ந்த மருந்துகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.... இந்த மருந்துகளை நாங்கள் கண்டு பிடித்த விஷயம் வெளியே வராமலிருக்க வேண்டுமென்பதற் காகவே இவ்விடத்தில் இராமகிருஷ்ணன் காடைத்தனத் தையே உருவாக்கியிருக்கிறான் எனக்கு உள்ள அதிகாரத் தின்படி இவனது கைகளில் நான் எப்போதோ விலங்கு களை மாட்டியிருக்க வேண்டும்.... அதிகாரிகளாகிய நீங்கள் நிற்பதால் மனஞ் சங்கடப்படுகிறது....'

விநயமாகச் சொன்ன கனகலிங்கத்தை சுகாதார இலாகா அதிகாரி தணிவாகப் பார்த்தான்.

"உங்கள் கடமையிலே நாங்கள் குறுக்கிடமாட் டோம்.... உங்கள் விதிகளின்படியே நடவுங்கள்...."

இராமகிருஷ்ணனின் கைகளிலே விலங்கு ஏறிற்று

**கா**யத்திரி தேவி அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந் தாள். ஆத்திரமும் ஆவேசமும் வார்த்தைகளாய்த் தெறித் தன. ஏரம்பமூர்த்தி மௌனமாகவே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்:

''கடைசியில் நீஙகள் எல்லோரும் சேர்ந்து இராம கிருஷ்ணனை வேலையிலிருந்து தற்காலிகமாக நிறுத்தும் படி செய்து விட்டீர்கள் அவனை பொலிஸ் ஸ்டேஷனிலும் நீதிமன்றத்திலும் வைத்து அவமானப்படுத்தி விட்டீர்கள்... என்ன அற்பத்தனமான மனிதர் நீங்கள் ..நீங்களெல்லாம் பெரிய மனிதர்கள்...கனகலிங்கம் வனஜா என்றபெண்ணை கெடுத்து கர்ப்பச்சிதைவு செய்து அவளை நடைப்பிண மாக்கினான் ..வெற்றிவேலு கள்ளக்கையொப்பங்களிட்டே பணஞ்சேர்த்தான்.. நீங்கள் மட்டுமென்ன?...எத்தனை பேருக்கு ஓ டியும், கடனும் கொடுத்து 'கொமிஷன்' வாங்கி யிருப்பீர்கள்...''

ஏரம்பமூர்த்தி தயக்கத்தோடு குறுக்கிட்டான்:

''காயத்திரி...ஏன் என்னை இப்படியெல்லாம் அவமா னப்படுத்துகிறாய்...இப்போது நான் என்ன செய்ய வேண்டுமென்று நீ திட்டிக் கொண்டிருக்கிறாய்...அதைச் சொல்லு..''

காயத்திரி தேவி தணிந்தாள்.

''இராமகிருஷ்ணனை இப்போது 'றிமாண்டி'லிருந்து வெளியே கொண்டுவர வேண்டும்...அவ்வளவுதான் ..'

ஏரம்பமூர்த்தியின் முகம் திகைத்து வெளிறிற்று.

''காயத்திரி....என்னை எவ்வளவு சிக்கல்களுக்குள்ளே நீ உட்படச் செய்கிறாய் என்பதைக் கொஞ்சம் யோசித் துப்பார்...நடனசபாபதி, வெற்றிவேலு, நடராஜன், கனகலிங்கம், புவனேஸ்வரன் என்பவர்களெல்லாம் இந்த சமூகத்திலே சாதாரண மனிதர்கள் அல்ல, ஒவ்வொரு துறையிலும் அவர்கள் மேன்மையானவர்கள்...பலமான வர்கள். எதையும் செய்ய வல்லமையுள்ளவர்கள்.... அவர்கள் எல்லோருமே இராமகிருஷ்ணனுக்கு எதிராக நிற்கிற போது...''

காயத்திரிதேவி செருமினாள்:

"வீணாகப் புலம்பாதீர்கள்... இராமகிருஷ்ணனை நீங்கள் எல்லோருமே சேர்ந்துதான் இந்தச்சதி வலைக்குள் வீழ்த்தி னீர்கள்... இராமகிருஷ்ணனுக்காக நீங்கள் நிற்பதால் நீங்கள் நீதியின் பக்கம் நிற்கிறீர்கள்... அதோடு நீங்கள் சொன்னவர்களெல்லாம் உங்களின் தயவையும் ஓரளவு நாடி நிற்பவர்களே... ஆகையால் நீங்கள் பயமின்றி நான் சொல்வதைச் செய்யலாம்...."

ஏரம்பமூர்த்தி சிறிது நேரம் மௌனமாயிருந்தான். இவளை ஒரே அறை அறைவதுபோல கேள்வியொன்றைக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் தயக்கத்தோடு முளைத்தது.

"இவ்வளவு பேரையும் நான் எதிர்த்து நிற்கவேண்டும் என்பதனை ஒரு பேச்சுக்கு ஒப்புக்கொள்கிறேன்... ஆனால் நான் உன்னை ஒன்று கேட்கலாமா?... நீ எதற்காக இவ்வளவு தூரம் இராமகிருஷ்ணனுக்காக உருகிக் கரைகின்றாய்?"

தயங்கித் தயங்கி வந்த அந்த வார்த்தைகள் காயத்திரி தேவியை எத்தகைய உணர்ச்சிக்குள்ளாக்கும் என்று ஏரம்பமூர்த்தி நினைத்துச் சொன்னானோ அது எதிரிடையாயிற்று.

காயத்திரிதேவி ஏரம்பமூர்த்தியை நேருக்கு நேராகப் பார்த்தாள். ஏளனம்; எரிச்சல்; அற்ப புழுவை எதிரிடுவது போன்ற அருவருப்பு.

"என்ன அற்பத்தனமாக நீ பேசுகிறாய்? ஒரு பெண்ணை இதைப்போல கொச்சைப்படுத்துவதைத் தவிர உனக்கு வேறு வழியே தெரியவில்லையா? நான் நினைத்தால் நான் நினைத்தவனோடு உனக்கு முன்னால் வந்து நிற்க என்னால் முடியும்.... ஆனால் நான் அப்படியானதொரு பெண்ணல்ல. இது உனக்கே தெரியும்..."

காயத்திரிதேவி ஏகவசனத்தில் தொடர்ந்து கொண்டிருந்தாள்...

''இராமகிருஷ்ணனின் நேர்மையை நான் மதிக்கிறேன். சில நல்ல விஷயங்களைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடுதான் அந்த இளைஞன் உங்களோடு வந்து சேர்ந்தான்... பாவம்.... இதைத்தவிர வேறு விஷயம் அவனுக்கும் எனக்குமில்லை....''

ஏரம்பமூர்த்தி தலையை நிமிர்த்தினான்.

''காயத்திரி, நான் எதையோ கேட்க எதையோ சொல்கிறாய்? ஏன் இப்படி என்னைத் தவறாக விளங்கிக் கொள்கிறாய்? ஒரு புருஷனோடு இப்படித்தானா பேசுவது?''

காயத்திரிதேவி கண்களில் மிதக்கிற ஏளனத்தோடு ஏரம்பமூர்த்தியைப் பார்த்தாள்.

''நான் இதுவரை வேறு யாராவதைப் பற்றி இப்படிச் சொல்லியிருக்கிறேனா? இல்லையே... மிஸிஸ். பாலனைப் பற்றி ஏதாவது கேட்டிருப்பேனா... ஏன் அந்த விஷயங்களையெல்லாம் இப்போது?...''

ஏரம்பமூர்த்தியின் முகத்திலே ஈயாடவில்லை.

''துரதிருஷ்டவசமாக உங்கள் வட்டத்திற்குள்ளே வந்து நான் சிக்கிக்கொண்டு விட்டேன்.... நான் இந்த வட்டத்திற்குரு இருக்கும் வரை எனக்குப் பிடியாத விஷயங்களிளெல்லாம் உங்கள் அனைவருக்குமே தொல்லை தந்து கொண்டிருப்பேன்.... இவளை இப்படியே கழுத்தைத் திருகிக் கொன்று விடலாம் என்று ஆத்திரம் வருகிறதா?''

அவள் விஷமமாகச் சிரிப்பதுபோல ஏரம்பமூர்த்திக்குத் தோன்றியது.

''என்னை ஒரு போதும் எவருமே அப்படிச் செய்ய முடியாது. அதற்குரிய வழிகளெல்லாம் நான் செய்து வைத்திருக்கிறேன்... எனவே நாங்கள் இருவரும் இப்போது அட்வக்கேட் சிவலிங்கத்திடம் போகின்றோம்... வீணாண

யோசனைகளை விட்டுவிட்டு என்னோடு புறப்படலாம்...''

அவளின் வார்த்தைகள் தன்னுடைய கழுத்தைப் பிடித்துத் தள்ளுவது போல உணர்வு தட்டிற்று ஏரம்ப மூர்த்திக்கு.

வெளியேயிருந்து 'பஸ்ஸர்' சிணுங்கிற்று.

காயத்திரி தேவிதான் வெளியே போனாள். அவள் வெளியே உள்ளவனோடு பேசுவது ஏரம்பமூர்த்திக்கு தெளிவாகவே கேட்டது.

''அவரை நீங்கள் இப்போது சந்திக்கமுடியாது. நானும் அவரும் இப்போது முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம்... நாளை, காலை ஒன்பதுமணி போல வந்து பாருங்கள்....''

'''இல்லை மேடம்.... முக்கியமான விஷயம் ஒன்றைப் பற்றி இப்போது நான் அவரோடு பேசவேண்டும்.... உங்களுக்குத் தெரியுந்தானே.... நாங்கள் பிளேன், 'சார்ட்டர்' பண்ணி இந்தியாவுக்குப் போவது பற்றி., அதையிட்டுப் பேசத்தான்....''

குரல் புவனேஸ்வரனுடையது என்பதை ஏரம்பமூர்த்தி அனுமானித்துக் கொண்டான். காயத்திரிதேவியின் மேல் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. ஆயினும் எதையும் செய்யமுடியாமல் மௌனமாயிருந்தான்.

''பிளீஸ், மிஸ்டர் புவனேஸ்வரன்.... என்னால் அதிக நேரம் பேசிக் கொண்டிருக்க முடியாது.... தயவு செய்து நாளைக்கு வாருங்கள்...''

கதவு மூடப்பட்ட சத்தம் துல்லியமாகவே கேட்டது.

தனது அலுவலகத்திலே தொங்கவிடப்பட்டுள்ள படத்திலுள்ள, இறுமாப்போடு முன்னேறி வருகின்ற

வெள்ளைக் குதிரையைப் போல காயத்திரிதேவி நடந்து வருவதாக ஏரம்பமூர்த்திக்கு இப்போது உணர்வு தட்டிற்று. இவளை முட்டிக்கு முட்டி தட்டி கால்களின் கீழே போட்டு உழக்கினால் என்னவென்று ஆவேசமுற்றது மனம். பின்னர் அதுவே சோர்ந்து களைத்தது. 'இவளைத் திருமணம் செய்த நேரத்திலேயே சேணக்கயிற்றினை இறுக்கிப் பிடித்திருக்க வேண்டும். முட்டாள்த்தனம் செய்து விட்டேன்... இவளால் நாலு பேருக்கு முன்னால் நிமிர்ந்து நடக்க முடியாமலிருக்கிறது. மேலும் மேலும் இவளுடைய திமிர் அதிகரித்துக்கொண்டே போகிறது... என்ன செய்ய லாம்? இவள் கொஞ்சம் கொஞ்சமாகச் செத்துப் போகும் விதத்திலே இவளுக்கு உணவோடு விஷத்தைக் கலந்து வைத்தால் என்ன?'

காயத்திரிதேவி நீளக் கண்ணை லேசாகச் சிமிட்டிக் கொண்டாள்:

''என்னை எந்தப் பாணியிலே கொலை செய்யலாம் என்று யோசிக்கிறீர்களா?''

ஏரம்ப மூர்த்திக்கு மூளையில் ஏதோ சுரீரிட்டது.

டெலிபோன் மணி அடித்தது.

காயத்திரிதேவியே எடுத்தாள்:

''...நான் காயத்திரிதேவி பேசுகிறேன். அவரோடு இப்போது நீங்கள் பேசமுடியாது. யேஸ்.... யேஸ் மிஸிஸ். பாலன் அவர் இப்போது என்னோடு முக்கிய விஷயம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்.... என்ன அப்படி உங்களுக்கு அவசரமான விஷயம்? அதுதான் சென்றவாரம் நீங்கள் இவரோடு ஹோட்டலுக்குப் போயிருக்கிறீர்கள்... அதுவும் என்னுடைய ஸ்தானத்திலே.... பரவாயில்லையே, ஓ. டி. கேட்டிருப்பீர்களாக்கும்.... மிஸிஸ். பாலன்.... என்ன பேச்சு மூச்சையே காணவில்லை...''

காயத்திரிதேவி புன்னகையோடு டெலிபோனை வைத்துவிட்டு ஏரம்பமூர்த்தியைப் பார்த்தாள். திருட்டு நாய்க்குட்டியொன்றினை அருவருப்போடு பார்ப்பவளாய் முகத்திலே உணர்ச்சிகளைப் பரவவிட்டாள்.

"சரி... ஏன் வீணாக மண்டையைப் போட்டு உடைக்கிறீர்கள்? புறப்படுங்கள். அட்வக்கேட் சிவலிங்கத்துக்கு முதலிலே நான் போன் செய்து விடுகிறேன்..."

அவள் டெலிபோனை எடுத்தாள்.

## பத்து

சேகர் கவலையோடு இராமகிருஷ்ணனை பார்த்தான்.

பொலிஸ் அதிகாரிகளிடையே இராமகிருஷ்ணன் நிற்கிற போட்டோக்கள் செய்திப் பத்திரிகைகளிலே வெளியாகியிருந்தன. இந்த விஷயம் பற்றி தயவுதாட்சண்யமற்ற நடவடிக்கை எடுக்கும்படி சுகாதார மந்திரியை வற்புறுத்தி எம். பி. தந்தி அடித்திருந்தார்.

உடனடியாகவே அரசாங்க 'குவாட்டர்ஸி'லிருந்து வெளியேற்றப்பட்டு கனகலிங்கத்தால் இராமகிருஷ்ணன் அழைத்துச் செல்லப்பட்ட காட்சியினை நினைத்தபோது சேகரின் கண்களிலே நீர் மல்கிற்று.

மறுநாள் நீதிமன்றத்திலே இராமகிருஷ்ணன் ஆஜர் செய்யப்பட்டான். இருபத்தியோராயிரம் ரூபா பெறுமதியான மருந்துகளை அரசினர் மருத்துவமனையில் திருடி, வீட்டில் வைத்திருந்ததாக பொலிசார் அவன் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்திருந்தனர். இராமகிருஷ்ணனுக்காக அட்வக்கேட்டாக வந்த சிவலிங்கம் எதையோ இழந்துவிட்ட முகபாவத்தோடு இரண்டு மூன்று வார்த்தைகளைப்

பேசிவிட்டு, அட்வக்கேட் நடராஜனுக்குப்பக்கத்திலே வந்து உட்கார்ந்து கொண்டார்.

பொலிஸ் தரப்பிலே மிகக் கடுமையான வார்த்தைகளிலே இராமகிருஷ்ணனைப்பற்றி எடுத்துரைக்கப்பட்டது. இந்தத் திருட்டைப்பற்றிய பூர்வாங்க விசாரணைகள் இன்னமும் முடிவடையாத காரணத்தினால் இராமகிருஷ்ணனுக்கு பிணையே வழங்கக் கூடாது என்று வாதிட்டனர் பொலிசார். நீதிபதி அதனை ஏற்றுக் கொண்டு இராமகிருஷ்ணனை ஒரு வார காலத்திற்கு 'றிமாண்டி'லே வைக்கும்படி உத்தரவிட்டார்.

'வீல்ஸ் கிளப்'பின் மாதாந்திரக் கூட்டத்திலே ஏரம்பமூர்த்தி கலந்து கொள்ளாமற் போனது இதுதான் முதற் தடவை. எல்லோருடைய மனதிலும் இது அளவற்ற கவலையினையும், விசாரத்தினையும் உண்டாக்கியிருந்தது. சர்வதேச ரீதியிலான அளவிலே கேரளத்திலே நடைபெற வுள்ள 'வீல்ஸ் இன்டர் நாஷனல்' விழாவிற்கு இங்கிருந்து செல்வதற்கான சகல ஒழுங்குகளையும் ஏரம்பமூர்த்தியே செய்யும்படி விடப்பட்டிருந்தான். பண விவகாரம் வங்கியாளரிடமே இருக்க வேண்டுமென்பது 'வீல்ஸ் கிளப்'பின் நீண்டகால மரபு.

கனகலிங்கம் எழுந்து சென்று டெலிபோனை எடுத்தான். மறுமுனைக்கு பதில் சொல்ல முடியாமலே 'றிஸீவரை'க் கையிலே வைத்தபடி ஸ்தம்பித்து நின்றான்.

"கனகலிங்கமா... இனி அவர் 'கிளப்'புக்கு வர மாட்டார். இதோ விலகுதல் கடிதத்தை அவரே எழுதிக் கொண்டிருக்கிறார்.... அது சரி... அந்த வனஜா கர்ப்பச் சிதைவு சம்பந்தமாக இன்று ஆறுமணிக்கு.... ஆம், ஒருமணி நேரத்துக்கு முன்னர் அந்த நாட்டு வைத்தியரும், மருத்துவச்

சியும் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டது, உனக்குத் தெரியாதா?.... அவர்கள் உன்னுடைய பெயரைத் தானாமே சொல்லியிருக்கிறார்கள்... ஹலோ... ஹலோ...''

டெலிபோனைப் பட்டென்று வைத்தான் கனகலிங்கம். ''ப்ளடி பிச்... என்னையா மாட்டுப்படுவேன் என்று பார்க்கிறாய்... இருந்து பார்...''

மிஸிஸ். பாலன் அவனுக்கு அருகாக வந்தாள். உரசுவது போல நெருங்கிக் கொண்டே கேட்டாள் :

''அந்தப் பேய்தானா பேசிற்று...பொறுத்துக் கொள். அவளின் கொட்டத்தையெல்லாம் கொஞ்சநாளிலே நான் அடக்கித் தருகிறேன்... உனக்குத் தெரியுமா? ஸீ இஸ் ஏ நிம்போ...''

கனகலிங்கத்தின் காதுகளிலே அந்த வார்த்தைகள் கேட்டதாகத் தெரியவில்லை. தன்னுடைய முட்டாள்தனத்திற்காக இப்போது தன்னையே நொந்து கொண்டான். 'அந்த நாட்டு வைத்தியனையும் மருத்துவச்சியையும் இந்த ஊரிலேயே என்னுடைய பயமுறுத்தலான கண்காணிப்புக்குக் கீழே வைத்திருக்க வேண்டும். அவர்களை இந்த ஊரிலிருந்து வெளியூருக்கு அனுப்பி வைத்ததுதான் தவறாகப் போய்விட்டது. சரி இனி யோசித்து என்ன?... எனக்குத் தெரியாத டிபார்ட்மெண்டா?... கொஞ்சம் பணம் வேண்டும்.... அவ்வளவுதான்?'

இப்போது அவனுக்கு மிஸிஸ். கோகிலவர்த்தனி நடனசபாபதி நினைவிலே வந்தாள். தோள்களை குலுக்கிக் கொண்டே, ''கனெக்ஸ், உனக்கு என்ன உதவி தேவையோ உடனை இந்தக் கோகிலாவை நினைத்துக் கொள். ஓடி வந்துவிடு....'' என்று எத்தனையோ தரம் சொல்லிக் கொண்டிருந்தாள். இப்போது போனால் அவள் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.... நல்லவேளை.

காயத்திரிதேவி ஆறுதலான பார்வையோடு இராம கிருஷ்ணனைப் பார்த்தாள் :

''ராம், எதற்காக நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? இந்த வழக்கில் உங்களை யாருமே எதையும் செய்திட முடியாத படி நான் எல்லா ஒழுங்குகளும் செய்திருக்கிறேன். உங்க ளுடைய மூளையும், ஸ்டெதஸ்கோப்பும் இருக்கிறவரை உங்களை யாருமே எதுவும் செய்யமுடியாது. மேலோர் வட்டத்தை இப்போது நன்றாய்ப் புரிந்து கொண்டீர்களா? அது தன்னை ஏற்கும் வரைதான் உங்களை ஏற்றுக் கொள் ளும். தனக்கு இணங்காவிடில் உங்களைக் கால்களிலே போட்டு நசுக்கிச் சிதைத்துவிடும். வெளியே தூக்கி எறிந்து விடும்....''

சேகர் இராமகிருஷ்ணனின் கைகளைப் பற்றிக்கொண் டான். வார்த்தைகளற்றுப் போய் நின்றான்.

''ராம், ஹெமிங்வே சொன்னது உங்களுக்கு ஞாபகத் தில் இல்லையா? ஒரு மனிதனை யாரும் அழித்துவிடலாம். ஆனால் அவனை எவராலுமே தோற்கடித்து விட முடி யாது.''

அந்த வார்த்தைகளிலே மனம் தோய்ந்தவனே போல காயத்திரிதேவியை நன்றியோடு நோக்கினான் இராம கிருஷ்ணன். அவளுடைய நீண்ட விழிகளின் கருணை அவனுக்கு நெஞ்சினுள்ளே துணிவாய், வல்லமையாய் உணர்வினைப் பொங்க வைத்தது.

''ராம், நான் சொல்வது உண்மைதான். உங்களைப் போன்றவர்களை எவராலுமே என்றும் தோற்கடித்துவிட முடியாது...''

காயத்திரிதேவி சொல்லிக் கொண்டே மீண்டும் வாத்ஸல்யம் ததும்ப இராமகிருஷ்ணனைப் பார்த்தாள்.

(1984)

திருநாவுக்கரசு எவ்வித பதட்டமுமில்லாமல் வழமையான புன்னகையோடு ஆறுதலாக உட்கார்ந்து பைல்களை மேலோட்டமாகப் பார்த்துக்கொண்டிருப்பதை அந்த அலுவலகத்தின் எல்லாக் கண்களும் மிகுந்த ஆச்சரியத்துடனேயே நோக்கிக் கொண்டிருந்தன. தலையின் மேலே கட்டித் தொங்கவிடப்பட்டிருக்கின்ற பளபளக்கின்ற கத்தியைப் பற்றி, அது கட்டப்பட்டிருப்பது கண்டிருந்தும்— எவ்வித சலனமுமின்றி கீழே ஒருவன் இருப்பானாயின் யாருக்குத்தான் ஆச்சரியம் வராது? அந்த அலுவலகத்திலேயே திருநாவுக்கரசுவுக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரியவனான பத்மராஜனுக்குக்கூட இந்த நிலைமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை. அந்த அலுவலகத்திலே வேலை பார்க்கின்ற பதினேழு ஊழியர்களும் அவனைத் துருவியெடுத்துவிட்டனர். பத்மராஜன் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் நம்புவதாயில்லை

# வீழ்வேன் என்று நினைத்தாயோ ?

அந்த மாவட்டத்தின் திட்டமிடல் துறைக்குப் பொறுப்பதிகாரியாக திருநாவுக்கரசு நியமிக்கப்பட்டு ஐந்து வருஷங்கள். எல்லாமாக பன்னிரெண்டு வருஷகால அரசாங்க சேவை. நாற்பது வயதிலேயே அரசாங்கத் துறைகளில் பேரெடுத்தவர். மூன்று மொழிகளிலும் நல்ல பாண்டித்யமுள்ளவராதலால் அவர் கடமைபுரிந்த பின்னர் இப்போது ஊருக்குக் கிட்டவாகவே வந்துசேர்ந்து விட்டார்.

அலுவலக வேளைகளிலே அவரது வேகத்தையும், புன்னகையையும் கண்டு சிலருக்கு மனக்கசப்பு நெஞ்சின் முனையிலே குறுகுறுப்பதுண்டு. "என்ன விஷயத்தைப்பற்றியும் அவர் இரண்டாவது தடவையோசிப்பதில்லை. துணிந்த மனுஷன், ஓடர் போட்டால் ஓடர்தான்." என்று அவரின் கீழே வேலை செய்கின்ற எழுதுவினைஞர்கள் வியக்கின்ற போதும், உயரதிகாதிரிகள் கூட்டுகின்ற மகாநாட்டிலே விரல்நுனியிலே புள்ளி விபரங்களை வைத்துக் கொண்டு வெகு சாதுரியமாக விவரிப்பதைப் பார்த்து ஏனையோர் வியந்து நோக்குகிறபோதும் திருநாவுக்கரசுவின் உருண்டையான மளமளத்த முகத்திலே கர்வமான புன்னகை வெளிச்சமிட்டுத் தெரியும். இப்போதும், அதே கர்வமான புன்னகை. அதே அசட்டையான நடவடிக்கைகள்.

''பன்னிரெண்டு வருஷமாக நான் இந்த 'சேர்வீசி'லை இருந்து படித்ததைப்போலை வேறு யாராவது தெரிஞ்சு வைத்திருக்கிறானா? உமக்குத் தெரியுமா எப். ஆரிலும் ஏ. ஆரிலும் என்ன பக்கத்திதை, எந்த இடத்திலை புள்ஸ்ரொப், கொமா இருக்கிறதென்றலை, அதே மாதிரியே அச்சொட்டாக என்னாலை எழுதமுடியும்...''

இவ்வளவு தெரிந்த அறிவாளியாயிருந்தும் கடைசியிலே இப்படியாக, வகையாக திருநாவுக்கரசு அகப்படுவார் என்று யார்தான் எதிர்பார்த்தார்கள்? எவ்விதமான சிக்கலுமின்றி அவரை திடீர் பரிசோதனைக் குழுவினர்

கண்டுபிடித்த பின்னர்தான் அலுவலக ஊழியர்களில் பலருக்கே அந்த விஷயம் தெரிய, மூக்குநுனியில் கைவைத்து மெதுவாக முணு முணுக்கத் தொடங்கினர்.

காரியாலய உதவியாளர் அமலநாதன் திருநாவுக்கரசுவின் அறைக்குள்ளே மெதுவாக நுழைந்தபோது, திருநாவுக்கரசு வழமைபோல அவரைக் கதிரையிலே உட்காரச் சொன்னார். இருவார காலத்திற்குப் பின்னர் கல்லடிக்குள வாலிபர் விவசாயத் திட்டத்திற்கான கொடுப்பனவுக்குரிய பத்திரங்களைத் தயாரிக்கும்படி அமலநாதனை அவர் பணித்தபோது முற்றாகவே அசந்துபோய் விட்டார் அமலநாதன். அலுவல்முடிந்து வெளியே வந்து தன்னுடைய இருக்கையில் அமர்ந்து அரைமணி நேரமான போதிலும் இந்தத் திகைப்பிலிருந்து அமலநாதனால் விடுபட முடியவில்லை.

திருநாவுக்கரசுவுக்கு என்ன முடிவு வருமென்பது குறித்து அவருடைய சகாக்கள் பேசிக்கொண்டதனை அமலநாதனும் கேட்டிருக்கிறார்.

"திருநாவு இதிலையிருந்து தப்புறது கஷ்டந்தான். அரசாங்கத்துக்குரிய வாட்டர் பம்ப், கருவிகள் எல்லாவற்றையும் எடுத்து தன்னுடைய ஐந்து ஏக்கர் மிளகாய்த் தோட்டத்துக்கு கொண்டுபோனது, அரசாங்கக்காணியிலை வேலைசெய்த கூலியாட்களைத் தன்னுடைய காணியிலை இலவசமாக வேலை செய்விக்க வைத்தது.... இதெல்லாம் கையும் மெய்யுமாய் பிடிபட்டபிறகு இனியென்ன செய்ய முடியும்.... அதுவும் சின்னத்துரை ஆஸ்பத்திரியாலை வந்து 'ஸ்ரேமன்ற்'வுக்கு வெள்ளிக்கிழமை கொடுத்துவிட்டானென்றால் ஒரு கிழமைக்குள்ளை திருநாவுவுக்கு இன்ரடிக்ஸன், அல்லது டிஸ்மிசில் லெற்றர்தான் வரும். இதெல்லாம் செய்யிறதைப்பற்றி ஒன்றுமில்லை... ஆனால் தோட்டத்திலை வேலை செய்தவங்களோடை திருநா கொஞ்சமாவது நல்லா நடந்து ஐஞ்சைப் பத்தைக் கொடுத்திருக்கவேணும். அவங்களோடையும் எப். ஆர், ஏ. ஆர் பேசிக்கொண்டிருந்

தால் சும்மா இருப்பாங்களோ? செல்லப்பன் அடித்த 'பெட்டிஷன்' தானே இவ்வளவு ஆபத்தாய் வந்திருக்குது.. பிறிலியன்ற் திருநா... பட் ஏ புவர் மான்..."

## 2

புதன்கிழமை திருநாவுக்கரசுவுக்கு தந்தி வந்தது. "வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து வரும் உயர் அதிகாரிகள், அவருக்கெதிரான விசாரணையை மேற்கொள்வார்கள். காலை எட்டரை மணிக்குச் சமுகங்கொடுக்கவும்."

தந்தியை இரண்டாவது முறை வாசித்தபடியே மணியை அடித்தார். பத்மராஜன் வந்தான், அமலநாதனைக் கூட்டிவரும்படி சொன்னார். அமலநாதன் எதிரே வந்து மௌனித்து நின்றார்.

"கல்லடிக்குள புறஜக்ற் பைல்களை எடுத்துக்கொண்டு வாரும்" என்றவர், அவர் போனபின் பத்மராஜனைப் பார்த்து, "பத்மன், வெள்ளி சனி ஞாயிற்றுக்கிழமை நீ வேறை எங்கையும் போகக்கூடாது. குகதாசன் ஐயா வீட்டிலை மூன்று நாட்களும் நிற்கவேணும். மூன்று கோழி நல்ல இறைச்சிக் கோழியாய் நாளைக்கு வாங்கவேணும்... இருநூறு ரூபாவைக் கொண்டு போ... கொஞ்சம் முட்டையும் வாங்கிக் கொள்..." என்றபடி இருநூறு ரூபாவை அவனிடம் கொடுத்தார் திருநாவுக்கரசு.

'கல்லடிக்குள புறஜக்ற் பைலை' மிக அவதானமாக வாசித்துக்கொண்டிருந்த திருநாவுக்கரசுவின் முகத்திலே இலேசான அலட்சியப் புன்னகை மிதந்து பெருமிதமான சிரிப்பாய் பரவிற்று. "சின்னத்துரையும் செல்லப்பனும் போன மாத 'பேமன்ற்' ஏன் எடுக்கவில்லை?..."

அமலநாதன் தலையைச் சொறிந்தார்,

"சின்னத்துரை சுகமில்லாதபடியாலை கையெழுத்து வைக்க வேண்டிய அன்றைக்கு ஒபிசுக்கு வரேல்லை. பிறகு இரண்டு மூன்று நாள் வந்தது... நீங்கள் இல்லாததாலை பிறகு காசெடுக்க முடியாமற் போச்சு.... செல்லப்பன் குடித்துவிட்டு ஏதோ பிரச்சினைப்பட்டதாலை அந்த நாளிலை றிமாண்டிலை இருந்தவன்...."

''ஓ...'' பிரகாசமாய் மலர்ந்தது திருநாவுக்கரசுவின் முகம்.

## 3

வியாக்கிழமை காலை ஏழு மணி போல பத்மராஜனுடன் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றார் திருநாவுக்கரசு. அவரது 'குவாட்டர்'சின் முன்புறக் கண்ணாடி ஜன்னல்கள் நொறுங்கிக் கிடந்தன. அதிகாலை அவரது வீட்டிற்கு செல்லப்பன் நல்ல வெறியோடு வந்து திட்டியிருக்கிறான். அலுவலகத்திற்கு அவர் நேரத்தோடேயே செல்லவேண்டிய தேவை இருந்தமையினால், தனது பியோனையும் வீட்டிற்கு வரும்படி கூறியிருந்தார். அவனுக்கு முன்னிலையிலேயே இச்சம்பவம் நிகழ்ந்தது. இருவருக்கும் இலேசான கண்ணாடி சிராய்த்த காயங்கள்.

இன்ஸ்பெக்டர் சிறிது நேரம் யோசித்தார்.

''....திருநாவுக்கரசுவின் 'குவார்ட்டர்ஸ்', அரசாங்க சொத்து. செல்லப்பன் ஏற்கனவே றிமாண்டில்இருந்தவன். இப்பிடியே போனால் பெரிய ஐ. ஆர். ஸியாய் விடுவான். இப்ப இரண்டு குற்றம் செய்திருக்கிறான். அரசாங்க சொத்துக்கு சேதம் விளைவித்தது, அரசாங்க உயர் அதிகாரியை கடமையைச் செய்யவிடாமல் தடுத்தது...''

ஜீப் டிரைவரைக் கூப்பிட்ட இன்ஸ்பெக்டர், தான் உடனடி நடவடிக்கை எடுப்பதாக திருநாவுக்கரசுவுக்கு வாக்களித்தார்.

## 4

வெள்ளிக்கிழமை 8-15க்கு விசாரணை நடைபெறுமிடத்திற்குச் சென்று இறங்கிய திருநாவுக்கரசு, தன்னை முந்திக்கொண்டு போய் நின்ற குகதாசனின் காரை நோக்கினார். காரின் பின்சீட்டில் இரு உயரதிகாரிகளும் உட்கார்ந்திருந்தனர். அவர்கள் இறங்கி விசாரணை நடைபெறும் மண்டபத்திற்குச் சென்றனர்.

திருநாவுக்கரசு நெற்றியில் ஒட்டியிருந்த பிளாஸ்டரை அடிக்கடி தடவிக் கொண்டிருந்தார்.

விசாரணை ஆரம்பமாயிற்று.

முதலில் செல்லப்பன் அழைக்கப்பட்டான். ஆள் வரவில்லை. 'பெட்டிஷன்' அனுப்பியவன் வராமல் விசாரணையை எப்படித் தொடங்குவது என்றார் முதலாம் ஆள். "பரவாயில்லை" என்றார் மற்றவர்.

இரண்டாம் ஆள் சின்னத்துரை.

பிளாஸ்திரியும் தலையுமாய் கண்களில் தெரிந்த திருநாவுக்கரசுவைத் தாண்டுகையில், புதன்கிழமை இரவுச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகிறது....

ஆஸ்பத்திரியால் வந்து வீட்டின் கட்டிலில் சற்றுக் கண்ணயர்ந்தபோது, தன் கைகளை யாரோ வருடுவதாக உணர்ந்த சின்னத்துரை, கண்களை விழித்ததும் திடுக்கிட்டு போய்விட்டார். குரல் தடுமாறித் தளதளத்தது....

''ஐயா.... இதென்ன ஐயா.... நீங்களா?''

திருநாவுக்கரசு, சின்னத்துரையின் தோளிலே கையை வைத்து அவரை ஆசுவாசப்படுத்தினார்.

''சின்னத்துரை, நீர் என்னைப்பற்றி என்ன நினைத்தாலும் சரி... ஆனால் நான் ஒருத்தரோடை பழகினால் அவரை ஒரு நாளும் மறக்கமாட்டேன்... ஆஸ்பத்திரிக்கு வந்தால் வேறை வேறை கதை வரும். அதாலைதான் இங்கை வந்தனான்.... அது சரி, இப்ப எப்பிடிச் சுகம்.... நீர் எனக்கு ஒரு மூத்த சகோதரம் மாதிரி....''

ஹோர்லிக்ஸ், தோடம்பழங்களை எடுத்துக் கட்டிலில் வைத்தபடியே அவர் சொன்ன சொற்களால், சின்னத்துரையின் கண்கள் கலங்கின.... 'இந்த மனிதனுக்கா தான் குற்றம் செய்ய நினைத்தேன்' என்ற குற்ற உணர்வு சின்னத்துரையின் மனதினுள் மெல்லத் தலைதூக்கிற்று.

''சரி, நான் வாறன்...'' என்றவாறு திருநாவுக்கரசு எழுந்தபோது சின்னத்துரை பரபரத்தான்.

''கொஞ்சம் இருங்க ஐயா....''

திருநாவுக்கரசு கட்டிலில் உட்கார்ந்தார். மகளை மோர் கொண்டுவரச் சொன்னார்.

''ஐயா, விசாரணைக்கு என்னை வரச் சொல்லியிருக்குது என்ன செய்ய?''

—குரலிலே வெட்கமும், தயக்கமும்.

' அது உம்மடை விருப்பம்....''

''என்ன ஐயா நீங்கள்?''

''இல்லை, விசாரணை முடிஞ்சா எனக்கு வேலையில்லாமற்போகும்... ஒரு சகோதரம் என்ரை வயிற்றிலை அடிச்சுதென்று நினைச்சுக் கொள்ளுவன்.... பிறகு கயிறோ, கிணறோ... சரிசரி, அதைவிடும்....''

பதைத்துக்கொண்டு எழுந்த சின்னத்துரை திருநாவுக்கரசுவின் கைகளைப் பற்றினார்.

"ஐயா. இந்தக் கைகளைக் காலென்று பிடிச்சுக் கேட்கிறன். நான் ஒருநாளும் உங்களுக்கு கஷ்டம் வர விடமாட்டேன். நீங்க எதைச் சொலலுறியளோ அதையே போய் விசாரணையிலை சொல்லுவன்..."

திருநாவுக்கரசு சொன்னார்.

விசாரணையின்போது திருநாவுக்கரசு சொன்னதை அப்படியே ஒப்புவித்தார் சின்னத்துரை.

"என்னுடைய பொறுப்பில்தான் எல்லா 'புறஜக்ற்' பொருட்களும் இருந்தன. ஐயா, தன்னுடைய காணியிலை யாராவது பம்ப்காறரைக் கொண்டு தண்ணி அடிச்சுத் தோட்டத்தைக் கவனிக்கச்சொன்னார். எல்லாத்துக்குமுரிய பணமும் தந்தார். நான் ஒரு மாதம் லீவுபோட்டுவிட்டு ஐயாவினுடைய தோட்டத்திலை வேலை செய்திருக்கிறன். 'புறஜக்ற்' சாமானுகளை வெளியிலை வாடகைக்கு விடலாம் என்றதாலை காசு கட்டி 'புறஜகற்' பம்ப் எல்லாமெடுத்து ஐயாவின்ரை காணியிலை இறைச்சனான்... ஐயாவிலை வீணாகப் பழி வந்திருக்குது. இதைத் தெய்வம் ஒருபோதும் பொறுக்காது....''

கடைசியில் திருநாவுக்கரசு அழைக்கப்பட்டார்.

அவரின் நெற்றிக்காயம் பற்றி முதலில் அவர்கள் அனுதாபத்தோடு விசாரித்தனர். பின்னர் திருநாவுக்கரசுவின் மிளகாய்த் தோட்டம். இப்போதைய மிளகாய் உற்பத்தி, விலைவிபரம் என்பன குறித்துக் கேள்வி கேட்க ஆரம்பித்தனர். விசாரணை முடிய நீண்ட நேரமாயிற்று.

(1983)

அந்தச் செய்தி எங்குமே பரபரப்பினை விளைத்திருந்தது. ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டத்திலுள்ள ஒவ்வொருவனது வாயிலும் அந்தச் சம்பவமே இரண்டு தினங்களாக பேசப்பட்டு இன்னும் முடிவடையாமலே நீண்டு கொண்டு போகின்றது.

பிரதம பொறியியலாளர் பங்களாவின் திருட்டைப்பற்றிய செய்தியே அது. பிற நாட்டு பொறியியலாளர், பொருளாதார உதவிகளோடு நிர்மாணிக்கப்பட்டு வரும் பாரிய வேலைத் திட்டத்தின் பிரதேசத்திலே நடந்த இத்திருட்டினை உடனடியாகவே கண்டுபிடிக்கும்படி, பிரதேச பொலிஸ் அதிகாரிக்கு, கொழும்பிலிருந்து கண்டிப்பான கட்டளை வந்து விட்டது. இவர்களுக்குத் துணையாக கொழும்பிலிருந்தும் விசேட சி.ஐ.டி. பொலிஸ் பிரிவினர் வந்துள்ளதாகவும் கதையடிபட்டது. அது உண்மையாக இருக்கலாம். இப்போது புதிதாக சிலமுகங்கள் அங்கு தென்பட்டன. முன்னர்போல இல்லாமல் ஒவ்வொருவரும் இப்போது மற்றவரைக் கண்டால் அவசரமாகப் பேசினர். அல்லது

## நியாயங்கள்

பேசாமலே பரபரப்போடு தமது வேலைகளினுள்ளே பீதியுற்றமுகத்துடன் வேலையினுள்ளே புதைந்து கொண்டனர். நிர்வாக அதிகாரி 'பெட்டிஷன்'களுக்காக இரண்டு பைல்களை திறந்துவிட்டார். புதிது புதிதாக மோசடிகள் பற்றியெல்லாம் 'பெட்டிஷன்கள்' வந்து கொண்டிருந்தன. தனது உதவியாளரிடம் அவர் ரகசியமாகக் கிசுகிசுத்துக் கொண்டார்.

''மடையன்கள், ஒருதனைப்பற்றி ஒருதன் தகவல்கள் கொடுத்து கடைசியில் எல்லாருமே முறையாக மாட்டுப்பட்டு நிற்கப் போறாங்கள், அதுவும் சி.ஐ.டி. வந்திருக்கிற நேரத்திலை....'' பின்னர் நிர்வாக அதிகாரி சில நிமிஷங்கள் வரை யோசித்தார். எழுந்து வெளியே போனவர், 'ஸ்டோர்கீப்ப'ரைக் கண்டார். அவரது பிரச்சனைகளை நெஞ்சிலே அப்படியே சுமந்து கொண்டுவந்த 'ஸ்டோர் கீப்பர்'து மனதினுள்ளே முடிவொன்று உருவாகியிருந்தது. அதைப்பற்றி நிர்வாக அதிகாரியோடு பேசி ஒரு நல்ல தீர்வினை எடுத்தாக வேண்டுமென்று அவரது மனம் முடிவு கொண்டிருந்தது.

''வெளியாலை இருந்துவந்து இஞ்சினியர் வீட்டிலை இவ்வளவு லட்சம் ரூபாப் பொருட்களை களவெடுத்தவனை எல்லாருமாக ஒத்துநின்று பிடித்துக் கொடுக்கிறதுக்குப் பதிலாக நாங்கள் ஒருதருக்கொருதர் குழிபறிக்கிறதாலை ஆருக்குத் தீமையுண்டாகும்? எங்களுக்குத்தான் எப்படியும் எல்லாரும் இந்த விஷயத்திலே ஒரு மனதான தீர்மானத்துக்கு வரவேணும்... ஒத்து நின்று இந்தக் கள்ளனைப் பிடிக்க வேணும். அதுக்காக எங்களினுடைய பணத்திலை நூறு ஆயிரம் என்று செலவு போனாலும் பரவாயில்லை. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்கள்? நீங்கள்தான் இந்த விஷயத்திலை முன்னுக்கு நிற்கவேணும் என்கிறது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்....''

மூச்சுவிடாமலே கதைத்துக் கொண்டுபோன 'ஸ்டோர் கீப்பர்' சிலகணங்களிற்கு நிறுத்திதன்னை ஆசுவாசப்படுத்திக்

கொண்டு நிர்வாக அதிகாரியின் முகத்தினை ஊடுருவினார். தான் நினைத்ததை இவர் சொல்கிறாரே என்ற மனப்பூரிப்பு நிர்வாக அதிகாரிக்கு.

''நீர் சொல்லுகிறது முற்றிலும் உண்மைதான், இஞ்சினியர் லட்சக்கணக்கிலை திருட்டுக் கொடுத்திருக்கிறார். முதலில் அந்தக் கள்ளனைக் கண்டுபிடிக்கவேணும். அதைவிட்டு ஒருதருக்கொருதர் இங்கை வேலை செய்கிறவர்களே பெட்டிசம் போட்டுக் கொண்டிருந்தால் பலர் மறியலுக்கும், மிஞ்சியுள்ள சிலர் நிரந்தரமாகவே வீட்டுக்கும் போக வேண்டிவரும். இதை ஒவ்வொருவரும் உணரச் செய்ய வேணும்.... நாங்கள் இரண்டுபேரும் அந்த வேலையை உடனேயே தொடங்க வேணும். இரண்டு 'அஸிஸ்டண்ட் இஞ்சினியர்'களும் நான் சொன்னால் அப்படியே கேட்டுக் கொள்ளுவினை. 86 'பீல்ட் ஒபிசர்'களையும் அவர்கள் கவனிக்க முடியும். இந்த ஒபிசிலையும் 64 பேரையும் நாங்கள் உடனே தனித்தனியே சந்திக்க வேணும்.... பெரிய கஷ்டமில்லை.'

''இஞ்சினியருக்கு பொலிசும் நல்ல அணைவு என்று அறிந்தேன். இவருடைய மைத்துனர் கொழும்பிலை சொல்வாக்கான ஒரு எஸ். பி. அதைவிட, பிரதி மந்திரியினுடைய மகளைத்தான் இஞ்சினியருக்கு திருமணம் பேசியிருப்பதாயும் அறிகிறேன்.''

''ஓ... நீர் ஒரு 'ஸ்டோர்கீப்பரா'யிருப்பபதைவிட, பத்திரிகை நிருபராக இருப்பதற்குப் பொருத்தமான ஆள்தான்.''

ஆச்சரியங் கலந்தகுரலிலே நிர்வாக அதிகாரி கூறினார், ஸ்டோர்கீப்பரின் சர்வாங்கமும் பரவசம் பெற்றது.

''ஆனதாலை இஞ்சினியருக்கு நாங்கள் செய்கிற உதவி பலவிதத்திலும் எங்களுக்கு நன்மை தரும். அல்லாவிட்டால் பெரிய கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டிவருமென்கிறது சத்தியம்....''

## 2

நிர்வாக அதிகாரிக்கு மிகவும்சந்தோஷம், அவருடைய இருபத்தி ஆறுவருஷகால அரசாங்க சேவையிலே, இது போன்ற திட்டமிட்ட காரியமொன்று திட்டமிட்டபடியே இவ்விதமாக நிறைவு பெற்றதில்லை. சென்ற வாரம் கதைத்த விஷயத்தை அவரும், 'ஸ்டோர்கீப்ப'ரும் சேர்ந்து அந்த ஆற்றுப் பள்ளத்தாக்கு நிர்மாண அமைப்புத் திட்டத் திலே பணியாற்றுகின்ற மொத்தம் 150 பேருக்கும் வெகு விரிவாக விளக்கிச் சொல்லி அவர்களை தங்கள் கருத்தினை அப்படியே ஏற்கும்படி செய்துவிட்டார்கள். அதை உறுதிப் படுத்துகிறாற்போல இப்போது 'பெட்டிச பைலு'க்கு ஒரு விதமான பெட்டிசமும் வராமல் அப்படியே அலுமாரியின் அடித்தட்டுக்குள் கட்டி வைக்கப்பட்டிருந்தது.

புதன் கிழமை மத்தியானம் பதினொரு மணியளவில், அலுவலகத்துக்குள்ளே நிறைந்த சந்தோஷத்தோடு புகுந் தார் 'செக்கண்ட் கிளாக்கர்'. அவர் உத்தியோகத்திற்குப் போன நாளிலிருந்து கையிலே ஜேம்ஸ் கார்ட்லி சேஸ், ஜேம்ஸ் போண்ட் நாவல்களைத் தவறாது கொண்டு செல் பவர். தினசரி வரவு இடாப்புப் புத்தகம், சம்பளப்பட்டியல் என்பனவற்றில் கையெழுத்துப் போடுவது தவிர்ந்த ஏனைய நேரங்களில் மேற்படி துப்பறியும் மர்ம நாவல்களினுள் ளேயே ஆழ்ந்து போயிருப்பவர். நிர்வாக அதிகாரி அவ ரைக்கூட அணுகியிருந்தார். தான் இவ்வளவு காலமும் பெற்ற அரசாங்க சம்பளத்திற்கு தனது துப்பறியும் அறி வினை மிகநுட்பமாக பிரயோகிக்கப் போவதாக அவர் சூளுரைத்தார். ஐந்தாறு தினங்களாய் அப்பகுதிமுழுலதும் பித்துப் பிடித்தவர்போல திரிந்த அவர், இன்றுதான் இவ் வளவு மகிழ்வோடு அலுவலகத்துக்குள் பிரவேசிக்கின்றார்.

"எல்லாச் சிக்குகளுமே அவிழ்ந்து போய்விட்டன. கள் ளன் பிடிபட்டுவிட்டான்... கள்ளன் பிடிபட்டுவிட்டான்."

அலுவலகப் பணியாட்கள் முழுப்பேருமே அவரை மொய்த்துக் கொண்டனர், காட்டிலுள்ள சிறு பழைய கட்டிடமொன்றிலுள்ள இரண்டுபேர் நின்றிருக்கின்றனர், சந்தேகத்திற்கிடகான முறையிலே ஆட்களைப்பிடித்து நல்ல 'சாப்பாடு' கொடுத்த பின்னர் முழு உண்மையையும் சொல்லியிருக்கிறார்கள். புதைத்த இடம் எவரெவரிடம் கொடுத்து மறைத்து வைத்திருக்கிறார்கள் என்ற எல்லா விஷயமுமே அம்பலமாகிவிட்டது. கொழும்பிலிருந்து இன்று காலையிலேதான் எஸ். பி ஒருவரும் விசாரணை பற்றி அறிவதற்காக வந்திருக்கிறார், குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இந்த எஸ். பி. பிரதம பொறியியலாளரின் மைத்துனர் என்று சொன்னார் இங்குள்ள இன்ஸ்பெக்டர்.

''பார்த்தீர்களா? எது எப்படியாயிருந்தாலும் சொந்தக்காரனின் ஆர்வத்தைவிட, பொலிஸ்காரனின் துப்பறியும் வேகந்தான் விஷயத்தையே அம்பலமாக்கியிருக்கிறது.... துப்பறிபவனின் கண்கள் அப்படித்தான் இருக்கவேண்டும்.'' என்று ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாமல் அவர் சொல்லிக் கொண்டிருந்தபோது ஏனையோர் பிரதம பொறியியலாளரின் பங்களாவை நோக்கிச் செல்ல ஆரம்பித்து விட்டார்கள்.

## 3

பிரதம பொறியியலாளர் மிகவும் சந்தோஷ கரமாகக் காணப்படுவார் என நினைத்துப் போன நிர்வாக அதிகாரிக்கு மிகவும் அதிசயமாகப் போய்விட்டது. முன்னரை விடக் குழம்பிய முகம், கவலைதோய்ந்த கண்கள், திடீரென முதுமைதட்டிய தோற்றம்.

''ஏன் சேர்.... ஏன் இப்படி மாறிப்போய் விட்டீர்கள்? இந்த விஷயத்துக்கெல்லாம் இப்படியா மனதைப் போட்டு

யோசிக்கிறது. அதுவும் மைத்துனர் இவ்வளவு செல்வாக்கோடும், உதவிசெய்து கொண்டும் இருக்கிறபோது, இனிக்கவலையை விட்டிட்டு, ஒரு மாதலீவு எடுத்துக் கொண்டு எங்காவது நல்ல ஆறுதலாயிருந்து விட்டு வாருங்க. நான் 26 வருஷகாலம் இந்த சேர்வீசுக்குள்ளை கிடந்து மாயுறன்.... எவ்வளவோ வீழ்ச்சியெல்லாம் வந்திருக்குது.... அதுக்கதுக்கு தக்க வழிகளைக்கையாண்டு நல்ல நிம்மதியாக இருக்கப் பழகவேணும்....''

பிரதம பொறியியலாளர், நிர்வாக அதிகாரியை மிகுந்த நன்றியோடு பார்த்தார். என்றுமே நிர்வாக அதிகாரியை அவர் மிகவும் மதித்து நடப்பவர். இருபத்தாறு வருஷ அரசாங்க சேவையிலே அவர் கொண்டிருந்த அனுபவம் மட்டுமல்ல அதற்குக் காரணம், நிர்வாக அதிகாரியின் எந்த ஆலோசனையையும் கண்ணைமூடிக்கொண்டு கைப்பிடிக்கலாம், நிச்சயமாகக் காப்பாற்றி விடும். சிறிது நேரம் பொறியியலாளர் யோசித்தார். பின்னர் ஒரு தீர்மானத்துக்கு வந்தவர்போல நிர்வாக அதிகாரியைப் பார்த்தார்.

''கொஞ்சம் நின்று கொள்ளுங்கள், சில விஷயங்கள் பேசவேண்டியதாக இருக்கிறது...''

இப்படி அவர் சொன்னதும் மற்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக பொறியியலாளரிடம் விடைபெற்றுக் கொண்டு கலைய ஆரம்பித்தனர். நிர்வாக அதிகாரியை, பொறியியலாளர் தனது அறைக்குள்ளே அழைத்துச் செல்லவும், அவரது மைத்துனரான எஸ். பி. அங்கே வரவும் நேரம சரியாக இருந்தது. எஸ். பியை நிர்வாக அதிகாரிக்கு அறிமுகப்படுத்திய பிரதம பொறியியலாளர், ''நான் இவரோடு ஒரு அந்தரங்கமும் வைத்துக்கொள்வதில்லை......'' என்று நிர்வாக அதிகாரியைப் பற்றிக் கூறியபோது நிர்வாக அதிகாரியைப் பற்றிக் கூறியபோது நிர்வாக அதிகாரிக்குப் பெருமை பிடிபடவில்லை. லேசாக காற்றிலே மிதப்பதாய் உணர்ந்தார்.

எஸ். பியே கதையைத் தொடங்கினார்:

''மொத்தமாய் ஏழு லட்சம் ரூபா காசாகவும், மூன்று சங்கிலிகள் ஒவ்வொன்றும் ஏழு தங்கப்பவுண் கொண்டதாகவும், மூன்று வைடூரியக் கற்கள், இன்னும் பொலிசரால் மதிப்பிடப்படவில்லை... மூன்று வைர மோதிரங்கள்... சாதாரண மோதிரம் நான்கு... இவற்றோடு சில பேனாக்களையும் களவெடுத்ததாக கள்ளன் ஒப்புக்கொண்டுவிட்டான். இருபதினாயிரம் ரூபாவரைதான் மீட்கமுடியவில்லை.''

நிர்வாக அதிகாரியின் மூளையிலே மின்னடித்தது.

மூன்று மாதங்களின் முன்னேதான் பிரதம பொறியியலாளரின் ஆண்டு வருமானத் தொகையாக எல்லாமாக, தோட்ட வருமானமும் சேர்த்து எண்பதினாயிரம் ரூபா எனக் காட்டி 'வருமான வரிப் பணம்' கட்டப்பட்டது. வேறொரு அரசாங்க உறுதிமொழிப் பத்திரத்திலும், 'எனது அறிவுக்கெட்டியவரையில் உண்மையாக எனது ஆண்டு தேறிய வருமானம் எண்பதினாயிரம்' என்று சத்தியம் செய்து ஒப்பமிட்டிருந்தார் பொறியியலாளர்.

''வாக்குமூலம் பதிந்தாகி விட்டதா?...''

பரபரப்போடு கேட்டார் நிர்வாக அதிகாரி. அவரை அர்த்தபுஷ்டியாகப் பார்த்தார். எஸ். பி.

''நீங்கள் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நீங்கள் புத்திசாலிதான். ஆனால் வாக்குமூலம் எடுப்பதை எவ்வளவு நாளைக்கு தாமதிக்க முடியும்.... அது மட்டுமல்ல நீதிபதியின் முன் இவனை ஆஜராக்க வேண்டும்...'' சிறிது நேரம் யோசித்துவிட்டு எஸ்.பி தொடர்ந்தார்.

''பிரதி மந்திரியின் மகளுக்கும் இவருக்கும் திருமணம் நடைபெறவுள்ளது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷ

யம். போதாக்குறைக்கு இந்த ஸ்டேஷனிலையுள்ள எஸ். ஐயும், இரண்டு பொலிஸ்காரரும் எதிர்க்கட்சிக்காரருக்கு அனுசரணையானவர்கள்.... இந்த விஷயம் வெளியிலை தெரிந்தால் எதிர்க்கட்சிக்காரர் எங்களெல்லாரையும் நார் நாராகக் கிழித்தெறிவார்கள்....''

''இந்தச் சொத்து விபரம் எவ்வளவென்று எதிர்க் கட்சியை ஆதரிக்கிற பொலிஸ்காரருக்குத் தெரியுமோ?''

—நிர்வாக அதிகாரி கூர்மையான பார்வையோடு கேட்டார்? ''வாக்குமூலம் பதியப்பட்டபிறகு இதெல்லாம் அம்பலத்துக்கு வருகிற விஷயந்தானே...''

கவலையோடு பெருமூசசெறிந்தார் எஸ். பி.

''வாக்குமூலம் பதியப்பட்டதற்குப் பிறகுதானே எஸ். பி. சேர் இந்தப் பிரச்சினையெல்லாம்... அதை விடுங்க. எஸ் பி. சேர் உங்களோடு நான் தனியாக ஒரு விஷயம் பேச வேணும்...'' பொறியியலாளரின் முகம் ஆச்சரியங் கொண்டது.

## 4

அதிகாலையிலே அரைகுறைத் தூக்கத்திலிருந்த பொலிஸ்காரர் திடுமென விழித்தெழுந்தார்,

ஜெனரேட்டரின் மங்கிய ஒளி வெளிச்சத்தில், பொலிஸ் நிலையம் சோம்பித் தெரிந்தது. ஏதோ நினைவில் நித்திரைக்கலக்கத்தோடு 'ரிமாண்ட் றூமு'க்கருகிலே போன பொலிஸ்காரர் கொஞ்சம் உற்றுப் பார்த்தார். மீண்டும் உற்றுப் பார்த்தார். வாசலிலே தலைகுப்புறவாய், பொறியியலாளர் வீட்டில் திருடிய கள்ளன் இரத்தம் வழிய அலங்கோலமாகக் கிடப்பதைக் கண்டார். கிட்டவாகச் சென்று கதவுக்கம்பியின் வழியாக கையைவைத்து அவனது தலையில் தொட, தலை அப்படியே முறிந்து சாய்ந்தது.

(1983)

மனோகரனுக்கு அந்தச் செய்தியைக் கேட்டதும் ஆனந்தம் தாங்கமுடியவில்லை. புன்னகை மிதக்க ஆசிரியரைப் பார்த்தான்.

''ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும். அவர் இதற்குச் சம்மதிச்சதே பெரிய விஷயம். 'மூட்' மாறிக்கொண்டிருக்கிற இயல்பு ..''

ஆசிரியர் பயபக்தியோடு தொடர்ந்தார்:

''தெய்வத்துச்கும் நியாயத்துக்கும் மட்டுந் தான்பயப்பிடுகிற ஆள்.... நிறையப்போட்டோ எடுத்துக்கொள். இதுவரை யாருமே அவர் வீட்டிலபோய் போட்டோ எடுத்ததில்லை. உனக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் முதல் முறையாக கிடைச்சிருக்கு... யூ ஆர் லக்கி....''

மனோகரன் பெருமையோடு அங்கிருந்த மற்றவர்களைப் பார்த்தான். மற்றவர்களின் கண்களிலே ஆர்வமும் பொறாமையும் தெரிந்ததை உணர்ந்தான்.

''இதோ பணம். வேண்டிய அளவு 'பிலிம் ரோலஸ்' வாங்கிக்கோ. காரிலைதான் போகணும். நேரம் முக்கியம். ஒரு நிமிஷம் பிந்திப் போனால் கூட அவர் 'அப்பாயின்ட்

# போட்டோ

மென்டை' ஒத்துக்கொள்ள மாட்டார். அப்புறம் நமக்கும் கெட்டபேராகிவிடும்..."

"நான் புறப்படறேன்..."

அரண்மனையைப் போன்ற பெரிய பங்களா. வாசலில் இருந்தே பரபரப்பும் கெடுபிடியாகவும் நிற்கிற போலிஸ் காரர்கள். விஷேச அதிரடிப்படையினர். அவனைத் துளாவுதுளாவென்று துளாவினார்கள். கமெராவை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரிக்காத குறை. 'மெட்டல் டிக் டேட்டர்' இரண்டு இடங்களில் அவனைப் பரிசோதனை செய்தது. அவனைப்பற்றிய விபரங்கள் முழுவதையும் குறித்துக் கொண்டார்கள்.

வரவேற்பறையில் உட்கார்ந்திருந்தவனுக்கு இப்போது மனதில் லேசான அச்சம். அந்தப்பெரிய அறையின் சுவர் களில் பிரமிப்பூட்டுகிற வெறுமை. மூலையிலுள்ள டேபி ளில் மட்டும் அவரும், இன்னொருசாமியாரும் உட்கார்ந் திருக்கிற படம் மட்டும்.

கட்டுப்பாடும், நேர்மையும், அசாதாரணமான துணிச் சலும் அரசியல்வாதிகள், அரசு அதிகாரிகளிடத்தில் அவர் மீது அச்சத்தையும் அந்நியத்தனத்தையும் உண்டாக்கி, யிருந்தன. இவர்களுக்கு சிம்ம சொப்பனம். பத்திரிகைகள் இவரின் சின்னச் சின்னக் கோபங்களைக் கூட புளகாங்கித மாக எழுதின. பரவசப்பட்டுக் கொண்டன.

பத்திரிகை நிருபர்கள் அவரைப்பற்றி எழுதும் ஒவ் வொரு வரிக்கும் ஒன்றுக்கு மூன்று தரமாக யோசித்தனர் ஒரு பத்திரிகையாளர் கூட்டத்தில், தன்னை ஆத்திரப் படுத்தும் விதத்தில் கேள்விகேட்ட நிருபரைப் பார்த்து.

"அடுத்த கேள்வியை நீ கேட்பாயானால் உன்னைச்சுட்டுக் கொன்று விடுவேன்'' என்றார் ஆவேசமாக.

நிருபர்கள் கதிகலங்கிப் போய் விட்டனர். கேள்வி கேட்டவரின் உடலில் வேர்வை பொங்கிற்று. வார்த்தைக ளற்று நின்றார் அவர். அவரே இந்த அனுபவத்தை மனோ கரனிடம் கூறியிருக்கின்றார்.

விறைப்பான ஒரு அதிகாரி—பளீரென்று இருந்தவர் மனோகரனுக்கு அருகே வந்தார்.

"வாங்க..." என்றார்.

மனோகரன் அவரைத் தொடர்ந்தான்.

இன்னொரு அறை.

அதிகாரி புன்னகையோடு உட்கார்ந்திருந்தார். இது வரை அவன் அவரை சில புகைப்படங்களில் பார்த்திருக்கி றான். கடுகடுத்த முகமும். தீட்சண்யமான பார்வையும்.

"இப்படியே இருக்கட்டுமா?"

கனிவாகக் குரல் வந்தது.

அவன் அவரை நன்றாகப் பார்த்தான். கண்களாலேயே கோணம் பார்த்து திருப்தியடைந்தான்.

"அப்படியே இருங்க....''

அவன் கமெராவோடு அங்குமிங்குமாய் போய் நின்று படங்களாய் எடுத்துத் தள்ளினான். அவரின் புன்னகையை முகத்திலிருந்து கழற்ற முடியவில்லை. அபூர்வமான படங் கள்தான்.

''மனோகரன், என் குடும்பப் போட்டோகூட கொஞ்சம் எடுக்கணும். எடுக்கிறயா?'' மனோகரன் அதிர்ந்து போய்விட்டான். இன்று தான் முதற் சந்திப்பு. அவனைப் பேரிட்டே அழைக்கிறார் ஒவ்வொரு துணுக்கு விஷயத்திலும் எவ்வளவு தனிக்கவனம்.

''எனக்கு அது பெருமையான விஷயம்....''

மனைவி, மகள், மருமகன், பேரக்குழந்தைகள் எல்லோருடனும் நின்று கலகலப்பாக போட்டோ எடுத்துக் கொண்டார். ஐந்து 'பிலிம் ரோல்'கள், குடும்பப் போட்டோ எடுப்பதற்கு மட்டும். இவை அவனுடைய சொந்தப் பணத்தில் வாங்கியவை.

அவர் கேட்டுக் கொண்டபடி, அவருடைய குடும்பப் புகைப்படங்களை மட்டும் எடுத்துக் கொண்டு அவருடைய பங்களாவுக்குச் சென்றான் மனோகரன்.

புகைப்படங்களைப் பார்த்து குழந்தையைப் போல பரவசம் கொண்டார் அவர்.

''பியூட்டி புல்...''

மனோகரன் ஆகாயத்தில் பறந்தான்.

அவர் மீண்டும் புகைப்படங்களைப் பார்க்கத் தொடங்கினார்.

மனோகரன் இன்னொரு கவரை எடுத்தான். அதற்குள் குடும்பப் புகைப்படம் எடுத்ததற்கான பில். மெதுவாக அவரிடம் நீட்டினான்.

பிரித்துப் பார்த்தவரின் முகத்தில் புன்னகை.

''ஆயிரத்தி தொள்ளாயிரத்து எண்பது ரூபா...''

"ஆமா சார்! 'மெட்டீரியல் செலவு' மட்டுந்தான் 'பில்' போட்டிருக்கேன். நான் உங்க அபிமானி...."

அதைக் கேட்டதும் அட்டகாசமாகச் சிரித்தார் அவர்.

"நீ கூட நம்மைப்போல ஆசாமிதாம்பா. நம்ம கடமையிலை கண்ணா இருக்கணும்...."

மனோகரன் மௌனமாயிருந்தான்.

"பில் போட்டுக் கொடுத்திருக்கிறாய். சந்தோஷந்தான். அது உன் கடமை. நான் வாங்கிக் கொள்ளுகிறேன். ஆனால் ஒன்றை நீ மறந்துவிட்டாய். என்னை நீ போட்டோ எடுத்தது உனக்கு எவ்வளவு பெருமையான விஷயம். வாழ்க்கையில் கிடைக்க முடியாத அதிர்ஷ்டம்." ஆங்கிலத்தில் கூறிக்கொண்டு போன அவரின் முகத்திலே சட்டென்று கோபம் சிவந்தது. குரல் உயர்ந்தது.

"போய்யா... போய் உன்னை எங்கிட்ட அனுப்பின அந்தப் பத்திரிகைக்காரன்கிட்ட இந்த 'பில்'லைக் கொடுத்திடு..."

தமிழில் கத்தினார் அவர்.

அவரது சத்தத்தைக் கேட்டதும் அதிகாரிகளும் போலிஸ்காரரும் அங்கே ஓடிவந்தனர்.

மனோகரன் திகைப்பில் உறைந்து போனான்.

(1993)



# மேலோர் வட்டம்

செ. யோகநாதன்